இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 178 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 09 செவ்வாய்க்கிழமை 23.05.2017

முச்சந்தி முரளி



தனக்குத் தனக்கு எண்டால்
தேருக்கும் சுளகு படக்கு படக்கு
எண்டு அடிக்குமாம்...

# வழிநடத்தல் குழுவின் மரதன் அமர்வு இன்று

## ஆரம்பமாகி தொடர்ந்து 4 நாள்களில் 5 அமர்வுகள்

கொழும்பு, மே 23

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை இறுதி செய்வதற்கான தொடர் அமர்வு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்றிலிருந்து தொடர்ந்து 4 நாள்கள் கூடவிருக்கும் வழிநடத்தல் குழு மரதன் ஓட்டமாக 5 அமர்வுகளைத் தொடர்ச்சியாக நடத்தவுள்ளது.

இந்தக் கூட்டத் தொடருடன் இடைக்கால அறிக்கை இறுதி செய்யப்பட்டு, அரசியல் நிர்ணயச் சபையிடம் (நாடாளுமன்றத்தில்) சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது தொடர்பான உறுதிமொழிகள் அரச தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. >> 25

## அனுமதி பெறாத விகாரை மீது நடவடிக்கை

மாகாண சபைக்கு வருகிறது பிரேரணை

யாழ்ப்பாணம் மே 23

நாவற்குழியில் அமைக்கப்படவுள்ள விகாரைக்கு முறையான அனுமதிகள் எவையும் பெறப்படவில்லை என்பதால் அதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுவலியுறுத்தி வடக்குமாகாண சபையில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது.

மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சரான முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திச் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் >> 25

## நாவற்குழி விகாரை கட்டுமானத்தை நிறுத்த உத்தரவு

யாழ்ப்பாணம், மே 23

நாவற்குழியில் விகாரைக்கான தாதுகோபம் அமைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிறுத்துமாறு சாவகச்சேரிப் பிரதேச சபையினால் எழுத்துமூலமான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அனுமதியின்றிச் சட்டவிரோதமான கட்டட வேலைகள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் >> 25



# மங்களவுக்கு நிதி ரவிக்கு அயலுறவு

நேற்று மாறியது அமைச்சரவை, மாரப்பன மட்டுமே புதுமுகம்

கொழும்பு, மே 23

கொழும்பு அரசியலில் நீண்ட காலமாகப் பேசப் பட்டு வந்த அமைச்சரவை மாற்றம் நேற்றுக் காலை நடைபெற்றது. கூட்டு அரசின் முதலாவது அமைச்சரவை மாற்றமாகவும் இது >> 25





## அமைச்சரவையில் மேலும் மாற்றம் விரைவில் வரும்

கொழும்பு, மே 23

பிரதி அமைச்சர்கள் மற்றும் சில இராஜாங்க அமைச்சர்களது பதவிகளும் விரைவில் மாற்றியமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர்களான ரஞ்சன் ராமநாயக்கா, அஜித் பி.பெரேரா இருவருமே இந்தத் தகவலை நேற்று வெளியிட்டனர்.

நீண்ட நாள்களாகப் பேசப்பட்டுவந்த அமைச்சரவை மாற்றம் நேற்று நடைபெற்றது. 9 அமைச்சர்களும், ஒரு இராஜாங்க அமைச்சரும் பதவியேற்றனர். இந்த நிலையில் பிரதி அமைச்சர்கள் மற்றும் சில இராஜாங்க அமைச்சர்களது பதவிகளும் மாற்றப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வெகு விரைவில் இந்த மாற்றங்கள் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது. (உ-5)

## பல்கலை மாணவர் மூவருக்குத் தடை

மோதலில் ஈடுபட்டனர் என குற்றச்சாட்டு

யாழ். மே 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மோதலில் ஈடுபட்ட கலைப்பீட மாணவர்கள் 3 பேருக்குப் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார். >> 25

## வீடு வீடாக பிசி படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 23

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பதிவு >> 25

## அபிவிருத்திக்கான கூட்டுப் பொறுப்பை நிறைவேற்ற ஒன்றிணையுங்கள்: மைத்திரி

கொழும்பு, மே 23

நாட்டின் அபிவிருத்திக்காக கூட்டுப்பொறுப்பை நிறைவேற்ற ஒன்றிணையுமாறு புதிய அமைச்சர்களிடம் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் கீழ் 9 புதிய அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் நேற்றுப் பதவியேற்றனர். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் அவர்கள் பதவியேற்றனர்.

நிகழ்வு தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி >> 25

## மூதாட்டியை அச்சுறுத்தி 15 பவுண் நகை கொள்ளை

உடுவிலில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், மே 23

உடுவிலில் நேற்று அதிகாலை வீடு புகுந்த கொள்ளையர்கள் 15 பவுண் தங்க நகைகள். >> 25

## 9 வருடங்கள் தடுப்பிலிருந்த அரசியல் கைதி விடுதலை

சிறப்பு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, மே 23

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் கடந்த 9 வருடங்களாகத் தடுத்து வைக் கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிக்கு கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை வழங்கியது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெயராம் இராமநாதனுக்கு >> 25

## அமைச்சர் மனோவுக்கு தூதுவிட்ட ஞானசாரர்

தனது கைதைத் தடுப்பதற்காக

கொழும்பு. மே 23

தான் கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்காகப் பொது பல சேனாவின் பொதுச் செய லாளர் அத்தே ஞானசார தேரர் சார்பில் அமைச்சர் மனோ கணேசனிடம் தூது சென்றுள்ளார் மாகாண முதலமைச்சர் ஒருவர். தேரரைக் கைது செய்யுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்த >> 25

# பளை சூடு பற்றி விசாரிக்க ஐந்து பொலிஸ் குழுக்கள்

பூஜித ஜயசுந்தர நடவடிக்கை

கொழும்பு, மே 23

பளை கச்சார் வெளிப் பகுதியில் பொலிஸ் சுற்றுக் காவல் அணி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரிக்க ஐந்து பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. >> 25

## தவறான சிகிச்சை பற்றி 100 முறைப்பாடுகள்

கடந்த ஆண்டில் மட்டும் மருத்துவச் சபையில் பதிவு

கொழும்பு, மே 23

மருத்துவர்களின் தவறான சிகிச்சை தொடர்பில் கடந்த ஆண்டில் மட்டும் 100 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று இலங்கை மருத்துவச் சபை தெரிவிக்கிறது.

கடந்தபல வருடங்களில் இது போன்ற 500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று இலங்கை மருத்துவச் சபையின் >> 25

# முஸ்லிம் தலைவர்கள் மைத்திரியுடன் பேசுவர்

கொழும்பு, மே 23
முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள வன்முறைகள் தொடர்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
பொதுபலசேனா உள்ளிட்ட கடும்போக்கு அமைப்புக்களால் முஸ்லிம் வணக்கத் தலங்கள், வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல் தொடர்ச்சியாகக் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.
இந்தப் பேச்சுக்களின்போது, அரச தலைவரைச் சந்தித்துப் பேசும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காகச் சந்திப்புக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு அமைவாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்திப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளார் எனத் தெரிய வருகின்றது. (த-5)

### நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்ப

# எம்மால் இயலுமான வரை விட்டுக் கொடுத்துள்ளோம்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு



முல்லைத்தீவு, மே. 23
எங்களுடைய நல்லெண்ணத்தை நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்காக எவ்வளவு விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய முடியுமோ அவ்வளவு விட்டுக் கொடுப்புகளைச் செய்துள்ளோம். இதற்குமேல் எம்மால் விட்டுக்கொடுப்புடன் நடக்க முடியாது. இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.
அரச தலைவர் மக்கள் சேவை தேசிய வேலைத்திட்ட நிகழ்வு நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மவாட்டத்தில் உள்ள காணிப்பிரச்சினையைத்தீர்ப்பதற்கு பலசுற்றுப் பேச்சுக்கள் நடத்தியுள்ளோம். பொதுமக்களின் காணிகளைப் பாதுகாப்புத் தரப்பினர் விடுவித்து பொதுமக்கள் அங்கு சென்று குடியமர்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பல கோரிக்கைக்ளை விடுக்கப்பட்டும் இன்னும் அது முழுமை அடையவில்லை. காணாமற் போனவர்கள் உறவினர்களின் போராட்டம்நடைபெற்றுக்கொண்டு உள்ளது.
இந்த புதிய அரசை நாங்கள் எல்லோரும் இணைந்து தான் கொண்டு வந்தோம். போரால் பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் இருந்து எங்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வை எட்டுவதற்காகத் தான் புதிய அரசை கொண்டு வந்தோம். இரண்டுவருடங்கள்கடந்து விட்டன. எங்களுடைய நல்லெண்ணத்தை நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்காக நாங்கள் இதை விட விட்டுக்கொடுப்புடன் நடக்க முடியாது. நேற்று அரச தலைவருடன் எதிர்க்கட்சித் தலைவர் திருகோணமலையில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டார். அரச தலைவர் எதிர்க்கட்சித் தலைவரைப்பக்கத்தில்வைத்துக்கொண்டு உரையாற்றிய விடயம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. காணாமற்போனவர்கள் இருக்கின்றார்கள் என்றால் எங்கே இருக்கின்றார்கள் என்று சொல்லுங்கள் நாங்கள் அவரை தேடிப்பார்க்கின்றோம் என்று அவர் கூறுகின்றார். இது ஒரு அரச தலைவர் சொல்லும் பதில் அல்ல. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்று முப்படைக்கும் பொறுப்பாக உள்ள அரச தலைவர் தான் கண்டுபிடித்துத்தான் சொல்ல வேண்டும்.
நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு தொடர்ச்சியாக நிபந்தனைகள் அற்ற ஆதரவை நாங்கள் இந்த அரசுக்கு வழங்கிக் கொண்டே இருக்கின்றோம். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான் நாங்கள் இந்த காரியங்களைச் செய்து வருகின்றோம் - என்றார். (ற-7)

### கர்ப்பிணிப் பெண் படுகொலை:

# வழக்கைத் திசை திருப்ப முயற்சிக்கப்படுகிறதா?

### சட்டத்தரணி மன்றில் சந்தேகம்

ஊர்காவற்றுறை, மே 23
ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கைத் திசை திருப்பும் முயற்சிகள் இடம்பெறுகின்றனவா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று பாதிக்கப்பட்டோர் நலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கே.சுகாஷ் மன்றில் தெரிவித்தார்.
கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம்.ரியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.
"சந்தேகநபர்கள் இருவரும் கொலை இடம்பெற்ற நேரத்தில் மருதனார்மடம் பகுதியில் நின்றனர். அங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றின் கண்காணிப்புக்கமராவை பரிசோதிப்பதன் மூலம் அதனை உறுதிப்படுத்த முடியும் என்று சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சில மாதங்களுக்கு முன்னர் மன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை பொலிஸார் காணொலிப் பதிவு தொடர்பில் மன்றில் அறிக்கை எதனையும் சமர்ப்பிக்கவில்லை.
அதேவேளை இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தனக்குச் சில தகவல்கள் தெரியும். அதனை நீதிமன்றில் தெரிவிக்கவேண்டுமாயின் 5 இலட்சம் ரூபா பணம் தர வேண்டும் என இந்த வழக்கின் சந்தேகநபர்களிடம் சிறையில் வைத்து ஜெகதீஸ்வரன் என்பவர் பேரம் பேசியதைத் தான் கேட்டேன் எனப் பிறிதொரு குற்றத்துக்காக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு உள்ள மகிந்தன் என்பவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார். ஆனால் ஜெகதீஸ்வரன் பேரம் பேசியதாகக் கூறப்படும் காலப்பகுதியில் அவர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கவில்லை எனத் தெரியவருகின்றது. சிறையில் ஜெகதீஸ்வரன் இல்லாத காலப் பகுதியில் சிறைக்குள் பேரம் பேசப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இது வழக்கைத் திசை மாற்றும் நடவடிக்கையாக இருக்கும் எனச் சந்தேகம் எழுந்துள்ளது" என்று மன்றில் தெரிவித்தார் சட்டத்தரணி கே.சுகாஷ்.
பாதிக்கப்பட்டோர் நலன்சார் சட்டத்தரணியால்முன்வைக்கப்பட்டவிண்ணப்பத்தை விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். வழக்கை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், அன்று வரையில் சந்தேகநபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார்.

**பின்னணி**

ஊர்காவற்றுறைப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஒரு பிள்ளையின் தாயும் ஏழு மாத கர்ப்பிணியுமான ஞானசேகரன் ஹம்சிகா (வயது 27) என்பவர் கொடூரமாக அடித்துப் படுகொலை செய்யபட்டார்.
இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் சகோதர்கள் இருவர் அன்றைய தினம் மாலை மண்டைதீவுச் சந்தியில் உள்ள ஊர்காவற்றுறை காவலரணில் கடமையில் இருந்த பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். (வ-37)

# விடை பெற்றார் ரவி



கொழும்பு, மே 23
அயலுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நிதி அமைச்சுக்கு நேற்றுச் சென்று அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.
தனது பதவிக் காலத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்காகத் தன்னுடன் இணைந்து பணியாற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும் இதன் போது அவர் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.
சுமார் இரண்டரை வருடங்கள் நிதி அமைச்சுப் பதவியிலிருந்த ரவி கருணாநாயக்க, நாட்டின் அபிவிருத்திக்காகப் பல்வேறு வகையில் ஒத்துழைப்புக்களை வழங்கினார் என்று அதிகாரிகள் புகழாரம் சூட்டினர். ஆசியாவின் சிறந்த நிதி அமைச்சருக்குரிய விருதையும் அவர் அண்மையில் பெற்றார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (த-5)

# தலைவர் பிரபாவை எனக்கு அறிமுகம் செய்தவர் அமிர்

### கூறுகிறார் குமரன் பத்மநாதன் (கே.பி)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமே எனக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அறிமுகப்படுத்தினார் என்று தெரிவித்துள்ள குமரன் பத்தமநாதன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவுமாறு இந்திய உளவுப் பிரிவான 'றோ'வுக்கு இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி பணித்திருந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
வியன் என்னும் பன்னாட்டு ஊடகத்துக்கு வழங்கியுள்ள பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அப்போது அரசியல் சூழ்நிலைகள் மிகவும் மோசமாக காணப்பட்டன. தமிழர்களுக்கு எதிராகக் கலவரங்கள் இடம்பெற்றன. மாணவர்கள் தரப்படுத்தலை எதிர்கொண்டனர். எங்கள் அரசியல் தலைவர்களின் உணர்வைத் தட்டியெழுப்பும் உரைகளும் காணப்பட்டன. இவை யாவுமே என்னை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைவதற்குத் தூண்டின. முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கமே, பிரபாகரனை நான் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.
இந்தியாவின் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியே விடுதலைப் புலிகளுக்கு உதவுமாறு 'றோ' அமைப்பைக் கேட்டுக்கொண்டார். மேலும் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமசந்திரன் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கினார்.
அந்தக் காலப் பகுதியில் கப்பல் நிறுவனத்தை நடத்துவது கஷ்டமான விடயமல்ல. எவர் வேண்டுமானாலும் நடத்தலாம். மேலும் ஆயுதங்களை வாங்குவதற்கான பல சந்தைகள் காணப்பட்டன. நான் தமிழ்நாட்டுக்கு ஆயுதங்கள் அடங்கிய கொள்கலன்களை அனுப்புவேன். எம்ஜி.ஆர் அவற்றைத் துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டு செல்ல உதவுவார்.
தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் ஐரிஸ் விடுதலை இராணுவம் மற்றும் பலஸ்தீன விடுதலை இயக்கத்திடமிருந்தே தற்கொலைப் போராளிகள் குறித்த எண்ணத்தைப் பெற்றார் - என்றார். (த-5)

# இனவாதச் செயல்களை உடன் கட்டுப்படுத்துங்கள்

### ரணிலிடம் ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

கொழும்பு, மே 23
நாட்டில் மீண்டும் இனவாதச் செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்துள் ளார்.
தலைமை அமைச்சருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டில் ஏற்பட்டுள்ள இனவாதச் சூழல் முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் பதற்றமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. ரம்ழான் மாதம் நெருங்கும் வேளை இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளமை முஸ்லிம்களின் மத அனுட்டான விடயங்களுக்கு மிகவும்பாதிப்பாக அமையும்.
இனவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கூட்டு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் கூட்டரசுக்குப் பொறுப்புள்ளது. தமது மத அனுட்டானங்களை நிம்மதியாகவும் அமைதியாகவும் முன்னெடுக்க வேண்டும். அதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே முஸ்லிம்கள் கடந்த தேர்தல்களில் தமது வாக்குகளைப் பயன்படுத்தினர். அதற்கமைய ஆட்சியில் அமர்த்தப்பட்ட கூட்டரசு குறுகிய காலம் அதனைச் சரிவர நிறைவேற்றியது.
மீண்டும் இனவாதச் செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இது முஸ்லிம்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ளது. இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி இனவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது. (த-10)

# விக்கியின் தாளத்துக்கு அரசு ஆடாது

## சரத் பொன்சேகா விசனம்

கொழும்பு. மே 23
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தாளத்துக்கு அரசு ஆடமுடியாது என்று அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கில் இருந்து படையினரை வெளியேற்றும் வீண் முயற்சியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார்.



அவர் அரசிடம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார். அவரது அழுத்தங்களுக்கு நாம் பணிய மாட்டோம். ஒவ்வொருவரும் போடுகின்ற தாளத்துக்கு அரசால் ஆட முடியாது. வடக்கில் நிலை கொண்டுள்ள படையினர் விலக்கிக் கொள்ளப்படமாட்டார்கள்.

பளையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை ஊடகங்கள் தான் வேறு விதமான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றன. ஆனால் இதே போன்ற துப்பாக்கிச் சூடுகள் பிலியந்தலவிலும், களுத்துறையிலும் இடம்பெற்றிருக்கின்றன. இது ஒரு வழக்கமான சம்பவம் தான் - என்றார். (த-5)

## சைட்டத்துக்கு மாணவரை சேர்ப்பது இடைநிறுத்தம்

கொழும்பு. மே 23
மாலபே (சைட்டம்) தனியார் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சைட்டம் பல்கலைக்கழகத்தின் தலைவர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிதாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது குறித்துக் கல்வி அமைச்சு எமக்குச் சில அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கின்றது.

அத்துடன் மாலபே தனியார் வைத்தியசாலையை அரசிடம் ஒப்படைக்கும் நோக்கில் அதன் ஆளணி வளம் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பில் அண்மையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன என்றார். (த-5)

## புங்குடுதீவு மாணவியின் கொலை வழக்கு இன்று

யாழ்ப்பாணம்.மே.23
கூட்டு வன்கொடுமையால் கொல்லப்பட்ட புங்குடுதீவு மாணவியின் வழக்கு இன்று நடைபெறவுள்ளது.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மேல் மன்றுக்கு விசாரணைக்காக வந்தது மன்றின் நீதிபதி தவிர்க்கமுடியாத காரணத்தால் மன்றுக்கு வரமுடியவில்லை என்ற காரணத்தால் இன்று வழக்கின் விசாரணைகள் நடைபெறும் என மன்றின் பதிவாளரால் திகதியிடப்பட்டது.

கடந்த வழக்கில் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி குறித்த நபர்களுக்கு பிணைகோரி விண்ணப்பம் செய்தார். ஆவணங்கள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன இன்னும் ஒரு கிழமைக்குள் அவற்றை மன்றுக்கு சமர்ப்பிப்பேன் என்று அரசசட்டவாதி குறிப்பிட்டார். அதையடுத்து வழக்குத் திகதியிடப்பட்டது. அதேவேளை கடந்த 12ஆம் திகதி இந்த வழக்கின் குற்றப்பகர்வுப்பத்திரம் மேல் மன்றுக்கு கிடைத்தது. (ற-12)

## பிரேமதாஸவின் மகளுக்கு போலி நாணயத் தாள்கள் வழங்கியவருக்குச் சிறை

கொழும்பு, மே 23
முன்னாள் அரசதலைவர் ஆர். பிரேமதாஸவின் மகளான துலாஞ்ஜலி ஜெயக்கொடிக்கு போலி நாணயத்தாள்களை விநியோகித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் திகதி கொழும்பு பார்க் வீதியில் போலி நாணயத் தாள்களை வைத்திருந்தமை மற்றும் அவற்றை அச்சிடப் பயன்படுத்திய இயந்திரத்தை அதுல்கோட்டைப் பகுதியில் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தன.

குற்றவாளி 5000 ரூபா போலி நாணயத் தாள்கள் 503 ஐ முன்னாள் அரச தலைவரின் மகளுக்கு வழங்கியுள்ளார். அதன் பகுதியை துலாஞ்ஜலி தனியார் வங்கியொன்றில் வைப்பிலிடச் சென்றவேளையே அவை போலியானவை என்று அறியக் கிடைத்துள்ளது. இதன் பின்னர் மேற்படி குற்றவாளி கைது செய்யப்பட்டிருந்தார். குற்றத்தை ஒப்புக் கொண்ட இவருக்குக் கொழும்புமேல்நீதிமன்றத்தால் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. (த-5)

## கைதான பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பிணை

கொழும்பு. மே 23
நீதிமன்ற உத்தரவுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிக்கு உட்பட 8 பல்கலைக்கழக மாணவர்களையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த கொழும்பு முதன்மை நீதிவான் லால் ரணசிங்க, அவர்கள் எந்தக் காரணம் கொண்டும் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை (சைட்டம்) மூட வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் 14 ஆயிரம் பேர் கொழும்பில் நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்துக்குக் கொழும்பு முதன்மை நீதிவான் தடைவிதித்தார். தடையுத்தரவை மீறி அவர்கள் கொழும்பில் போராட்டம் நடத்த முற்பட்டபோது மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த பிக்கு ஒருவர் உட்பட எட்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு அவர்களது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் விடுத்த வேண்டுகோளுக்குக் கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் ஆட்சேபம் தெரிவிக்காததால் சந்தேகநபர்களைத் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்த நீதிவான் அவர்கள் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். (ற-5)

## சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபர் கைதானார்

கிளிநொச்சி மே 23
கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தினார் எனச் சந்தேகிக்கப்படும் நபரைக் கைது செய்துள்ளதாகக் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்ன தெரிவித்தார்

சிறுமி ஒருவரை நேற்று முன்தினம் கோணாவில் பகுதியில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனச் சந்தேகிக்கப்படும் நபரைக் கைது செய்துள்ளதாகவும், ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் காதல் தொடர்பே காரணம் எனத் தெரியவந்திருப்பதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் மேலும் கூறினார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், பரிசோதனை அறிக்கை வந்த பின்னரே மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-6-101)

## வெலிங்டன் சந்திக்கு அருகில் உணவு விடுதி

### மதுவரித் திணைக்களம் இன்னமும் அனுமதியில்லை

யாழ்ப்பாணம், மே 23
யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்திக்கு அருகில் உணவு விடுதி ஒற்றைப் (ரெஸ்ரோன்ட்) புதிதாகத் திறப்பதற்குரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுற்றுலாத்துறையின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இதற்குரிய ஒப்புதல் கடிதங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் மதுவரித் திணைக்களத்தின் அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணச் பிரதேச செயலகத்தின் ஊடாக அனும்தி கோரி விண்ணப்பிக்கப்பட்டது. மக்கள் அதற்கு எதிர்ப்புத் வெளியிட்டிருந்தனர். எதிர்ப்புக்களைத் தொடர்ந்து வேறு இடத்துக்கு (தற்போது அமைக்கமுயற்சிக்கும் பிரதேசம்) மாற்றம் செய்து மீளவும் அனுமதிக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையின் கீழ் இதனைத் திறப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் உணவு விடுதி அமைப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது. ஆனாலும் இதுவரையில், மதுவரித் திணைக்களத்தால் அனுமதி வழங்கப்படவில்லை.

புதிதாகத் திறக்கப்படவுள்ள உணவு விடுதியில் இருந்து 500 மீற்றருக்கும் குறைவான தூரத்திலேயே இந்து ஆலயமான பெருமாள் கோவில், பாடசாலை என்பன அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"புதிய விடுதி திறப்பது தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரியப்படுத்தப்படவில்லை." என்று யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களுள் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.(ற-5.101)

## ஊழல் விசாரணை அறிக்கையை உடனே பகிரங்கமாக்குங்கள்

### வடக்கு முதலமைச்சரிடம் அமைச்சர் டெனீஸ்வரனும் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 23
வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் விசாரணை அறிக்கையை முதலமைச்சர் மக்கள் அறியும் வகையில் பகிரங்கப்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் நால்வர் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு விசாரணை நடத்தியது. தற்போது அந்த விசாரணை அறிக்கை முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சர்கள் தொடர்பில் சபையில் பகிரங்கமாக விவாதிக்கப்பட்டு குற்றச்சாட்டுக்களும் பகிரங்கமாகவே முன்வைக்கப்பட்டிருந்தன. இவை பத்திரிகைகளிலும் வெளிவந்தன. எனவே அந்த விசாரணை அறிக்கையை முதலமைச்சர் பகிரங்கப்படுத்த வேண்டும்.

நான் உட்பட நான்கு அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன. இதற்கமைய நான்கு பேரும் விசாரணைக் குழுவின் முன்பாகத் தோன்றி விளக்கம் அளித்தோம்.

இதனால் விசாரணையில் என்ன நடந்தது என அறியும் உரிமை எமக்கும் உண்டு. இதனையே மக்களும் எதிர்பார்க்கின்றனர்.- என்றார். (த-101)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017



ஐந்தாம் திருவிழா பிரதோஷ உற்சவம்
இன்று (23.05.2017) செவ்வாய்க்கிழமை
நண்பகல் 11.15 மணி
மகரம், அன்னப்பட்சி வாகனங்களில் சுவாமி வீதியுலா
மாலை 7.00 மணி
கஜசிங்கம், இரட்டைக்குதிரை வாகனங்களில் சுவாமி வீதியுலா


# அமெரிக்க உதவிச் செயலர் ரணிலுடன் நேற்றுப் பேச்சு

கொழும்பு, மே 23

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பதில் உதவிச் செயலர் வில்லியம் பில்ரொட் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அவர், நேற்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புடன் இணைந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, அமெரிக்கா - இலங்கை இடையிலான உறவுகள் தொடர்பாகவும், இலங்கையின் மறுசீரமைப்பு செயல்முறைக்கான அமெரிக்காவின் ஆதரவு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக, அமெரிக்கத் தூதரகத் தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.



அதேவேளை, அயலுறவு அமைச்சராக இருந்து நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மங்கள சமரவீரவையும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான பதில் உதவிச் செயலர் வில்லியம் பில்ரொட் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதேவேளை, அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தனது கீச்சகப் பதிவு ஒன்றில், மங்கள சமரவீரவின் தலைமைத்துவம் மற்றும் அவர் அயலுறவு அமைச்சராக வலுவாகப் பதவியில் இருந்த காலத்தில், இலங்கையுடனான அமெரிக்காவின் இரு தரப்பு உறவுகளில் பல சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தன என்று குறிப்பிட்டுள்ளார். (த)

## மிதிவெடி அகற்றும் பணியை பார்வையிட்டது ஜப்பான் குழு



கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி, முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் இடத்தின் களநிலை தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டனர் ஜப்பானிய குழுவினர்.

ஜப்பானியத் தூதரக அதிகாரிகள் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சி முகமாலை பகுதிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். அங்குகள நிலைமைகளை அறிந்து கொண்டதுடன் குறித்த பகுதியில் ஜப்பானிய மக்களின் நன்கொடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

வட போர்முனை என அழைக்கப்படும் குறித்த பகுதியில் நீண்ட காலமாக இராணுவம் - புலிகள் இடையே பெரும் போர் இடம்பெற்றமையால் அதிகளவான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

மிகவும் ஆபத்தான கண்ணிவெடிகள் குறித்த பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வருவதாக ஜப்பானிய தூதரக அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

(த-6)

# அமைச்சரவை மாற்றம் கூட்டு அரசின் பலவீனம்

## மகிந்த கடுமையாகச் சாடல்

கொழும்பு, மே 23



கூட்டு அரசின் அமைச்சரவை மாற்றம் அரசின் பலவீனத்தையே வெளிப்படுத்தியுள்ளது. உறுதியாக அரசு முன்செல்ல முடியவில்லை என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கூட்டு அரசின் ஆட்சி மாற்றம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஊழல் மோசடிக்காரர்களைத் தொடர்ந்தும் அமைச்சுப் பதவிகளில் தக்க வைத்துக் காப்பாற்றுகின்றனர் என்றும் அவர் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, அமைச்சரவையில் மாற்றம் செய்வது நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது. அரசின் அடிப்படை பொருளாதாரக் கொள்கைகளில் அமைச்சரவை மாற்றத்தின் ஊடாக எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. உரிய பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றாது அமைச்சுப் பதவிகளில் நபர்களை மாற்றுவதில் எவ்வித பயனும் கிடையாது என்று, கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார். (த)

# உலக வங்கியின் திட்டதுக்கு வடக்கில் பணிப்பாளர் தேர்வு

யாழ்ப்பாணம், மே 23

உலக வங்கியின் மாகாண விவசாயத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண திட்டப் பணிப்பாளர் தேர்வுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று வடக்குப் பிரதம செயலாளர் செயலகத்தில் இடம்பெற்றது.

5 மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள மாதிரி விவசாயத் திட்டங்களுக்காக உலக வங்கி மொத்தமாக 125 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ள நிதியானது 5 மாகாணத்துக்கும் தலா 25 மில்லியன் டொலர் வீதம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

குறித்த நிதியில் ஒவ்வொரு மாகாணத்திலும் 3 ஆண்டு திட்டப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கான பணியாளர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. மாகாண மற்றும் மாவட்டப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், அலுவலர்கள் எனச் சகல தரத்துக்குமான விண்ணப்பங்களும் கோரப்பட்டன. இதில் மாகாணப் பணிப்பாளருக்குக் கோரப்பட்ட விண்ணப்பத்துக்கான நேர்முகத் தேர்வே நேற்று இடம்பெற்றது.

இதற்கு 16பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் 12பேரே நேர்முகத் தேர்வில் தோற்றியிருந்தனர். (த-101)

## திருட்டுக் குற்றச்சாட்டு; சந்தேகநபருக்கு மறியல்

திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றப் பதில் நீதிவான் எஸ்.திருக்குமரநாதன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

திருகோணமலை பன்குளம் பகுதியில் வீடொன்றை உடைத்து 46 ஆயிரம் ரூபா பெறுமதியான நகையைத் திருடிய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

“குறித்த நபர் பன்குளம் பகுதியிலுள்ள பெண்ணொருவரின்வீட்டில் கதவை உடைத்து நகைதிருடியதைப் பக்கத்து வீட்டார் அவதானித்தனர், அதனையடுத்து பொலிஸ் நிலையத்துக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினர். உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், வீட்டைச்சுற்றித் தேடுதல் மேற்கொண்டனர். மறைந்திருந்த திருடன் தப்பியோட முற்பட்ட போது, அந்த வீட்டில் பாழடைந்த கிணற்றுக்குள் தவறி விழுந்தார். குறித்த நபரையும், அவரிடமிருந்து திருடப்பட்ட நக்கையையும் பொலிஸார் கைப்பற்றினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10-45)

# பஸ் கட்டணங்கள் ஜூலையில் உயரும்

கொழும்பு, மே 23

தனியார் பேருந்துக் கட்டணங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளதாகத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

வருடாந்தம் இடம்பெறும் தனியார் பேருந்துக் கட்டண சீர்திருத்தங்களுக்கு அமைவாகவே கட்டண அதிகரிப்பு இடம்பெறவுள்ளது. குறுந்தூரப் பேருந்துக் கட்டணமான ஒன்பது ரூபா, பத்து ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. ஏனைய கட்டண திருத்தங்கள் சிறு தொகையினால் அதிகரிக்கப்படவுள்ளன - என்றார். (த-5)

## மருந்தகங்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆங்கில மருந்து வகைகளை மொத்தமாக விற்பனை செய்யும் சகல மருந்தக உரிமையாளர்களுக்கும், சகல ஆங்கில மருந்து தொடர்பான விற்பனைப் பிரதிநிதிகளுக்குமான முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் சகலரும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(த-4)

# மணல் அகழ்வதற்கு எதிர்ப்பு; செங்கலடி மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு.மே 23

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச எல்லைக்குள் மண் அகழ்வதற்கான அனுமதியை உடனடியாக நிறுத்து மாறு கோரி பிரதேச மக்கள், செங்கலடி பிரதேச செயலக முன்றிலில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலுப்படிச்சேனை மற்றும் வேப்பவெட்டுவான் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் செங்கலடி - பதுளை வீதியை அண்மித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது,

இலுப்படிச்சேனைப் பிரதேசத்தை அண்டியுள்ள பகுதிகளில் அளவுக்கு அதிகமாக, சட்டவிரோதமான முறையில் மணல் அகழப்படுகிறது. அதனால் ஆறு பெரிதாகி ஆழம் அதிகரிக்கிறது. நிலம் மற்றும் குடியிருப்புகள் அழிவடைகின்றன, மழை காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. அகழப்படும் மண்ணைக் கனரக வாகனங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றது. அதனால் வீதிகள் சேதமடைவதுடன், வீதியில் செல்லும் கால்நடைகளும் விபத்துக்குள்ளாகின்றன. பெண்கள், குழந்தைகள் வீதிகளில் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக மணல் கொண்டு செல்வதற்கு, காவல் அரண்களிலுள்ள பொலிஸார் இலஞ்சம் பெறுகின்றனர் - என்றனர்.

(ஐ-47)

## எம்.ஐ.கிறீன் மிளகாய் விதைக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,மே 23

எம்.ஐ.கிறீன் இன மிளகாய் விதைகளுக்குக் குடாநாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டதால் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எம்.ஐ.கிறீன் இன மிளகாய் விதைகள் தனியார் விற்பனை நிலையங்களில் இருந்தாலும் அவை முளைதிறன் அற்றுக் காணப்படுகின்றன.

முளைதிறன் கூடிய எம்.ஐ.கிறீன் மிளகாய் இன விதைகளை விவசாய திணைக்களம் விரைவாக வழங்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த எம்.ஐ.கிறீன் மிளகாய் விதைகள் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்திடமும் கையிருப்பில் இல்லை என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

(த-17)

# தமிழரின் கலாசாரத்தைப் பாதுகாப்பதில் தொல்பொருள் திணைக்களம் அசமந்தம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் மே 23

பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்தம் சார்ந்த கட்டடங்கள் அமையும்போது மட்டும் தங்களின் கடமைகளைச் செய்யும் தொல்பொருள் திணைக்களம் தமிழர்களின் வரலாற்றுச் சான்றான மந்திரி மனை போன்ற கலாசாரக் கட்டடங்களைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டுவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றம் சாட்டினார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணத்தில் உள்ள மந்திரிமனைக் கட்டடத்தை அபிவிருத்தி செய்வதில் பல சிக்கல்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நகர அபிவிருத்தித் திட்டத்தின்போது மந்திரிமனையை அபிவிருத்தி செய்வதில் பெரும் சிக்கல்கள் உள்ளன. மந்திரிமனை உள்ள காணி தங்களுக்குச் சொந்தம் எனத் தெரிவித்து கொழும்பு மற்றும் யாழ்ப்பாண நீதிமன்றங்களில் சிலர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது. தனியாருக்குக் காணி உரிமம் உள்ளது என்பதாலும், தம்மிடம் காணி உரிமம் இல்லை என்பதாலும் தாம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலமை காணப்படுவதாகத் தொல்பொருள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.


இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,

பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த எச்சங்கள் போன்றவற்றுக்கு எதாவது பிணக்குகள் இருந்தால் உடனடியாகத் தீர்வு காணும் உங்கள் திணைக்களம் தமிழர்களின் அடையாளங்களைப் பாதுகாக்க மட்டும் தயங்குவது ஏன் எனக் கேள்வி எழுப்பினார்.

அதன் பின்னர் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் ஊடாக குறித்த நிலத்துக்கான பணத்தை உரிமையாளர்களுக்குக் கொடுத்து அந்த காணியைச் சுவீகரிக்க முடியும். அல்லது நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றால் அந்தப் பணத்தை நீதிமன்றில் நீங்கள் செலுத்தி அந்த நிலத்தைச் சுவீகரிக்க முடியும் எனவே இதனை உடனடியாகச் செய்யுங்கள் - என்றார்.

காணி சுவீகரிக்கப் பணம் இல்லை என்றால் அடுத்து முன்மொழியப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக தனியாக நிதியை ஒதுக்குங்கள். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கதைத்து ஒழுங்கு செய்யுங்கள் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவித்தார். (த-8)



# மஸ்ஜித் சேவைக் குழுவின் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாண மாவட்ட மஸ்ஜித் சேவைக் குழுவின் ஏற்பாட்டில் 17 வயது தொடக்கம் 25 வயது வரையிலான இளைஞர்களுக்கான கல்வி மற்றும் தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் வழிகாட்டுதலின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இளைஞர்கள் தமது எதிர்காலத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டல், தலைமைத்துவத்திறன் வளர்ச்சி, தொழில்சார் வழிகாட்டல் மற்றும் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு சுயமாகத் தீர்வு காணக்கூடிய வகையிலான வழிகாட்டுதல்கள் போன்றன இதில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் பிரதான வளவாளர்களாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் சமூக சேவைகள் துறையின் ஒருங்கிணைப்பாளர் அல்செய்க் எம். எச். எம். பவாஸ், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் வாலிபர் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் அல்செய்க் நுஸ்ரத் நௌபல் ஆகியோர் பங்கேற்றனர். (த-10)

# அனுமதியில்லாமல் ஆடு கொண்டு சென்றோர் கைது

யாழ்ப்பாணம், மே 23

அனுமதியில்லாமல் ஆடு கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கட்டுவன் பகுதியில், முச்சக்கரவண்டியில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்டை கொண்டு சென்ற இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குக் குறித்த ஆடு விற்பனை செய்யப்பட்டுள்ளது. உரிமையாளர் ஆட்டை முச்சக்கர வண்டியில் கொண்டு சென்றுள்ளார். ஆயினும் விற்பனை செய்தமைக்கான ஆவணம் எதுவும் அவரிடம் இல்லை. இதனாலயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் காங்கேசன்துறைப் பொலிஸார் மேலும் கூறினர். (த-10-26)

# கவிதை ஓவியத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், மே 21

மானியூ ர் ரட்ணேசின் தூளி கவிதை ஓவியத் தொகுப்பு வெளியீடு எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார் என யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (த)

# நல்லிணக்க அமைச்சின் செயலமர்வு

யாழ்ப்பாணம் மே 23

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சின் ஊடாகப் பாடசாலையில் சமய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் இன்றையதினம் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-8)



# ஜதுரூஸ் மகாம் பள்ளிவாசல் 27 வருடங்களின் பின் திறப்பு


யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணத்தில் 27 வருடங்களுக்குப் பின்னர் ஜதுரூஸ் மகாம் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலப் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குறித்த பள்ளிவாசல் யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் இணைந்து மேற்கொண்ட புனரமைப்பின் பின்னர் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி உலமா கிளைச் சபைத் தலைவர் சுபியான் மௌலவி உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர். (த-21)

# வாழைப்பழத்தின் விலை குடாநாட்டில் திடீர் வீழ்ச்சி



யாழ்ப்பாணம், மே 21

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடிரென வீழ்ச்சியடைந்ததை அடுத்துச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மாம்பழம், பலாப்பழம், பப்பாசிப்பழம் போன்றவற்றின் காலம் ஆரம்பித்துள்ளது. இவை சந்தைகளுக்குத் தாராளமாக வந்து சேர்கின்றன.

இதனால் வாழைப்பழத்தின் விற்பனை வீழ்ச்சியடைந்திருப்பதாக செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

கதலி வாழைப்பழத்தின் விலை சடுதியாகக் குறைந்துள்ளது.

ஒரு கிலோ கதலிப் பழம் 25 ரூபாவாக விற்கப்படுகின்றது.

நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தைக்குப் போதியளவு வாழைக்குலைகள் வந்து சேர்கின்றன. நீர்வேலி, கோப்பாய், நவக்கிரி, சிறுப்பிட்டி, உரும்பிராய், ஊரெழு, இடைக்காடு, புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களில் இருந்தே அதிகளவான வாழைக்குலைகள் வருகின்றன.

வாழைக்குலை விற்பனை வீழ்ச்சியைப் பயன்படுத்தித் தென்பகுதிக்கு அதிகளவான வாழைக்குலைகள் வாகனம் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# சாலை ஓரங்களில் குப்பை கொட்டுவோர் மீது வழக்கு

தென்மராட்சி, மே. 23

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரங்களில் குப்பை கொட்டும் பொதுமக்கள் மீது வழக்குத் தொடரும் பணிகள் சாவகச்சேரிப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாலையோரங்களில் குப்பை போடுவது தடை செய்யப்பட்டுள்ளது எனவும், குடியிருப்பாளர்கள் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய கழிவுப் பொருள்களை மட்டும் சாலையோரங்களில் பாதுகாப்பாக வைக்குமாறும், ஏனைய கழிவுப் பொருள்களை வளவுக்குள் ஓரிடத்தில் குவித்து வைத்து நகர சபை குப்பை அகற்றும் வாகனங்கள் வரும்வேளை அவற்றை ஏற்றிவிடுமாறும் துண்டுப் பிரசுரம் மூலம் கடந்த வாரம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தலைமைக் காரியாலய பரிசோதகரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் சாலையோரங்களில் வாழை மரக் குற்றிகள் வேலிகளில் வெட்டப்பட்ட கழிவுப் பொருள்கள் தென்னோலைகள் போன்ற கழிவுப் பொருள்களைக் கொட்டுவோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுமென அறிவித்திருந்தார்.

இதன் பின்னர் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரிக் கோயிற்குடியிருப்புப் பகுதியில் இரு இடங்களில் சாலையோரங்களில் குப்பை கொட்டிய இருவர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (த-9)



## காணாமற் போனோரைத் தேடி
# கிளிநொச்சியில் 92 நாள்களையும் கடந்தது போராட்டம்

கிளிநொச்சி, மே 23
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுக்கும் கவனவீர்ப்புப் போராட்டம் 92 ஆவது நாளாகவும் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி இரவு பகல் பாராது தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்ததாவது, "நாள்கள் நகர்ந்த வண்ணம் உள்ளன. இன்னும் ஒரு வாரத்துக்குள் சாதகமான பதில் கிடைக்காதுவிடில் 100 ஆவது நாள் போராட்ட வடிவத்தை மாற்றி, வடக்குக் கிழக்கைச்சேர்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் பெரும் போராட்டத்தை முன்னெடுப்போம்" -என்றனர். (ஐ-6)

## கரவெட்டியில் இன்று நடமாடும் சேவை

கரணவாய் மே 23
கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான பிறப்புக்களைப் பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பயன்பெற விரும்புவோர் பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ், திருமணப் பதிவுச் சான்றிதழ் மற்றும் சகோதரர்களின் பிறப்புச் சான்றிதழ்கள் என்பவற்றைச் சமர்ப்பித்து இதுவரை காலமும் பதிவு செய்யப்படாத பிறப்புக்களைப் பதிவு செய்து கொள்ளலாம் எனக் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீமோகனன் அறிவித்துள்ளார். (த-108)

## நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம், மே 23
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களிலும் உள்ள நிறுவைகள் , அளவைகள் மற்றும் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் இன்று செவ்வாய்க்கிழமை, 25ஆம் திகதி வியாழக்கிமை மற்றும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை ஆடிய பாதம் வீதி , திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் நடைபெறும் எனப் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (த-37)

## குடியரசுதின நினைவு கூரல்

இலங்கைக் குடியரசு தினத்தை நினைவு கூரும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் குடியரசு தினச் சிறப்புரைகள் இடம்பெற்றன. நிகழ்வில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது, 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியிலிருந்து இலங்கை பிரிட்டன் காலனித்துவத்திலிருந்து மீண்ட போதிலும், தொடந்தும் பிரிட்டன் அரசின் கிரீடத்தின் கீழ், டொமினிக் நிலமையுடைய சுதந்திரமொன்று மட்டும் உரித்தாக இருந்தது. ஆனால் 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்புடன் இலங்கை மக்களுக்குப் பொறுப்புக் கூறுகின்ற முழுமையான இறைமையுடைய மற்றும் சுதந்திர அரசாக மாறியது. அதனால் நாட்டு மக்களுக்குப் பல வரப்பிரசாதங்கள் கிடைத்தன" -என்றார். (ஐ-35)



## கலச சங்காபிஷேகம்

வரணி, மே 23
வரணி வடக்கு கும்பிட்டான் புலம் கற்பகப்பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி நவோஸ்திரசகஸ்ர கலச சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும்.

இன்றைய தினம் பிள்ளையாருக்குக் கலச சங்காபிஷேகம், தீபாராதனை, சிறப்புப் பூசை இடம்பெற்று மகேஸ்வர பூசை இடம்பெறும்.

சங்காபிஷேகம் பிரதமகுரு சுன்னாகம் சிவப்பிரம்ம சிறி கணேச சபாபதி குருக்கள் தலைமையில் இடம்பெறும். (த-122)

## மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், மே 23
மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை நாளை மறுதினம் வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் குருபூசை நிகழ்வு மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அமைந்துள்ள ஆலயத்தில் மார்க்கண்டு சுவாமிகள் சபையின் நிறுவுனர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (த)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 60 | 100 |
| கத்தரி | 120 | 120 | 120 | 140 |
| கரட் | 240 | 250 | 240 | 180-320 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 120 | 80 | 80 | 120 |
| பாகல் | 170 | 200 | 160 | 200 |
| கருணைக்கிழங்கு | 100 | | | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 220 | 280 | 250 | 240 |
| பூசணி | 50 | 60 | 50 | 80 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 |
| கீரை | 30 | 40 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 200 | 250 | 280 | 200 |
| புடோல் | 120 | 80 | 100 | 100 |
| கோவா | 140 | 160 | 200 | 180 |
| வெண்டி | 120 | 120 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 220 | 180 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | | 160 | 140 |
| இராசவள்ளி | 200 | - | 280 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 140 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 900 | 1000 | 900 |
| நண்டு | 400 | 300 | 500 | 400 |
| கணவாய் | 600 | 800 | 800 | 800 |
| பாரை | 600 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 500 | – |
| விளை | 600 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 500 | 450 | – |
| கும்பிளா | 500 | 500 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 350 | 500 |
| ஒரா | 300 | 400 | 450 | 500 |
| திரளி | 200 | 200 | 200 | 150 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 350 | – | 400 | 400 |
| மதனம் | 200 | 200 | 350 | 500 |
| கொய் | 150 | 80 | 80 | 100 |
| பாலை | 250 | 150 | 600 | 500 |
| வாழை | 150 | – | 400 | – |




பெண்களுக்கான சாறி புறோச்சுக்கள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவற்றை பஞ்சாபி உடுப்புக்களோடும் அணிந்து கொள்ளலாம். இவை 950 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



## மாணவர்கள் கவனவீர்ப்பு

வவுனியா, மே 23
பாடசாலைக்கு ஆசிரிய ஆளணியையும், போதிய பௌதீக வளத்தையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரி வவுனியா, இலுப்பைக்குளம் அடைக்கல அன்னை பாடசாலை மாணவர்களும், அவர்களின் பெற்றோரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
நேற்றுக்காலை பாடசாலைக்கு முன்பாக பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் அமைதியான முறையில் கவனவீர்ப்பு நடத்தினர். தங்கள் கோரிக்கைகள் தொடர்பாக எவரும் கவனமெடுக்காதுவிட்டால் கவனவீர்ப்புத் தொடரும் என்று அவர்கள் தெரிவித்தனர்.
அங்கு வந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் அவர்களுடன் கலந்துரையாடினார்.
வவுனியா தெற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் பாடசாலைக்குச் சென்று அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடினார். சாதகமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-402)



## குப்பை கொட்டிய நபருக்கு தண்டம்

யாழ்ப்பாணம்.மே 23
பொது இடத்தில் குப்பை கொட்டியவருக்கு 3 ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் மன்றின் நீதிபதி சி.சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.
குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ந-12)

## இடையூறு ஏற்படுத்திய நபருக்கு தண்டம்

யாழ்ப்பாணம்.மே.23
பிரதான வீதியின் குறுக்கே வாகனத்தை நிறுத்தி வைத்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியவருக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.
குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ந-12)

## போதையில் சாரத்தியம் வாகனம் செலுத்த தடை

யாழ்ப்பாணம்.மே.23
மது போதையில் வாகனம் செலுத்தியவருக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ஒரு வருட காலத்துக்கு அவரது சாரதிய அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப்பட்டது. 100 மணித்தியாலயங்கள் சமூக சேவை செய்யவும் உத்தரவிடப்பட்டது.
இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு மன்றின் நீதிபதி சி. சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார். (ந-12)

## தமிழர் வாக்களிப்பது கிழக்கில் மிக குறைவு

### மாகாண சபை உறுப்பினர் கருணாகரம் சுட்டிக்காட்டு

கொக்கட்டிச்சோலை, மே 23
கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் கடந்த காலங்களில் மிகக் குறைவாக இருந்தது. 40 தொடக்கம் 45 வீதத்துக்கு மேல் வாக்களிப்பு வீதம் இருப்பதில்லை. ஆனால் ஏனைய இனத்தவர்கள் 90 வீதத்துக்கு மேல் வாக்களிக்கின்றனர். எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்களது வாக்களிப்பு 90 வீதத்துக்கு மேல் அமைய வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்தார்.
காஞ்சிரங்குடா ஜெகன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவு பெறவிருக்கின்றது. மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்டு, நீண்ட காலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கட்சியிலேயே அமர்ந்திருந்தது. அதனால் பல அபிவிருத்திகளை தமிழ்ப் பகுதியில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. புதிய அரசொன்றை 2015 ஆம் ஆண்டு நாட்டில் நிலை நிறுத்தியதால், இரண்டு அமைச்சுப் பதவிகளையும், பிரதி தவிசாளர் பதவியொன்றையும் பெற்று பங்காளிக் கட்சியாக மாறினோம்.
கிழக்கு மாகாணத்தில் 39.7 வீதம் தமிழர்கள் இருந்தும், முதலமைச்சர் பதவியைப் பெறாமல் இருக்கின்றோம் என்றால், நாம் கடந்த காலங்களில் தவறிழைத்திருக்கின்றோம். அதற்கு தமிழர்கள் வாக்களிக்கத் தவறியமையே காரணம் என்றார். (ந-10)

# ஓய்வு பெற்ற கிராம சேவகர்கள் மீளப் பணியாற்றப் பின்னடிப்பு

### வவுனியாவில் வெற்றிடங்களை நிரப்ப எடுக்கப்பட்ட முயற்சி பிசுபிசுப்பு

வவுனியா, மே 23
வவுனியா மாவட்டத்தில் நிலவும் கிராம சேவகர் வெற்றிடங்களை தற்காலிகமாக நிரப்புவதற்காக ஓய்வு பெற்றவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் இது வரை 3 பேர் மட்டுமே விண்ணப்பத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
வவுனியா மாவட்டத்தின் 102 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. 62 கிராம சேவகர்களே பணியாற்றுகின்றனர். 40 கிராம சேவகர்களுக்கான பதவிகள் வெற்றிடமாகவுள்ளன. அவற்றை நிரப்புமாறு மாவட்ட செயலகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் கோரியது. அந்த வெற்றிடங்களுக்கு நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்படும் வரையில் தற்காலிக ஏற்பாடாக ஓய்வு பெற்ற கிராம சேவகர்களுக்கு மீள் நியமனம் வழங்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அனுமதியளித்தது.
அதன்படி ஓய்வு பெற்ற கிராம சேவகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இது வரை 3 பேர் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன. இவ்வாறு விண்ணப்பிப்போர் ஓய்வு பெற்றிருப்பதுடன், அவர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பித்தவர்களின் இந்தத் தகைமையை ஒருவர் மாத்திரமே கொண்டுள்ளனர். வெற்றிடங்களை நிரப்ப எடுக்கப்பட்ட இந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன.
வவுனியா மாவட்டத்தில் கிராம சேவகர் வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. இந்த நிலைமை வவுனியா மாவட்டத்தில் மட்டுமல்லாது வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது.
(ந-101)

## மைத்திரி படங்களை காட்சிப்படுத்த அறிவுறுத்து

கொழும்பு, மே 23
அனைத்துப் பாடசாலைகளிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஒளிப்படங்களை காட்சிப்படுத்த வேண்டும் என்று அறிவுத்தல் விடுக்கப்பட்டுள் ளது.
இது தொடர்பாக கல்வி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் எம்.எல். கம்மன்பில, கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஒளிப்படத்தை இதுவரை காட்சிப்படுத்தாத பாடசாலைகளில் உடனடியாக அவற்றைக் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
தேவையான ஒளிப்படங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மூத்த உதவிச் செயலர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# சமூக நீதியை உறுதிப்படுத்த முனைப்புடன் உள்ளது அரசு

### அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 23
மக்களுக்கான சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்கு கூட்டரசு அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அர்ப்பணிப்புடன் உள்ளது என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால.
கலகெதர புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதித் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. கட்டடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
சமூக நீதி, மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய அம்சங்கள் தொடர்பில் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பெரும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அரசமைப்பின் 18ஆவது திருத்தம் நீக்கப்பட்டமையும் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமையும் இந்த நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும்.
19ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் ஊடாக நாட்டில் அனைத்துக் குடிமக்களுக்கும் சட்டத்தின் நீதி, சமூக நீதி, சுதந்திரம், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் ஆகிய அனைத்தும் கிட்ட பலமான ஒரு அடித்தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தசுயாதீனஆணைக் குழுக்களின் நடவடிக்கைகளை முறையாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு அண்மையில் அதிகாரிகளை அழைத்து ஆலோசனை வழங்கியுள்ளேன் என்றார்.
நிகழ்வில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, சரத் அமுனுகம, நவீன் திசாநாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால, பிரதம நீதியரசர் பிரிய சாத் டெப், சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-8)




## வாசுதேவவுக்கு திடீர் சுகவீனம்

கொழும்பு, மே 23
நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
அண்மைக் காலமாக சளி மற்றும் ஆஸ்துமா பிரச்சினை காரணமாக சிகிச்சை பெற்று வந்த அவர், திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.
வாசுதேவவின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# தேர்தல் சட்ட வரைவில் விரைவில் மாற்றங்கள்

## 18 வயதான உடன் வாக்களிக்கலாம் எனத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு, மே 23
18 வயதான எவரும் வாக்களிக்கக் கூடிய வகையில் தேர்தல் சட்ட வரைவில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது என்று தெரிவித்தார் தேர்தல் ஆணையத்தின் தலைவர் மகிந்த தேசப்பிரிய.
அவர் தெரிவித்ததாவது:
தற்போதுள்ள நடைமுறையின்படி வாக்காளர் இடாப்பு வருடத்துக்கு ஒருமுறை யூன் மாதம் மாத்திரமே மீளாய்வு செய்யப்படுகின்றது. ஜூன் மாத இறுதியில் தேர்தல் நடக்கும்போது 18 வயதை அடைந்தவர்கள் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை வாக்களிக்கும் தகுதியைப் பெற முடிவதில்லை. இந்த நடைமுறையால் ஏராளமானோர் வாக்களிக்கும் உரிமையை இழக்கின்றனர்.
இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் வருடத்துக்கு மூன்று முறை அதாவது 4 மாதங்களுக்கு ஒரு முறை வாக்காளர் இடாப்புகளை மீளாய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக தேர்தல்கள் சட்டவரைவில் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளோம்.
தற்போது வருடாந்தம் 2 இலட்சம் முதல் இரண்டரை இலட்சம் வரையில் புதிய வாக்காளர்கள் வருடாந்த தேர்தல் இடாப்பு மீளாய்வு மூலம் சேர்க்கப்படுகிறார்கள். மீளாய்வு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறுமானால் புதிய வாக்காளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் - என்றார். (ற -5)



" சிறப்புச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படுமாயின் தற்போதைய சூழலில் சட்டவரைவு நிச்சயமாகத் தோற்கடிக்கப்படும்.

## மாகாண சபைகளால் அரசுக்கு நெருக்கடி

### பவ்ரல் கூறுகின்றது

கொழும்பு, மே 23
மாகாண சபைகளின் பதவிக் காலத்தை நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையின்றி நீடிக்க முடியாது. தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறானதொரு சிறப்புச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் அது நிச்சயம் தோற்கடிக்கப்படும்.
இவ்வாறு நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தல்களை கண்காணிக்கும் (பவ்ரல்) அமைப்பு தெரிவித்துள்ளது.
அந்த அமைப்பின் தலைவர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:
மாகாண சபைகளின் பதவிக் காலம் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கான பதவிகாலத்தை மேலும் நீடிக்கும் வகையிலான சிறப்புச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் தற்போதைய சூழலில் அந்தச் சட்ட வரைவு நிச்சயமாகத் தோற்கடிக்கப்படும்.
மாகாணசபைகளின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான சிறப்பு சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுமாயினும், அதன்பின்னர் சட்டவரைவு தொடர்பில் ஆராய்ந்து ஆலோசனைகள் முன்வைக்கப்படுவதற்காக உயர் நீதி மன்றத்தில் அது சமர்ப்பிக்கப்படும்.
உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்டவரைவின் அங்கீகாரத்தை பெறும் பொருட்டு அதனை மக்கள் கருத்தறிவதற்காக உயர் நீதி மன்றத்தால் முன்வைக்கப்படும்.
அப்படியான சந்தர்ப்பத்தில் மாகாண சபைகளின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு நாட்டு மக்கள், சிவில் அமைப்பினர் மற்றும் புத்திஜீவிகள் தமது எதிர்ப்பை நிச்சயம் வெளிப்படுத்துவர். மக்களது ஆதரவின்றிய சட்டவரைவு நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்படுவது சாத்தியமற்ற விடயமாகும் - என்றார். (ற-5)

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஓகஸ்ட் 2

கொழும்பு, மே 23
நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனியவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஓகஸ்ட் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
பேராசிரியர்கள் சரத் விஜேசூரிய, காமினி வியன்கொட ஆகியோர் தாக்கல் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், குற்றப்பத்திரிகை நேற்று வாசிக்கப்பட்டபோது வழக்கு விசாரணைக்கான தினம் ஒதுக்கப்பட்டது. (ற -5)

## குழந்தைகள் போன்றே வயோதிபர்களையும் கவனிப்பது அவசியம்

யாழ்ப்பாணம், மே 23
வயோதிபர் இல்லங்கள் பல இப்போது புதிது புதிதாகத் தோற்றம் பெறுகின்றன. வயோதிபர்களைப் பராமரிக்க இப்போது பிள்ளைகள் இங்கில்லை. பராமரிக்க ஆள்கள் இல்லை என்ற நிலையாலேயே வயோதிப இல்லங்களை அதிகமாக உருவாக்க வேண்டியுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



புதுக்குளம், கனகராயன் குளத்தில்முருகர்தங்கம்மா நடராஜா நினைவு முற்றம் திறப்பு விழாவும், வயோதிபர் இல்லத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றன. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே வடக்கு முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
குழந்தைகள் போன்று வயோதிபர்களும் பராமரிக்கப்படவேண்டும். நித்தமும் வெளியில் சென்று பல வேலைகளுக்கிடையே நாட்டு நடப்புக்கள், செய்திகள் என அறிந்து வந்தவர்கள் ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கும் போது அவர்களுக்குப் பேச்சுத் துணைக்கு ஒரு உறவு தேவை. ஆனால் எமக்கோ அவர்களுடன் பொழுதைக் கழிக்க நேரமில்லை. இந்த நிலையில் அவர்களும் துக்கப்படுகின்றார்கள். நாமும் மனச் சுமையுடன் சஞ்சலப்படவேண்டியுள்ளது.
இவற்றால் வயோதிபர்கள் பலர் தாமாகவே வயோதிப இல்லங்களில் வாழ விரும்புகின்றார்கள். சில சமயங்களில் வயோதிப இல்லங்களில் போதுமான வசதிகள் காணப்படாத போதும் தமது பிள்ளைகள் படுகின்ற அல்லல்களைச் சகிக்கமுடியாது அதேநேரம் தமது இயலாமையையும் கருத்தில் கொண்டு இல்லங்களிலேயே அவர்கள் இருந்துவிடத் தீர்மானிக்கின்றார்கள். இல்லங்கள் பன்னாட்டுத் தரத்துக்கு ஒப்பானதாக அமைகின்றபோது அவர்களின் வாழ்க்கைத்தரம் சுகமானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமையும் என்று எதிர்பார்க்கலாம் - என்றார். (ற -10)

## சைட்டம் கல்லூரியை அரசுடைமை ஆக்குக

### நாடளாவிய ரீதியில் மருத்துவர் சங்கம் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 23
சைட்டம் மாலபே தனியார் கல்லூரியை அரசுடைமையாக்க வேண்டும் என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் மருத்துவர் சங்கத்தால் போராட்டம் நடத்தப்படுகின்றது.
அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அனைத்து மருத்துவமனைகளும் நேற்று ஒரு நாள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டன.
யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் பொதுமக்களின் நலன் கருதி அவசர நோயாளர் பிரிவுடன், வெளிநோயாளர் பிரிவு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கியது.
மன்னார், வவுனியா, பருத்தித்துறை, தென்மராட்சி பிரதேச மருத்துவமனைகள் மற்றும் பல மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவைத் தவிர்த்து அவசர நோயாளர் பிரிவுகள் இயங்கின.
மருத்துவர்களின் போராட்டத்தால் தூர பிரதேசங்களில் இருந்து சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பலர் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.
இத்தகைய போராட்டங்களால் நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். அரசு அதைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என அவர்கள் விசனம் தெரிவித்தனர்.
வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக மன்னார் மருத்துவனை, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஊடக அறிக்கையை ஒன்றை வெளியிட்டுள்ளது.
"இன்றைய பணிப்புறக்கணிப்பு 'சைட்டம்' சம்பந்தமான அண்மைக்கால நிலைவரத்தால் எம்மேல் திணிக்கப்பட்ட ஒன்றாகும். கடந்த கிழமை பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை முடக்க எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கைகளுக்கு எதிராகவும், இன்று எமது சங்கத்தின் தலைவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள நீதிமன்றஅவமதிப்புவழக்கைஎதிர்த்தும் பணிப்புறக்கணிப்பு நடத்தப்படுகின்றது.
'சைட்டம்' ஆரம்பத்திலிருந்தே பிழையான தகவல்களால் மக்களையும், அதிகாரிகளையும் ஏமாற்றி ஆரம்பிக்கப்பட்ட கபடம் நிறைந்த ஒரு நிறுவனமாகும். திரும்பத் திரும்ப இலங்கை மருத்துவ ஆலோசனைகளால் தகுதிக் குறைபாடுகளைக் சுட்டிக்காட்டியும் அவற்றைச் சரிப்படுத்தாமல் மருத்துவர்களைப் பதிவுசெய்ய முயற்சிக்கிறார்கள். பணம் மற்றும் அதிகாரம் படைத்தவர்கள் அரசையும், ஊடகங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்து மக்களை ஏமாற்றி, மக்களை ஆபத்துக்குள்ளாக்குகிறார்கள்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ற -10, 26, 9, 56, 8)



யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை

# மே 18 நினைவேந்தலுக்கு ஏற்பாட்டுக் குழு அவசியம்

## அது அரசியல் கலப்பற்றிருக்கவேண்டும் என முன்னாள் எம்.பி வினோநோகராதலிங்கம் வலியுறுத்து

மன்னார், மே 23



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் அரசியல்கலப்பற்றஏற்பாட்டுக் குழு ஒன்றால் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அமைதியான முறையில் அஞ்சலிக்க எதிர்காலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையோ, அரசியல் கட்சிகளோ தமிழ்த் தேசிய துயர நாள் ஒழுங்கமைப்பு ஏற்பாட்டுப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் மக்களோடு மக்களாக நின்று அஞ்சலி செய்யவும், உரிய கௌரவத்தைக் கொடுக்கவும் ஏற்பாட்டுக் குழு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இது ஒரு தமிழ் தேசியத்தின் துயர நாளாக, உணர்வுபூர்வமாக இருக்க வேண்டும். அரசியல் தலையீடுகள் அற்ற நிகழ்வாக எதிர்காலத்தில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் திடலானது உறவுகளைப் பறிகொடுத்த மக்கள் அமைதியாக அஞ்சலிக்க, பரஸ்பரம் அனுதாபங்களை, ஆறுதலைப் பகிர்ந்து கொள்ள ஏற்ற சூழல் கொண்டதாக இதுவரை ஒழுங்குபடுத்தப்படவில்லை. அதனாலேயே அங்கு சலசலப்புகளும், குழப்ப நிலையும் ஏற்பட்டது.

திட்டமிடப்பட்டு அரசியல் தலைவர்கள் அசிங்கப்படுத்தப்பட்டமையானது நிகழ்வின் நோக்கத்தைக் கேவலப்படுத்தப்பட்டமைக்குச் சமம். அஞ்சலிப் பொதுச் சுடரை ஏற்ற அரசியல்வாதிகளை அனுமதித்திருக்கக் கூடாது. முள்ளிவாய்க்காலில்உறவுகளைஇழந்தவர்களுக்கே அந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அஞ்சலி உரைகளை எதிர்காலத்தில் தவிர்க்க வேண்டும்.

இது தமிழ் மக்களின் தேசிய துயர் நிறைந்த நாளாகும். இந்தத் தினத்தை ஒழுங்கமைக்கும் பொறுப்பை முள்ளிவாய்க்கால் மக்களிடம் அல்லது முல்லைத்தீவு பொது அமைப்புகளிடம் வழங்க வேண்டும். பொதுமக்களைக் கொண்ட மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு ஒன்றை நிறுவ வேண்டும். இது அரசியல் சாராதோரைக் கொண்ட குழுவாக இயங்க வேண்டும்.

இப்போது நிகழ்வைச் செய்து முடித்த வடக்கு மாகாண சபையும் அரசியல் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபையே. நாளை வடக்கு மாகாண சபையில் அரசியல் தலைமைத்துவமோ, ஆட்சி மாற்றமோ ஏற்பட்டால் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு என்னவாகும்?.

9ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை ஒரு கூட்டு அஞ்சலி தினமாகப் பிரகடனப்படுத்த அரசியல்தலைவர்கள், கட்சிகள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

(ற -10,56)

# வெள்ளவத்தைக் கட்டடச் சரிவு விசாரணை அறிக்கை தயார்

கொழும்பு,மே 23



வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள கட்டடம் ஒன்று இடிந்து விழுந்த விவகாரம் குறித்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை நாளை மறுதினம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கப்படும். மூன்று நிறுவனங்கள் இந்த விசாரணைகளை மேற்கொண்டன. இவ்வாறு அமைச்சின் செயலாளர் டப்ளியூ.கே.கே. அதுகோரல தெரிவித்தார்.

வெள்ளவத்தை சவோய் திரையரங்குக்குப் பின்னால் இருந்த கட்டடம் ஒன்று கடந்த வியாழக்கிழமை இடிந்து வீழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததோடு, 21 பேர் காயமடைந்திருந்தனர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தக் கட்டடத்தின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சரணடைந்தார்.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை கட்டட இடிபாடுகளுக்குள் மேலும் சிலர் சிக்கியிருக்காலம் என கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, தேடுதல் நடவடிக்கைகளை பொலிஸார் நேற்றும் முன்னெடுத்தனர். (ஐ)

# ஏறாவூர் றகுமானியா ம.வி. ஆசிரியர்கள் போராட்டம்

## போலிப்பரப்புரைகளைக் கண்டித்து



ஏறாவூர்.மே 23

ஏறாவூர் றகுமானியா மகா வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் வகையில், பழைய மாணவர்களில் ஒரு குழுவினரால் போலிப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்து பாடசாலையின் ஆசிரியர்கள் நேற்றுச் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் கற்பித்தல் செயற்பாடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

ஏறாவூர் றகுமானியா மாகா வித்தியாலயத்தில் தரம் 5 தொடக்கம் 13 வரையிலான வகுப்புக்களில் சுமார் ஆயிரத்து 200 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 55 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். தற்போதைய அதிபர் மாற்றப்பட வேண்டும். ஆசிரியர் மீது போலியான குற்றச்சாட்டுக்கள் தெரிவித்தும் சமூக வலைத்தளங்கள் மற்றும் முகநூல்களில் அடிக்கடி பதிவுகள் இடப்படுகின்றன. துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்படுகின்றன. பழைய மாணவர்களில் ஓர் குழுவினர் பாடசாலையின் செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் வகையில், கருத்துக்களை வெளியிடுவதனால் ஆசிரியர்கள் மனச்சோர்வடைந்துள்ளனர் என்று பாடசாலை அதிபர் எம்.பி. சக்கூர் தெரிவித்தார்.

"பாடசாலையின் பழைய மாணவர்களில் ஒருசிலர் அதிபர் மீது கொண்டுள்ள தனிப்பட்ட காழ்ப்புணர்வு மற்றும் கருத்து முரண்பாடு காரணமாகக் கடந்த சில மாதகாலமாக முகநூல் வாயிலாக ஆதாரமற்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்து வருகின்றனர். ஆனால் எழுத்து மூலமான எந்தவொரு கோரிக்கையையும் எம்மிடம் தரவில்லை. இதனால் நிர்வாக ரீதியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது. எனினும் பெற்றார் கூட்டமொன்றை உடனடியாகக் கூட்டி, ஏனையவர்களது கருத்துக்களையும் பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்." என்று மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எஸ். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

(ற - ஐ.47)

# 73 வயது தம்பதிக்கு பதிவுத் திருமணம்

பளை. மே 23

73 வயதுத் தம்பதியருக்குப் பிள்ளைகள் சேர்ந்து பதிவுத் திருமணம் செய்து வைத்தனர். இராஜாங்க அமைச்சர் விஜயகலா சாட்சிக் கையெழுத்திட்டார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பளை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான அரச தலைவர் மக்கள் சேவைத் திட்டத்தின் (நிலமெஹெவர) கீழ் நடமாடும் சேவை நடைபெற்றது. அதிலேயே இந்தத் தம்பதிகளுக்குக் காலம் கடந்த பதிவுத் திருமணம் நடத்தப்பட்டது.

சோரன்பற்றைச் சேர்ந்த 73 வயது தம்பதியினருக்கும் பளை கரந்தாயைச் சேர்ந்த 47 வயது குலசேகரம் இராசகுலசிங்கம் தம்பதியினருக்கும், அமைச்சர் வஜிர அபேவர்த்தன முன்னிலையில் திருமணப் பதிவு நடத்தப்பட்டது. சாட்சிக் கையொப்பத்தை நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் இட்டார்.

பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் தலைமையில் நடைபெற்ற நடமாடும் சேவையை கொழும்பு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆரம்பித்தார்.

நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம், புத்தளம் மாவட்ட செயலர், அமைச்சின் செயலாளர்கள், வடமாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நடமாடும் சேவையில் கலந்து கொண்ட ஆயிரத்து 523 பேர் பல்வேறு சேவைகளுக்காக விண்ணப்பித்தனர். வழங்கப்பட்ட சேவைகளில் 2 ஆயிரத்து 547 பேர் பயன் பெற்றனர் எனப் பிரதேச செயலளர் திருமதி ஜெ.பரமோதயன் தெரிவித்தார்

பிறப்பு இறப்பு விவாகச் சான்றிதழ்களுக்கு 359 பேரும், புதிய திருத்தம் தொலைந்த தேசிய அடையாள அட்டைக்கு 205 பேரும் விண்ணப்பித்துள்ளனர். இலவச புகைப்பட சேவை வழங்கப்பட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த 128 பேருக்கும் இலவச புகைப்படமும் எடுக்கப்பட்டன. சமுர்த்தி திட்டத்தின் கீழ் கடன் திட்டம் மற்றும் லொத்தர் வீடு உள்ளிட்ட சேவைகளுக்கு 46 பேரும் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் 596 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. சக்கர நாற்காலி, முதியோர் கொடுப்பனவு, மாற்றுவலுவுள்ளோர் போன்றோருக்கு உதவிகளும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற - 9)

# சுதந்திர சதுக்கத்தில் மகிந்தவின் நிகழ்வுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு,மே 23

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் போர் வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. கடந்த 20 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் இந்த நிகழ்வு நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் இறுதி நேரத்தில் இந்த நிகழ்வைச் சுதந்திர சதுக்கத்தில் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது என்று கலாசார திணைக்களம் அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து குறித்த நிகழ்வுவிஹாரமஹாதேவிபூங்காவின் புத்தர் சிலைக்கு அருகில் நடத்தப்பட்டது.

அதேவேளை, விஹாரமஹா தேவி பூங்காவின் புத்தர் சிலைக்கு அருகில் நடத்தப்பட்ட போர் வெற்றிக் கொண்டாட்டத்தில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஞானசார தேரர் என்னைச் சீண்டினால் விளைவு விபரீதமாகும்

## எச்சரிக்கிறார் பிரதியமைச்சர் ஹரிஸ்

கொழும்பு,மே 23

"சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராக அடாவடிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஞானசார தேரர், எனது அமைச்சுக்குள் காலடி வைத்தால், விளைவுகள் வேறுவிதமாக இருக்கும்." இவ்வாறு விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரிஸ் தெரிவித்தார். மட்டக்களப்பில் இடம்பெற்ற பாராட்டுவிழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



"அமைச்சர் மனோ கணேசன் போல் என்னால் பொறுமையுடன் நடந்து கொள்ள முடியாது. எனது அமைச்சுக்குள் ஞானசார தேரர் குழப்பும் எண்ணத்துடன் வந்தால், எனது நடவடிக்கைகள் வேறு பாணியில் இருக்கும். அண்மைக்காலங்களில்சிறுபான்மைச் சமூகங்கள் மீதான, இவர்களின் நடவடிக்கைகள் மோசமானதாகக் காணப்படுகிறது. நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமும் இருக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸ்துறை கைகட்டி, இனவாதிகளின் பின்னால் நிற்கின்றது. அத்துடன் குருநாகல் பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பான இவர்களின் விசாரணைச் செயற்பாடுகள் இதுவரை ஆக்கபூர்வமாக இடம்பெற்றிருக்கவில்லை" - என்றார். (ஐ)

# மார்க்கண்டு சுவாமிகள்



ஈழநாடு செய்த தவப்பயனாக சித்தர் பரம்பரையில் அவதரித்த கடையிற் சுவாமிகளுக்கு அடுத்தபடியாக கருதப்படுபவர் செல்லப்பா சுவாமிகள். இவரைத் தேரடிச் சுவாமிகள் என்றும் அழைப்பர். செல்லப்பா சுவாமிகளின் சீடராக யோக சுவாமிகள் விளங்கினார். இவரது முதன்மைச் சீடராக மார்க்கண்டு சுவாமிகள் இருந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே பிரான்பற்று எனும் ஊரில் விளம்பி வருடம் தைத் திங்கள் 17 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (29.01.1899) பூர நட்சத்திரத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் சரவணமுத்து. தாயார் பெயர் சின்னக்குட்டி அம்மையார். மார்க்கண்டு சுவாமிகளுக்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர். சுவாமிகள் ஆரம்பக் கல்வியை பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும், வடலியடைப்பு சைவ வித்தியாலயத்திலும் கற்றுப் பின்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை இந்துக்கல்லூரியில் கற்று கேம்பிறிட்ஜ் சீனியர் தேர்வில்சித்தியடைந்ததுடன், அவரது பாடசாலைப் படிப்பு முற்றுப் பெற்றது.

மார்க்கண்டு சுவாமிகள் தனது ஊரில் அமைந்துள்ள முருகமூர்த்தி ஆலயத்தில் சிவத்தொண்டுகள் செய்து, திருமுறைப் பாடல்களைப் பாடி பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். அந்தக் காலப்பகுதியில் சுவாமிகளுக்கு தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் தொழில் கிடைத்தது. சுவாமி பணத்தைப் பெரிதாக மதிக்கமாட்டார். உத்தியோக உயர்வுகளையும் பெரிதாக மதியாது பிரம்மச்சரிய விரதத்தின் பெருமை பெரிது எனும் திடசித்தம் வாய்ந்தவர். மறுபக்கத்தில் உத்தியோகம் உட்பட சகலவற்றையும் இறைவனை அடைவதற்காக உபயோகிக்கும் உறுதியையும் உடையவரானார். காலையிலும், மாலையிலும் தியானம் செய்தல் வேண்டும் என்ற ஒழுங்கைத் தவறாது மேற்கொண்டார். இந்தக் காலப்பகுதியில்தான் யோகர் சுவாமிகளின் தொடர்பு மார்க்கண்டு சுவாமிகளுக்குக் கிடைத்தது. தெய்வ சித்தம் எவ்வித சிவத்தொண்டுக்காக அவரைத் தோற்றுவித்ததோஅந்தத்தொண்டை நிறைவு செய்தவற்குரிய பயிற்சிகள் அவருக்குக் கிடைத்தன. குருநாதரான யோகர் சுவாமிகள் தனது சீடரான மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆன்மிகப் பயணம் தொடர்பானவற்றை தாயினும் இனிய பரிவுடன் சொல்லாலும், செயலாலும், இடைஇடையே திருமுகங்கள் மூலமாக உணர்த்திய பின்னர் அவரை சுயமாக இயங்கவிட்டார்.

மார்க்கண்டு சுவாமிகள் தியத்தலாவையில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு மாநகரில் சிறிது காலம் தொழில்புரிந்தார். இந்தக் காலப் பகுதியில் கல்விமான்கள் நடத்திய சைவ சித்தாந்த வகுப்புக்களுக்கும் சென்று வந்தார். சுவாமிகள் 50 ஆவது வயதில்தனது உத்தியோகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து கொழும்பில் இருந்து நேரே கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் குடிகொண்டிருந்த கொட்டிலை வந்தடைந்தார். குருநாதரான யோகர் சுவாமிகள் அவரை ஏற்று வண்ணார் பண்ணையில் ஒரு வீட்டில் தங்கவைத்தார். கைதடி ஊரில் ஆசிரியர் விசுவலிங்கம் வீட்டில் அமைந்திருந்த குடிசையில் 29.12.1950 ஆம் ஆண்டு மார்க்கண்டு சுவாமிகளைத் தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமிகளும் அந்த ஆச்சிரமத்தில் தங்கியிருந்து உயர் ஞான சாதனையில் ஈடுபட்டார். சில வேளைகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவதொண்டன் நிலையத்திற்கும் சென்று வருவார்.

யோகர் சுவாமிகள் சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சாந்த சுவாமிகள்) சில காலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்கவைத்து இராம்ஸ போதத்துக்கு அருளுரை வழங்குமாறு கூறினார். சோல்பரி பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப்போல அன்பு செலுத்தி எந்தவித வசதிகளையும் எதிர்பாராத ஒரு தொண்டனாகவும், தோழனாகவும் இருந்து சாதனையில் ஈடுபட்டார். அமெரிக்கத் துறவு சுப்பிரமுனிய சுவாமி, ஜேர்மன் சுவாமி, ஆஸ்திரேலிய பன்றிக்குட்டிச் சுவாமிகள் உட்படப் பல சமயத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்கண்டு சுவாமிகளிடம் அருளாசி பெற்று வந்தார்கள். சில பௌத்த துறவிகள்கூட மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்க அடிக்கடி வருவார்கள்.

மார்க்கண்டு சுவாமிகள் தமது அந்திம காலத்தை உணர்ந்து தம்முடன் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்திடம் உமது உறவினரைப் பார்க்க இங்கிலாந்து செல்லுமாறு கூறினார். அதன்படி அவரும் இங்கிலாந்து சென்றார். மார்க்கண்டு சுவாமிகள் தமது இறுதி நாள்களில் குளிப்பு, முழுக்கு முதலியவற்றைக் கைவிட்டதோடு உணவையும் பெரிதாகச் சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சி அடைந்து இருந்தபோது வைத்திய கலாநிதி யோகு பசுபதி பார்வையிட வந்தபோது தமக்கு எந்தவித வருத்தமும் இல்லை எனக்கூறி பார்வையிட அனுமதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகள் சும்மாயிருந்து இரத்தாசி வருடம் வைகாசி மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (29.05.1984) நண்பகல் 12 மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் சிவன் திருவடி சேர்ந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அவரது உடன்பிறந்த சகோதரியின் பேரன் நவரத்தின ராசா சண்முகராசாவால் மார்க்கண்டு சுவாமிகள் சபை நிறுவப்பட்டுள்ளது. சபையால் மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. சபையால் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதில் இலவசமாக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். சபையால் மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலையும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் சமூகப் பணிகள், சமயப் பணிகள், கலாசாரப்பணிகள் போன்ற பல பணிகள் சபையால் சிறப்பாக முன்னெடுக்கப்ப டுகின்றன.

*ந.சண்முகராசா,*
*ஸ்தாபகர், மார்க்கண்டு சுவாமிகள் சபை, பண்டத்தரிப்பு.*

# மன்னாரில் புதிய கடற்படை முகாம்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு



மன்னார் மே 23

மன்னார் மாவட்டம் தாழ்வுப்பாடு, ஓலைத்தொடுவாய், நடுக்குடா மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் கடற்படையினர் தற்போது பெரும் கடற்படைத் தளம் ஒன்றை அமைக்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் தெரிவித்தாவது:

மன்னார் மாவட்டத்தின் தாழ்வுப்பாடு கடற்கரையில் கரைவலைத் தொழில் புரியும் மீனவர்கள்தமது உற்பத்தியைச்சந்தைப் படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த பிரதான வீதியை அபகரித்து வீதியின் இருமருங்குமாக 10 தொடக்கம் 15 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய வகையில் பெரும்கடற்படைத்தளம் அமைக்கப்படுகின்றது.

முகாம் அமைக்கப்படும் பகுதியில் நீண்ட காலமாகச் சிறு சோதனைச் சாவடியே இருந்தது. தற்போது கடற்படையினர் குறித்த வீதியை ஆக்கிரமித்து இவ்வாறு முகாம் அமைக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். அங்கு தொழிலில் ஈடுபடும் நூற்றுக் கணக்கான மீனவர்கள் தமது உற்பத்தியை நகருக்கு எடுத்துச் செல்ல 15 கிலோ மீற்றர் தூரம் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

கடற்படையினர் தற்போது அமைக்கும் முகாமில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் கடற்படையினரின் மற்றுமோர் படைமுகாம் உள்ளது. இவ்வாறு நிலங்களை அபகரித்து தொடர்ந்தும் எமது மக்களின் வாழ்வியலைக் கேள்விக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளிலேயே படையினர் ஈடுபட்டுள்ளனர் என்பதையே இவ்வாறான செயல்கள் எடுத்துக்காட்டுகின்றன - என்றார்.

இது தொடர்பில் கடற்படைத் தளபதியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது ஒரு தேசிய பாதுகாப்பு கருதிய விடயம்எனஒற்றை வார்த்தையில்பதிலளித்து வேண்டுமானால் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுங்கள் எனப் பதிலளிக்கின்றார். படையினர் தொடர்ந்தும் சர்வாதிகாரப்போக்குடனேயே தொடர்ந்தும் நடக்கின்றனர்-என்றார். (ற-101)

# முல்லை. மாவட்ட மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாகப் பல கிராமங்களில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் தாங்கிகள் மூலம் மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. தற்போதைய வறட்சியான காலநிலையால், பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்கொண்டுள்ளனர். குடிதண்ணீரைப் பெற்றுத் தருமாறு முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 500 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பிரதேச செயலகங்களிடம் கோரிக்கை விடுத்தன.

அதற்கமைவாக "பிரதேச சபைகளின் ஊடாக உரிய முறைகளில் குடிதண்ணீரை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன" என்று பிரதேச செய லர்கள் தெரிவித்தனர். (ஐ-101)

# அளுத்கமகே பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி

கொழும்பு, மே 23

39 இலட்சம் ரூபா நிதி மோசடி உள்ளிட்ட மூன்று விடயங்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மகிந்தானந்த அளுத்கமகே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது 20 லட்சம் ரூபா சரீரப் பிணைகள் இரண்டில் அவர் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன அனுமதித்தார். மகிந்தானந்தவின் கடவுச் சீட்டையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனைகள் இருப்பின் அதனை ஜூன் 27ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறும் நீதிவான் அறிவித்துள்ளார். (ற-5)

# முஸ்லிம் மக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குங்கள்

## சிறிலங்கா முஸ்லிம் முற்போக்கு முன்னணி கோரிக்கை

கொழும்பு, மே 23

முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம்களின் உடைமைகள் உட்பட அவர்களது உயிர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம்முற்போக்கு முன்னணியின் தேசிய அமைப்பாளர் அப்துல் சத்தார், குருநாகல் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கிரகரி குறேயைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மல்லவபிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசல் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு மத்தியில் கடும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முப்பது வருடகாலப் போர் முடிவின் பின்னர் முஸ்லிம்களை இலக்கு வைத்து மீண்டும் நாட்டில் ஒரு போரை உருவாக்கும் நோக்குடன், சிங்கள முஸ்லிம் மக்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கக்கூடிய பல நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த ஆட்சியின் போது குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய நகரத்தில் பன்றி உருவத்தின் மீது அல்லாஹ் என்ற வாசகத்தை எழுதி ஊர்வலம் சென்றதுடன், வாரியப்பொல, மெல்சிரிப்புர, குருநாகல், தெதுருஓயகம பள்ளிவாசல் போன்ற இடங்களில் அசம்பாவிதங்கள் தலை தூக்கியபோது பொலிஸாரால் அவை கட்டுப் படுத்தப்பட்டன.

இதன் உச்சக் கட்டமாக அளுத்கம கலவரம் ஏற்படுத்தப்பட்டது. அளுத்கம கலவரம் கடந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்குரிய, முஸ்லிம்களின் பலத்த எதிர்ப்புக்குரிய சாதகமாக அமைந்தது கசப்பான உண்மையே.

அளுத்கம கலவரத்தைத் தொடர்ந்து இப்பாகமுவ பன்னல, மல்லவபிட்டிய பள்ளிவாசல்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதன் பின்பு தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பள்ளிவாசல்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இன்றும் அப்படியான ஒரு அச்ச சூழ் நிலை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது. எதிர் வரும் நோன்புக்காலம் பெண்கள் உட்பட முஸ்லிம்கள் இரவுக் காலங்களில் பள்ளிவாசல்களுக்குச் செல்வதற்குரிய தேவை இருப்பதால், அதற்குரிய பாதுகாப்பு இல்லாததால் உடனடியாக முஸ்லிம்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் - என்றார். (ற-ஐ-10)

# உலக சுற்றாடல் தினம் யூன் 5 ஆம் திகதியன்று

யாழ்ப்பாணம், மே 23

'இயற்கையை மக்களுடன் இணைத்தல்' என்னும் தொனிப் பொருளிலான உலக சுற்றாடல் தினம் யூன் ஐந்தாம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அதனையொட்டிய நிகழ்வுகளை எதிர்வரும் மே 29 தொடக்கம் யூன் 5 ஆம் திகதி வரை சகல திணைக்கள அலுவலகங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் வேதநாயகன் அறிவித்துள்ளார்.

அரச தலைவரின் செயலாளரால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின்படி மே 29 ஆம் திகதி சுற்றாடல் விழிப்புணர்வு தினமாகவும், 30 ஆம் திகதி சுற்றுப்புறச் சூழல் சுத்தப்படுத்தல் தினமாகவும், மே 31 ஆம் திகதி திண்மக் கழிவு முகாமைத்துவத் தினமாகவும் யூன் முதலாம் திகதி மர நடுகை தினமாகவும், யூன் 2ஆம் திகதி நீர் மற்றும் நீர்வள பாதுகாப்புத் தினமாகவும் 3 ஆம் திகதி உயிர் பல்வகைமை பாதுகாப்புத் தினமாகவும், 4 ஆம் திகதி பேண்தகு நில முகாமைத்துவ தினமாகவும் ஐந்தாம் திகதி உலக சுற்றாடல் தினமாகவும் கடைப்பிடிக்குமாறு மாவட்டச் செயலர் அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# வடக்கு, கிழக்கு கல்வி நிலையை மேம்படுத்த முனைய வேண்டும்

## கலாநிதி தவபாலன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 23

மாற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான மிகவும் சக்திமிக்க கருவி கல்வியாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வித்திறனில் கடை நிலையில் உள்ளதைக் கடந்த வருட ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறு கலாநிதி பா.தவபாலன் தெரிவித்தார்.

திருகோணமலை ஐரோப்பிய யூனியன் வளாகத்தில் கடந்த மாதம் நடைபெற்ற கல்வி ஆய்வரங்கில் முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தலை நிமிர்ந்து நாம் வாழ வழிகாட்டுவது கல்வியே ஆகும். இதுவே எம்மை நாம் அங்கீகரிக்க உதவும் ஆயுதமாகும்.

இதை எம் தலைவர்கள் புத்திஜீவிகள் சமூக ஆர்வலர்கள் புரிந்து கல்வியை வளர்க்கப் புதிய வேலைத்திட்டங்களை விரைவாக உருவாக்க வேண்டும்.

முகாமைத்துவ ரீதியில் பாடசாலைகளையும், அதிபர்களையும் வலுவூட்டல், தம்மைத் தாமே வாண்மைப்படுத்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் போன்ற கலைத் திட்டப் பிரயோகங்களில் ஈடுபட வைக்க வேண்டும். மாணவர்களின் கற்றல் தராதரங்களில் அக்கறை செலுத்த வேண்டும்.

பின்னடைவுகளுக்கு முதன்மைக் காரணம் முகாமைத்துவக் குறைபாடுகளேயாகும். புரிந்துணர்வுகளுடனும் விஞ்ஞான ரீதியாக காரண காரிய தொடர்புகளைப் பகுத்தாராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டும். உணர்ச்சிபூர்வமான தீர்மானங்களால் பயனேதுமில்லை.

மாணவர்களுக்குப் பொருத்தமான பரிகாரக் கல்வித்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடு மாணவர்களை ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்த உந்து சக்தியாக விளங்கும் அது அவர்களுக்குத் தொழில் கல்வி வாழ்க்கையைத் தொடர உறுதுணையாகும்.

இந்த நிலையை ஏற்படுத்தல் ஒவ்வொரு பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும் - என்றார்.(ற)

**செங்கல் விற்பனை**

2x4x9 இஞ்சினியறிங் செங்கல்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 959 7231**

**வருடாந்த குருபூசை அறிவித்தல்**

**(கார்த்திகை நட்சத்திரம் 25.05.2017**
**வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி )**

கைதடி தென்கிழக்கு கைதடியில் (யாழ் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு முன்பாக) அமைந்துள்ள **தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமத்தில்** எதிர்வரும் 25.05.2017 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள் திருவடி அபிஷேகம் பூசைகள் நடைபெறும் என்பதை மார்க்கண்டு சுவாமிகளின் அடியார்களுக்கு அறியத்தருகின்றேன்.

**மணியகாரர் வளவு,**
**கைதடி தென்கிழக்கு,**
**கைதடி.**

# யோசிதவின் வேண்டுகோள் இன்று மன்றில் பரிசீலனை

கொழும்பு, மே 23

வெளிநாடு சென்றுவர அனுமதியளிக்கவேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்ச கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் வேண்டுகோள் இன்று பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்றும், இது தொடர்பில் தனது நிலைப்பாட்டைச் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் சம்பாதித்த பணத்தை சி.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனத்தில் முதலீடு செய்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கில் யோசித ராஜபக்சவுக்குப் பிணை வழங்கப்பட்ட போது வழக்கு முடியும்வரை அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது. யோசித ராஜபக்ச மருத்துவ சிகிச்சைக்காக ஆஸ்திரேலியாவுக்கு செல்லவேண்டியுள்ளது என்று அவரது சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளைப் பரிசீலித்த நீதிமன்றம் இது தொடர்பில் சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்று உத்தரவிட்டது. (ற-5)

**பதவி விலகல்**

கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் நம்பிக்கை நிதியம் (பஞ்சகர்த்தாக்கள்) குழுவில் உபதலைவராக இருக்கும் நான் 12.05.2017 வெள்ளிக்கிழமையிலிருந்து விலகிக்கொள்கிறேன் என்பதை பழைய ஆதன உரிமையாளருக்கும் புதிய பயனாளிகளுக்கும் அறியத்தருகிறேன்.

**திருமதி ஞானகுமாரி சிவநேசன் "கமலை"**
**மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம்.**

**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து**
**கூறுவிலை கோரல்**

எமது சங்கத்திற்கு சொந்தமான இல.373, பிரதான வீதி (பஸ்ரியன் சந்திக்கு அருகில்) அமைந்துள்ள கட்டடத்திற்கு கீழ்காண் வேலைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. தங்களின் கூறுவிலைகளை 2017.06.05 ஆம் திகதிக்கு முன்னர் " தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ -து), இல. 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் " என்னும் முகவரிக்கு மூடிய உறையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

வேலை விவரம் - 01. கட்டடத்திற்கான மின்இணைப்பு
02. கட்டடத்திற்கான வர்ணப்பூச்சு வேலை

கட்டடத்தை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பார்வையிட்டு தங்களின் கூறுவிலைகளை சமர்ப்பிக்க முடியும். அலுவலக நேரம் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி - மாலை 4.30 மணி வரையிலும் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரையும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 021 222 2587

**தலைவர்**
**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ - து)**
**யாழ்ப்பாணம்.**

**வீடு வாடகைக்கு**

பழைய பூங்கா வீதியில் சுண்டிக்குளியில் 4 அறைகளும் இரண்டு பெரிய Double Hall. மேல் மாடியில் பெரிய Hall. 4 கார்கள் விடக்கூடிய தரிப்பிட வசதியும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**076 602 3324**

**பெயர்மாற்றம்**

இல 962, உழவனூர், தம்பிராசபுரம், புன்னைநீராவி கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட **சின்னையா கோவிந்தசாமி** ஆகிய எனது பெயரை இன்று முதல் **செல்லத்துரை கோவிந்தசாமி** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**செல்லத்துரை கோவிந்தசாமி**

**NORTH LANKA IIT**

இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

**Master of Education (M.Ed.)**

✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்

Duration: 1 Year    Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

**B.Sc. in Physical Education And Sports**

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

**Master of Business Administration (MBA)**

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 18 Months    Entry Qualification: Any Degree

**Master of Public Administration (MPA)**

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 18 Months    Entry Qualification: Any Degree

Contact Persons:
Mr.Kanthaiya Sivaraja, Program Co-ordinator, NLIIT, Ph: 0775532402
Dr.Sithambaram Mohan, Human Resource Head, NLIIT, Ph: 0776030507

**B.Sc. in Computer Science**

✓ UGC Approved ■ Duration: 3 Years ■ Entry Qualification: O/L or A/L

**B.Sc. in Computer Science (Top Up)**

✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: 2 Years Diploma / HND

**M.Sc. in Computer Science**

✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: Any Degree

**கற்கைநெறிகள் ஆரம்பமாகியுள்ளன**

North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna. Ph: 0767504535 / 0214927088

# வடக்கு வலய உதவிப் பணிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம், மே 23



புத்தூரைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் காணி அமைச்சின் கீழ் உள்ள காணி சீர் திருத்த ஆணைக்குழுவால் யூன் மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு வலய உதவிப் பணிப்பாளர் ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்சமயம் கோப்பாய் பிரதேச செயலகத்தில் காணிப்பயன் பாட்டுத்திட்டமிடல் உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார். இவர் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் ஆங்கிலமொழிபெயர்ப்பாளராவார். (ற)


## 19 ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் தூ.போல் கஜேந்திரன்

(ஆண்டு - 07 சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)

பத்தொன்பது ஆண்டுகள்
சென்றாலும் பாசம் விட்டுச்
செல்லுமோ !
மானுடம் உள்ள வரை
மாறுமோ மனக்கவலை !

என்றும் உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்

தோற்றம் 12.10.1986 மறைவு 23.05.1998

வே.தூயகுமாரன்
இல.60, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

### தேவநாயகம் அஜித் வின்சிலோ



பிறப்பு :-27.12.1980
இறப்பு :-21.05.2017

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவநாயகம் அஜித் வின்சிலோ காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(23.05.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுண்டுக்குளி சனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பரியோவான் திருமுழுக்குனர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.
077 609 3114

5/4, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி.


# பூமலர்ந்தான் கிராமத்தில் பாடசாலைக்கு அடிக்கல்

மன்னார், மே 23

ஆரம்பப் பாடசாலைக்கான அடிக்கல் பூமலர்ந்தான கிராமத்தில் நேற்று நடப்பட்டது. மன்னார் சமணங்குளம் பகுதியில் வாழ்ந்த மக்கள் அங்கு ஆண்டுதோறும் ஏற்படும் மல்வத்தோயாவின் நீர்ப்பெருக்கம் காரணமாக வருடாந்தம் இடம்பெயர வேண்டியிருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பூமலர்ந்தான் கிராமத்தில் தங்க வைக்கப்பட்டனர். 256 குடும்பங்கள் இவ்வாறு குடியமர்த்தப்பட்டனர். தங்க வைக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள மாணவர்களின் கல்வி என்பது பெரும் நெருக்கடியாகவே காணப்பட்டது. இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் வட மாகாண கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட வட மாகாண கல்வி அமைச்சு தற்போது அந்தப் பகுதியில் தரம் 1 முதல் தரம் 5 வரையான ஓர் பாடசாலையை அமைக்க முன்வந்துள்ளது. (ற-101)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 . 02 . 1953



விண்ணில் 30 . 04 . 2011

அமரர் செல்லம்மா இராசேந்திரம்

கண்ணை இமைகாப்பது போல் காத்தெடுத்த எம் அம்மா
கண்ணிமைக்கும் பொழுதினிலே
கண்ணீர் சுமக்க வைத்தோடிப் போனீரோ
மண்ணில் நீங்கள் மறைந்து
ஆண்டுகள் ஆறாகிப் போனதுவோ?
மழலைகள் நாம் என்றும் அழியா நினைவுடன்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
மீசாலை பிருந்தா ஸ்டோர்ஸ்,
இராசேந்திரம் அன் சன்ஸ்

இராசேந்திரம்
குடும்பத்தினர்.


# ஆவணம் இன்றி சாரத்தியம் 3,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம்,மே 23

காப்புறுதிப் பத்திரமின்றியும், வருமான வரிப்பத்திரமின்றியும் வாகனம் செலுத்தியவருக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டார். அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-12)


## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 07 . 1943



உதிர்வு 21 . 05 . 2017

### திருமதி செல்லப்பாக்கியம் (திரவியம்) இராமச்சந்திரன்

இன்பர்சிட்டி - பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பாக்கியம் இராமச்சந்திரன் 21.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றஇராமச்சந்திரனின்அன்புமனைவியும், அம்பிகா(நோர்வே), அகிலா (சுவீடன்), சிவதாஸ் (நோர்வே), முருகதாஸ் (நோர்வே), தேவிகா, ராதிகா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலோகநாதன் (நோர்வே), உதயகுமார் ( சுவீடன்), ரங்கநாயகி (நோர்வே), கீதா (நோர்வே), யோகேஸ்வரன், ஜெயகாந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

(ANE/ 0176)(11)

தகவல்
குடும்பத்தினர்.

021 226 3979



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி தெ. மங்கையற்கரசி அம்மா

அன்னை மடியில் 02.11.1944
இறைவன் அடியில் 23.04.2017

கண்ணிமைக்கும் கணப்பொழுதினை விட
கடுகதியாய் கரைந்ததுவோ 31 நாள்கள் ஐயோ அம்மா !
உண்மையாயே நீ இல்லையோணை ?
உன்னைப்போல் ஓர் அன்னை உலகில் உண்டோ என் தாயே !
அம்மா வார்த்தைகள் இல்லையணை
நாம் படும் துயரை வர்ணிக்க
கண்ணீர் சொரிய இறைஞ்சுகிறோம் இறைவனை
உன் ஆத்ம சாந்திக்காய்.

ஓம் சாந்தி !

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

அரசு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுத்தால்

# சுதந்திர தினத்தில் போர் வெற்றியை கொண்டாடலாம்

## நீதி அமைச்சர் ஆலோசனை

கொழும்பு,மே 23



போர் வெற்றித் தினத்தை நாம் கொண்டாடி வரும் நிலையில், மறுபுறம் வடக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இது இலங்கைக்குச் சாபமாக அமைந்துள்ளது. அரசு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்குமாயின், சுதந்திர தினத்தில் போர் வெற்றித் தினத்தையும் கொண்டாட முடியும். இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார். மகரகம இசிபதனாராம விகாரையில் இடம்பெற்றபடையினர் நினைவு தினத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,இந்த நாட்டின் கொடிய போரை முடிவுக்கு கொண்டுவந்த நடவடிக்கையில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மேற்கொண்ட நகர்வுகள் மிகவும் மதிக்கத்தக்கவை. அதேபோன்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு படையினரையும் நாம் மதிக்க வேண்டும். அவர்களின் முயற்சி இல்லாது இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியாது. அதேபோன்று போர் வெற்றித் தினத்தைக் கொண்டாடும் போது, நாம் அரசியல் பிரிவினை இல்லாது அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டும்.இந்த நிகழ்வில் பாகுபாடு இருக்கக் கூடாது. போர் வெற்றிக் கொண்டாட்டத்தில் அவர்களின் பங்களிப்புக்கும் முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும். இராணுவ வெற்றித் தினத்தை ஒருபுறம் நாம் கொண்டாடிய போதிலும், மறுபுறம் ஒரு இனம் தமது இன அழிப்புத்தினமாக இதனை நினைவு கூர்ந்து வருகின்றது. ஆகவே இவ்வாறான ஒரு மோசமான நிலைமையில் நாம் செயற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இலங்கையின் சுதந்திர தினம் போன்ற ஒரு தினத்தில், பெப்ரவரி நான்காம் திகதியில் இந்தத் தினத்தையும் இணைத்து எம்மால் கொண்டாட முடியுமாயின், அதுவே இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் அமையும். ஆகவே அரசு கொள்கை ரீதியில் ஓர் தீர்மானம் எடுக்குமாயின், அனைவரும் பொதுவான ஒரு தினத்தில் இராணுவ வெற்றித் தினத்தையும் கொண்டாட முடியும். வடக்கில் பொதுமக்கள் தமது உறவுகளை நினைவு கூர எந்தத் தடையையும் நாம் விதிக்கவில்லை. இறுதிப் போரில் பொதுமக்கள் இறந்தனர். அவர்களை நினைவு கூருவது தவறில்லை. ஆனால் புலிகள் இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒரு ஆயுத அமைப்பாகும். அவர்களை நினைவுகூர அனுமதி இல்லை. அதையும் இவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். எனினும் அமைதியான வகையில் மக்கள் செயற்பட்டு வருவார்களாயின், அரசு அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படும். நாட்டின் இன ஐக்கியம், தேசிய ஒற்றுமை என்பதைப் பலப்படுத்த வேண்டும். அதில் அதிக அக்கறையுடன் அரசு செயற்பட்டு வருகின்றது. அதேபோல் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் வகையில் நாம் மிகவும் விரைவான நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். அவ்வாறு இருக்கையில் ஒருசிலர் தொடர்ந்தும் இனவாதத்தைக் கையில் எடுத்துகொண்டு, சில மோசமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். கருத்துக்கள் தெரிவிக்கச் சகலருக்கும் உரிமையுள்ளது. ஆனால் முன்வைக்கும் கருத்துக்கள் மூலம் நாட்டில் எந்தச் சந்தர்ப்பத்திலும் குழப்பங்கள் ஏற்படக்கூடாது. நாட்டின் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தும் சகல நகர்வுகளையும் அரசு என்ற ரீதியில் நாம் முன்னெடுத்துச் செயற்படுவோம் -என்றார். (ஐ)

---

# குற்றமிழைக்கும் அமைச்சர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு,மே 23



குற்றம் இழைக்கும் அமைச்சர்கள், அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும். இவ்வாறு மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டின் மக்களுக்காகச் சேவையாற்ற முடியாத அமைச்சர்கள் அந்தப் பதவிகளை வகிப்பதில் எவ்வித பயனும் கிடையாது. நாட்டு மக்களின் சொத்துக்கள் களவாடப்படுமானால் அல்லது மோசடி செய்யப்படுமானால் அவ்வாறானவர்கள் பதவியில் இருக்கக் கூடாது.

நாம் பலவீனமாகச் செயற்பட்டால், உரிய முறையில் கடமையாற்றத் தவறினால் எம்மைப் பதவியிலிருந்து நீக்குவதில் பிரச்சினை கிடையாது. எந்தவொரு அமைச்சுப் பதவி கொடுக்கப்பட்டாலும், அதனை ஏற்றுக்கொண்டு செயற்பட நான் தயார்" - என்றார். (ஐ)

---

# பிலியந்தலையில் துப்பாக்கிச்சூடு; சந்தேகநபர்கள் மூவர் கைது

கொழும்பு,மே 23

பிலியந்தலையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய 44 வயதுடைய பெண்ணொருவர் உட்பட 22 வயதுடைய இளைஞர்கள் இருவரும் அங்கமப் பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

குற்றம் புரிய உதவியமை, குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்கியமை மற்றும் பொய்யான தகவல்களை வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டு களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரை இலக்கு வைத்து கடந்த 9 ஆம் திகதி பிலியந்தலை மொரட்டுவை அரச வங்கிக்கு முன்னால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. சம்பவத்தில் பொலிஸ் அதிகாரியொருவரும், சிறுமியொருவரும் உயிரிழந்தனர், இரு சிறுவர்களும், இரு பொலிஸ் அதிகாரிகளும் காயமடைந்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

---

# அத்துரலிய தேரரின் வாகனம் விபத்து

## பெண் ஒருவர் காயம்

கொழும்பு,மே 23

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் பயணம் செய்த வாகனம் புத்தளம் பிரதேசத்தில் விபத்துக்குள்ளானது. புத்தளம் அனுராதபுரம் வீதியின் கருவலகஸ்வெவ பிரதேசத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. தேரர் பயணம் செய்த வாகனம், மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், 52 வயதான முதியன்சே லாகே பத்மினி என்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் காயமடைந்தார். காயமடைந்த பெண் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதே வேளை, விபத்தின் பின்னர் தேரர் வேறு வாகனத்தில் சென்று விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. வாகனத்தின் சாரதியை கருவலகஸ்வெவ பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

நீங்கா நினைவலைகள்

44 ஆம் ஆண்டு | ஓராண்டு நினைவஞ்சலி





கந்தையா இரத்தினம்
அன்னை மடியில் 24.06.1924 ஆண்டவன் அடியில் 13.06.1973


திருமதி மகேஸ்வரி இரத்தினம்
அன்னை மடியில் 20.02.1931 ஆண்டவன் அடியில் 03.06.2016

திதி: 23.05.2017

கண்ணிமைக்கும் பொழுதினிலே காலனவன் காற்றாய்க் கொண்டு சென்றதென்ன காலமெல்லாம் எம்மைவிட்டுப் போனதேனோ?
ஆண்டொன்று பட்டென்று போனதென்ன? கண்ட கனவுகள் நனவாகும் முன்னே காலனவன் சடுதியாய் அழைத்ததேனோ?

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை அம்மா ஆயிரம் இருந்தாலும் உங்கள் அன்புக்கு ஈடாகுமோ?
என்றும் உங்கள் நினைவுடன் தங்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

இணுவில் வீதி, மானிப்பாய். இ.ஜெயக்குமாரன் (மகன் - கிளி)



# மேற்கு மோசூல் நகரில்
# நான்கு கிராமங்கள் ஈராக் படைகளிடம்

பக்தாத், மே 23
மேற்கு மோசூலில் உள்ள நான்கு கிராமங்கள் ஈராக் படைகளின் பிடியில் வந்துள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது.
இந்த நிலையில் மேற்கு மோசூலின் கைரவான் பகுதியில் உள்ள நான்கு கிராமங்கள் ஈராக் படைகளால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன. கைரவான் பகுதி டல் அபார் நகரையும், சிரிய எல்லைகளையும் இணைக்கும் பகுதியாகும். இந்த நான்கு கிராமங்களும் ஐ.எஸ். அமைப்பின் வினியோக பாதைகளாக இருந்த நிலையில் இதன் மீட்பானது அந்த அமைப்புக்குப் பெரும் பின்னடைவு என்று கருதப்படுகிறது.
"கைரவான் பகுதிகளைக் கைப்பற்றியமை கிட்டத்தட்ட வெற்றிபெற்றதற்குச் சமம். இந்த இராணுவ நடவடிக்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்குப் பெரும் உயிர்ச்சேதமும் பொருள் சேதமும் ஏற்படுத்தப்பட்டன. மேற்குமோசூலில் 90 சதவீதமானவை மீட்கப்பட்டு விட்டன. ஏனையவை மிக விரைவில் மீட்கப்படும்" என்று ஈராக்ராணுவ செய்தித் தொடர்பாளர் யாஹ்யா ரசூல் தெரிவித்தார். (ம)



ஆப்கானில் துயரம்

## தலிபன்களின் தாக்குதலில் 25 பொலிஸார் உயிரிழந்தனர்

காபூல், மே 22
ஆப்கானிஸ்தானின் ஜபூல் மாகாணத்தில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 25 பொலிஸார் உயிரிழந்தனர்.
ஜபூல் மாகாணத்தின் முக்கிய சோதனைச் சாவடியொன்றில் பணியில் ஈடுபட்டிருந்த வேளை இந்தத் தாக்குதல் தலிபான்களால் நடத்தப்பட்டது. 25 பொலிஸார் உயிரிழந்தனர். 15 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
"எதிர்பாராத நேரத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் கோழைத்தனமான செயல். நிச்சயம் இதற்குரிய பதிலடி எம்மால் கொடுக்கப்படும். இது ஓர் சவாலான ஆண்டாக இருக்கப்போகிறது" என்று ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)

## புதிய உயிரினத்துக்கு அப்துல் கலாமின் பெயர்

வொஷிங்டன், மே 23
பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் வடிகட்டிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய உயிரினத்துக்கு நாசா விஞ்ஞானிகள் இந்தியாவின் ஏவுகணை விஞ்ஞானி அப்துல்கலாமின் பெயரைச் சூட்டியுள்ளனர்.
விண்வெளியில் பன்னாட்டு விண்வெளி நிலையத்தை அமைத்து, பன்னாட்டு விஞ்ஞானிகள் ஆய்வுப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மிதக்கும் விண்வெளி நிலையம், பூமியில் இருந்து கிட்டத்தட்ட 400 கிலோமீற்றர் உயரத்தில் உள்ளது. இதன் வடிகட்டிகளில் ஒருவிதமான புதிய உயிரினத்தை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவின் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த உயிரினத்துக்கு 'சொலிபாசில்லஸ் கலாமி' என்று என்று பெயரிடப்பட்டது. அப்துல் கலாமின் பெயரை மாதிரியாகக் கொண்டே இந்தப்பெயர் சூட்டப்பட்டது என்று நாசா நிறுவனம் அறிவித்தது. (ம)




# மீண்டும்
# தென்கெ

சியோல், மே 23
வடகொரியா மற்றுமொரு ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டது என்று அதன் அயல்நாடும் எதிரி நாடுமான தென்கொரியா தெரிவித்தது.
பன்னாட்டுச் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வந்தது. தென்கொரியாவுக்கும் ஜப்பானுக்கு எதிராகவே தனது சோதனைகள் நடைபெறுகின்றன என்று அந்த நாடு பகிரங்கமாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து கொரியத் தீபகற்பத்தில் தனது போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளது அமெரிக்கா. எனினும் வடகொரியாவின் சோதனைகள் தொடர்ந்துகொண்டேதான்

## பழைமையான கேளிக்கை விடுதி அமெரிக்காவில் மூடப்பட்டது

நியூயோர்க், மே 23
அமெரிக்க மக்களிடம் மட்டுமல்லாது உலகம்எங்கும் மிகவும் பிரபல மாகியிருந்த ரிங்ளின் பிரதர்ஸ் கேளிக்கை நிறுவனம் நேற்றுமுன்தினம் மூடப்பட்டது.
கடந்த 146 ஆண்டுகள் காலமாக இந்த நிறுவனம் இயங்கி வந்தது. 13 நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் இதில் பணிபுரிந்தனர். இந்த நிறுவனம் வனவிலங்குகளை அதிகளவில் பயன்படுத்துகிறது என்று அவ்வப்போது எதிர்ப்புக்களும் எழுந்தன.




இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தனது இறுதிக் காட்சியை நடத்தி முடித்துள்ளது ரிங்ளின் பிரதர்ஸ்.
கேளிக்கை நிறுவனம் மூடப்பட்டமைக்குப் பலர் வருத்தம் தெரிவித்த போதிலும் விலங்குநல ஆர்வலர்கள் அதனை வரவேற்றுள்ளனர். (ம)

## சட்டவிரோத அகதிகளை வெளியேற்றுகிறது ஆஸி.

சிட்னி, மே 23
ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள அகதிகளை வெளியேற்ற அந்த நாடு முடிவுசெய்துள்ளது. முதல் கட்டமாக 7 ஆயிரத்து 500 அகதிகள் வெளியேற்றப்படவுள்ளனர்.
ஆஸ்திரேலியா நாட்டில் இலங்கை, மியான்மர், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். முறையான காரணங்கள் இல்லாமல் சிலர் தங்கியிருப்பதாகவும், இவர்களால் அரசுக்கு பெரும் நிதிச்சுமை ஏற்படுவதாகவும் பல்வேறு கட்சியினர் குற்றம் சாட்டி வந்தனர்.



இந்த நிலையில், அகதிகளாகப் பதிவு செய்வதற்குப் போலியான காரணங்களை அளித்து சட்டவிரோதமாக அங்கு தங்கியிருக்கும் 7 ஆயிரத்து 500 பேரை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 7 ஆயிரத்து 500 பேரும் வெளியேற்றப்பட்டதும் பின்னர் படிப்படியாக 30 ஆயிரம் பேர் வரை வெளி யேற்றப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# ம் ஏவியது வடகொரியா;
# கொரியா வெளிப்படுத்தல்



உள்ளன. கடந்த வாரமும் அந்த நாடு ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இதுதொடர்பான ஒளிப்படங்கள் பன்னாட்டு ஊடகங்களால் வெளியிடப்பட்டிருந்தன. சோதனைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.

கூடுதல் பொருளாதாரத் தடையை விதிக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என்றும் அந்த நாடு அழைப்புவிடுத்தது.

எனினும் வடகொரியா நேற்றுமுன்தினம் மற்றொரு ஏவுகணைச் சோதனையை நடத்தியது என்று தென்கொரியா தெரிவித்தது. இந்த ஏவுகணை 500 கிலோமீற்றர் தூரம் பாய்ந்தது என்றும் தென்கொரியா தெரிவித்தது.

ஏவுகணைச் சோதனை வெற்றிபெற்றமைக்கு வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தனது பாராட்டைத் தெரிவித்தார். (ம)



ஏஞ்சல் பெங் என்ற எட்டுவயதுடைய தாய்வான் நாட்டுச் சிறுமி, பிறந்து 9 மாதக் குழந்தையாக இருந்தபோது ஓர் விபத்தில் சிக்கினார். இதில் அவரது உள்ளங்கை துண்டிக்கப்பட்டது. தற்போது அவருக்கு நுட்பமான உணர்திறனுடைய செயற்கைக் கை பொருத்தப்பட்டுள்ளது. சாங் லிய்ங் என்ற தாய்வான் நாட்டு அறிவியலாளரே இந்தச் செயற்கைக் கையை உருவாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



ஈரானின் அதிபர் தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அல் ரவுஹானி வெற்றிபெற்று ஆட்சியைத் தக்கவைத்தார். இந்த வெற்றி அவரது ஆதரவாளர்களால் பெரும் எடுப்பில் நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கிடைத்த வெற்றி என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சவூதியின் வாள் நடனத்தை ஆடினார் டொனால்ட் ட்ரம்ப்

ரியாத், மே 23

தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக சவூதி அரேபியா சென்றுள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், அந்த நாட்டின் பாரம்பரிய வாள் நடனம் ஆடினார். இந்தச் சம்பவம் பல பன்னாட்டு ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக ஆகியுள்ளது.

ட்ரம்ப் - சவூதி அரேபிய மன்னர் சல்மான் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அப்போது இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் மிகப்பெரும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 350 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி வாய்ந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின என்று சொல்லப்படுகிறது.

பின்னர், ட்ரம்ப் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். இந்நிலையில், முபாரா மாளிகையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற ட்ரம்ப் அந்த நாட்டின் பாரம்பரிய நடனமாக அறியப்படும் 'அர்தா' எனும் வாள் நடனமாடினார். (ம)




## பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
## விலைமனுக் கேள்விக்கான அழைப்பு
## அழுக்குத்துணிச் சலவைகள் சேவைகளுக்கான பெறுகைகள் -2017/2018

திணைக்கள பெறுகைக்கு தகுதியான, தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோரப்படுகின்றது.

**வைத்தியசாலைகளுக்கான அழுக்குத்துணிச் சலவைகள் சேவை**

| பெறுகை இல(01) | பிரிவு ரீதியாக வைத்தியசாலைகள் |
|---|---|
| H/LS/2017/01 | பருத்தித்துறை (அ)ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை (பகுதி I),பிரதேச வைத்தியசாலைகள்:- வல்வெட்டித்துறை, மருதங்கேணி, அம்பன், கரவெட்டி, ஆரம்ப சுகாதாரபராமரிப்பு நிலையம் பருத்தித்துறை. |
| H/LS/2017/02 | பருத்தித்துறை (ஆ)ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை (பகுதி 11) |
| H/LS/2017/03 | சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை சாவகச்சேரி, பிரதேசவைத்தியசாலைகள் :-வரணி, கொடிகாமம், ,ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் கைதடி |
| H/LS/2017/04 | ஊர்காவற்றுறை ஆதாரவைத்தியசாலை ஊர்காவற்றுறை, பிரதேசவைத்தியசாலைகள்:- அனலைதீவு, காரைநகர், நயினாதீவு |
| H/LS/2017/05 | தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலை தெல்லிப்பளை, பிரதேசவைத்தியசாலை:- அளவெட்டி, ஆரம்பசுகாதார பராமரிப்பு நிலையங்கள்:- இளவாலை, குரும்பசிட்டி |
| H/LS/2017/06 | கோப்பாய் பிரதேசவைத்தியசாலைகள்:- கோப்பாய், அச்சுவேலி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள் :- புத்தூர், உரும்பிராய் |
| H/LS/2017/07 | சங்கானை பிரதேசவைத்தியசாலைகள்:- சங்கானை, வட்டுக்கோட்டை, ஆரம்பசுகாதார பராமரிப்பு நிலையங்கள்:-வட்டுக்கோட்டை, தொல்புரம் |
| H/LS/2017/08 | சண்டிலிப்பாய் பிரதேசவைத்தியசாலைகள :-பண்டத்தரிப்பு, மானிப்பாய் |
| H/LS/2017/09 | வேலணை பிரதேசவைத்திய சாலைகள்:-வேலணை, புங்குடுதீவு,நெடுந்தீவு |
| H/LS/2017/10 | நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் பிரதேசவைத்தியசாலைகள்:-கோண்டாவில், குருநகர், ஆரம்பசுகாதார பராமரிப்பு நிலையங்கள்:- கொக்குவில் சுன்னாகம், இணுவில், புன்னாலைக்கட்டுவன், உடுவில், ஏழாலை மற்றும் மார்புநோய் சிகிச்சை நிலையம் பண்ணை. |

*ஒவ்வொரு பிரிவுக்கும் மீளளிக்க முடியாத கேள்விபத்திர பணம் ரூபா 300.00 ம் உத்தரவாத முறி ரூபா 3,000/= ம் செலுத்தப்பட வேண்டும்.

1. விலைக் கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒருநபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
2. விலைக்கேள்விதாரர் தமது சேவையினை தடங்கலின்றி மேற்கொள்வதற்கு யாழ்மாவட்டத்தில் ஆகக்குறைந்தது கிளை நிறுவனமொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
3. பெறுகைகளின் பிணைப் பொறுப்பு மேலேகாட்டப்பட்டுள்ள தொகை செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்விபத்திரங்களையும் அலுவலகநேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் (021 222 2278/ 4557 Ext 20 ) யாழ் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளரிடருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் பெறுகைப் பத்திரங்களிற்கான விண்ணப்படிவத்தினை பூர்த்தி செய்து மேற் காட்டிய பெறுகைக்கு மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலகநாட்களில் 23.05.2017 தொடக்கம் 12.06.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (12.30 தொடக்கம் 13.30 மணிதவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் 13.06.2017 திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர்(நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்."**அழுக்குத்துணிச் சலவைகள் சேவை 2017/18, விண்ணப்பிக்கும் வைத்தியசாலை**" போன்றவிபரங்கள் கடிதஉறையின் இடது பக்கமேல்மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
7. விலைக்கேள்விகள் 13.06.2017 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும் விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
8. கிடைக்கப் பெற்றவிலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்தியகலாநிதிக.நந்தகுமாரன்**
**தலைவர்**
**பிராந்தியபெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# காத்திருக்கும் ஆபத்து!

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச 2015ஆம் ஆண்டு தேர்தலில் எவரும் எதிர்பாராத வகையில் தோல்வியடைந்தார். அவரது தோல்விக்கான காரணங்களில் ஒன்று, பொதுபல சேனா அமைப்பு. அதேயமைப்பு இப்போது ரணில் – மைத்திரி அரசின் வீழ்ச்சிக்கும் வழிவகுத்துவிடக்கூடும் என்கிற அச்சம் எழுந்துள்ளது.

பொது பல சேனா அமைப்பை ராஜபக்ச சகோதரர்கள்தான் உருவாக்கினார்கள் என்று சொல்லப்படுகிறது. அதன் தொடக்கவிழாவில் மகிந்தவின் இளைய சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளராக இருந்தவருமான கோத்தபாய ராஜபக்ச கலந்துகொண்டிருந்தார். இதனால் இந்த அமைப்பின் பின்னணியில் ராஜபக்சக்களே இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்தது.

போரில் தமிழர்களின் ஆயுத பலம் தோற்கடிக்கப்பட்ட ஒரு நிலையில், முஸ்லிம்களை ஒடுக்குவதற்காகவே பொதுபல சேனா போன்ற கடும் தீவிரவாத பௌத்த அமைப்புகள் உருவாக்கப்பட்டன என்கிற கருதுகோள் இருந்தது. இந்தக் கருத்தின் சரி, பிழைகளுக்கு அப்பால், அந்தக் காலத்தில் இந்தக் கருத்தும், பொது பல சேனாவின் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் சிறுபான்மை மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குச் செலுத்தின. மகிந்தவின் தேர்தல் தோல்வியை உறுதிப்படுத்துவதிலும் அது பெரும் பங்கையாற்றியது.

முஸ்லிம் சமூகத்தை மகிந்தவுக்கு எதிராக ஒன்றிணைத்ததில் பொதுபல சேனாவுக்குப் பெரும் பங்கிருந்ததை எல்லா அரசியல் ஆய்வாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள் மட்டுமல்ல, மகிந்தவேகூட ஏற்றுக் கொண்டிருக்கிறார். தேர்தல் தோல்வியின் பின்னர் முஸ்லிம்களைச் சந்தித்த பல இடங்களில் மகிந்த அதனைச் சொல்லியும் காட்டியிருந்தார்.

பொதுபல சேனாவை உருவாக்கியது மேற்குலகமே என்றும் அந்த அமைப்புத்தன்னைத் தோற்கடிப்பதற்காகத்தான் உருவாக்கப்பட்டது என்பதைத் தான் அறிந்து கொள்ளாமல் இருந்துவிட்டார் என்றும், அவர் முஸ்லிம்களிடம் பச்சாதாபப்பட்டிருக்கிறார். அவரது கருத்துப்படி, பொதுபல சேனாவை முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட வைத்து சிறுபான்மை இனங்களிடம் தனக்கெதிரான வெறுப்பை வளர்த்துச் சதி செய்து தன்னை மேற்கு நாடுகள் தோற்கடித்துவிட்டன.

அதன் உண்மை, பொய்களுக்கு அப்பால், பொது பல சேனாவின் அண்மைக் கால நடவடிக்கைகள் மீதும் அத்தகையதொரு சந்தேகம் எழுகிறது.

அமைச்சர் மனோ கணேசனுடன் அவரது அமைச்சுக்கே சென்று வாக்குவாதப்படுவது, முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது, அதன் ஊடாகப் பெரும்பான்மைச் சிங்கள பௌத்த சமூகத்தின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பி அதற்கூடாக சமூக அமைதியின்மையையும், இனங்களுக்கு இடையிலான மோதலையும் வளர்த்து இந்த அரசு ஒரு கையாலாக அரசு என்கிற எண்ணப்பாட்டை மக்கள் மனதில் வளர்ப்பது என்கிற சதி, பொது பல சேனாவின் நடவடிக்கைகளின் பின்னணியாக இருக்கும் என்றே அஞ்சவேண்டியிருக்கிறது.

பொது பல சேனாவை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்துவதற்கு மைத்திரி – ரணில் கூட்டு அரசும் தவறியிருக்கிறது. பல்லின, பல மத மக்கள் வாழும் இலங்கை போன்ற ஒரு நாட்டில், பௌத்த மதத்துக்கு அரசும், அரசியல்வாதிகளும் அளவுக்கதிகமான முக்கியத்துவத்தைக் கொடுப்பதால், பொதுபல சேனா போன்ற அமைப்புகளால் துணிந்து அரசின் அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்தி அதனுடன் மோத முடிகிறது.

பொது பல சேனாவைக் கட்டுப்படுத்த மைத்திரி – ரணில் நடவடிக்கை எடுக்காததன் விளைவு, தற்போதைய அரசு மீது சிறுபான்மை மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலமையைத் தோற்றுவிக்கிறது. இது நல்லதல்ல. தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையின் தேவையை இது தெளிவாக உணரவைத்துள்ளது என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மட்டக்களப்பில் கூறியிருப்பதும் இதனை மனதில் வைத்தே. எனவே பொதுபல சேனாவைக் கட்டுப்படுத்த, அடக்க இந்த அரசு தவறுமானால் அது இந்த ஆட்சியின் வீழ்ச்சிக்கான அடித்தளமாகவும் மாறக்கூடும். அரசு விரைந்து செயற்படுவதே நல்லது.

# ஈழத் தமிழர்களையும் கணக்கில் எடுக்க வேண்டும்

சேரலாதன்

கடந்த ஐந்து ஆண்டுகளில் சிரியாவில் 15 ஆயிரம் சிறைக் கைதிகள் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது. சிரிய அரசுத் தலைவருக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்ட பின்னர், இந்த அவலம் நிகழ்ந்துள்ளது. ஆனால் ஆட்சி அதிகாரத்திலுள்ள அரசுக்கு வேண்டாதவர்கள் அரசினாலேயே படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் வேறு நாடுகளிலும் இடம் பெற்றிருக்கின்றன.



இந்து சமுத்திரத்தின் முத்து என இலங்கையை வர்ணிப்பார்கள். மிகச் சிறிய நாடாக இருந்தபோதிலும், இயற்கை வளங்கள் இங்கு குறைவின்றிக் காணப்படுகின்றன. இலங்கையின் இயற்கை எழிலைக் கண்டு ரசிப்பதற்கு இலட்சக் கணக்கான வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஆண்டுதோறும் இங்கு படையெடுக்கின்றனர். தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு பிரதான மொழிகள் இங்கு வழக்கில் உள்ளன.

### நாடு சுதந்திரம் அடைந்த கையோடு தலைதூக்கிய இனவாதப் போக்கு

ஆனால் இலங்கையில் பிரச்சினைகள் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. தமிழர்களுக்கு எதிரான இனவாதம், நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தொடர்ந்த வண்ணமே உள்ளது.

பெரும்பான்மையின அரசியல்வாதிகள், இனவாதத்தைத் தூண்டுவதன் மூலமாகவே அரசியலில் பிரகாசிக்க முடியுமென்பதைப் புரிந்துகொண்டு அதன் வழி நடக்கத் தலைப்பட்டனர். எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க என்கின்ற மெத்தப்படித்த கனவான் இனவாதத்தைத் தூண்டியதன் மூலமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஏனைய பெரும்பான்மையினத் தலைவர்களும் இவரது வழியிலேயே அரசியலைத் தொடர்கின்றனர். நாடு குருதியில் குளிப்பதை இவர்கள் ஒரு பொருட்டாக நினைக்கவில்லை.

### தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள்

இந்த நாட்டிலே 1958 இல் ஆரம்பித்து காலத்துக்குக் காலம் தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற இனக்கலவரங்களில் தமிழர்கள் மிக மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டனர். அரசின் ஆதரவு பெற்ற காடையர்கள் தமிழர்களின் உயிர்களையும், சொத்துக்களையும் வெறிகொண்டு அழித்தனர்.

1983 இல் இடம்பெற்ற கறுப்பு ஜூலைக் கலவரம், அழிக்க முடியாத களங்கத்தை சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்திவிட்டது. விடுதலைப்புலிகள் இராணுவத்தினரை திருநெல்வேலியில் வைத்துக் கொலை செய்தமைக்குப் பழிவாங்கும் நோக்குடன், தமிழர்கள் தேடித்தேடி அழிக்கப்பட்டனர். தென்பகுதியில் இருந்த தமிழர்களுக்குச் சொந்தமான அனைத்து உடமைகளும் அழிக்கப்பட்டன. அகதிகள் என்ற பெயருடன் கப்பல்களில் தென்பகுதியிலிருந்து தமிழர்கள் தாம் பிறந்த பூமிக்குத் திரும்ப வேண்டிய அவல நிலையும் ஏற்பட்டது. இதே ஜூலை மாதம்தான் வெலிக்கடைச்சிறைச்சாலையில் வைத்து அங்கிருந்த தமிழ் இளைஞர்களும், தமிழ் உணர்வாளர்களும் ஈவிரக்கமற்ற வகையில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். இவை தொடர்பாக இலங்கை அரசு அலட்டிக் கொள்ளவேயில்லை. வெளிநாடுகளும் அக்கறை செலுத்தவில்லை.

சுமார் முப்பது ஆண்டுகள் காலம் நீடித்த ஆயுதப் போரில் அதிகமான பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள் தமிழர்கள்தான். போர் காரணமாகத் தமிழர்கள் அகதிகள் என்ற பெயரைச் சுமந்து கொண்டு உலகின் பல நாடுகளிலும் தஞ்சமடைந்தனர். புலம் பெயர்ந்தவர்களால் தாயகத்தில் இருந்தவர்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் இன விகிதாசாரத்தில் தமிழர்கள் பின்னடைவைச் சந்திக்கவேண்டி நேரிட்டது.

### இறுதிப் போரில் மனித சங்காரம் நிகழ்த்திய இலங்கைப் படையினர்

இறுதிப் போரின்போது பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர் ஏராளமானவர்கள் அங்கவீனர்களாயினர். வெள்ளைக்கொடியுடன் படையினரிடம் சரணடையச் சென்றவர்களும் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்டனர். புலிகளை அழிக்கிறோம் எனக் கூறிக் கொண்டு ஒன்றுமறியாத அப்பாவிகளைக் கொன்றமை பன்னாட்டு விதிகளை மீறியதொரு செயலாகும். இது தொடர்பாகப் பன்னாட்டுச் சமூகம் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் அதனால் பயனொன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இன்று சிரியாவில் கைதிகள் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டமை தொடர்பாகப் பேசுகின்ற அமெரிக்க வல்லரசின் கண்களில், ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்த அவலங்கள் தெரியவராதது ஆச்சரியம்தான். இறுதிப்போரில் புலிகளை அழிப்பதற்கான முக்கியமான தகவல் பரிமாற்றங்களை அமெரிக்கா இலங்கையுடன் பகிர்ந்து கொண்டது. இதன் காரணமாகவே புலிகளின் ஆயுதக்கப்பல்கள் இலகுவாக அழிக்கப்பட்டன. இதனால் போரிடும் ஆற்றலைப் புலிகள் இழக்க நேரிட்டது. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எனக் கூறிக்கொண்டு இலங்கை அரச படைகள் நடத்திய இறுதிப் போருக்கு இந்திய, அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட முக்கியமான நாடுகள் தமது உதவியை வழங்கின.



ஆனால் இந்தப் போரில் கொல்லப்பட்ட தமிழர்கள் தொடர்பாக எவருமே அக்கறை காட்டவில்லை.

சிரியாவில் கொல்லப்பட்டவர்களுக்காக இன்று நீலிக் கண்ணீர் வடிக்கும் அமெரிக்கா, அன்று வகைதொகையின்றிக் கொடூரமாகக் கொல்லப்பட்ட ஈழத் தமிழர்கள் குறித்தும் ஒருகணம் மனச்சாட்சியுடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதிலும் இறுதிப்போரில் இலங்கைப் படையினர் நிகழ்த்திய 'மனித வேட்டை'யில் அமெரிக்காவின் பங்கும் இருப்பதால், அமெரிக்கா இலங்கையில் இறுதிப் போர்ப் பாதிப்புக்கள் குறித்து அக்கறை காட்டவேண்டும். அதை விடுத்து பக்கச் சார்பான அறிக்கைகளை வெளியிடுதல் அந்த நாட்டுக்குப் பெருமை சேர்க்காது.

# பளைப் பகுதித் தாக்குதல் சம்பவம் ஏற்படுத்தியுள்ள சந்தேகங்கள்

ந.லோகதயாளன்

பளை கச்சார் வெளிப்பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலையில் பொலிசார் மீது ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதான செய்தியில் உண்மை உண்டா என்பதே தற்போது அனைவரதும் முணுமுணுப் பாகவுள்ளது. ஏனெனில், காலத்திற்குக் காலம் இவ்வாறான நாடகங்களை திட்டமிட்டு அரங்கேற்றுவதில் இலங்கை அரச படையினர் கைதேர்ந்தவர்கள் என்பது வெளிப்படையானதொன்று.

ஏ9 வீதியில் முகமாலைக்கும் பளைக்கும் இடைப்பட்ட கச்சார் வெளிப்பகுதியில் இரவு வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்த அவசர பொலிசார் மீது பற்றைக்குள் மறைந்திருந்த துப்பாக்கிதாரி ஒருவரே தாக்குதல் மேற்கொண்டதாகவும், பொலிசாரும் பதில் தாக்குதல் மேற்கொண்டதாகவுமே தெரிவிக்கப்படுகின்றது. ஏ9 வீதியின் அருகில் உள்ள புகையிரதக் கடவை, வீதியில் இருந்து 4 அடி உயரம் கொண்டது. தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸ் தரப்பு கூறுகின்ற இடம் அதனையும் தாண்டி 15 மீற்றர்களுக்கு அப்பால் உள்ளது. அந்த வகையில். பொலிசாரின் காருக்கும் தாக்குதல்தாரி நின்றதாக கூறப்படும் இடத்திற்கும் இடையே சுமார் 25 மீற்றர்கள் இடைவெளி இருந்துள்ளது.

**தாக்குதல் குறித்த தகவல் ஏற்படுத்தும் சந்தேகங்கள்**

தாக்குதல்தாரி ஏ.கே ரகத் துப்பாக்கியையே தாக்குதலுக்குப் பயன்படுத்தியுள்ளார் எனப் பொலிசார் கூறுகின்றனர். அதற்குச் சாட்சியாக ஓர் இத்துப்போன துப்பாக்கியின் மேல் பாகம் (சிலேற்) தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் இருந்து மீட்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். பொலிசாரின் பதில் தாக்குதல் காரணமாக தாக்குதல் மேற்கொண்டவர் தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த பிரதேசத்தில் பொலிசாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு அதிகாலைவேளையில் அந்தப் பகுதி முழுமையாக சுற்றி வளைக்கப்பட்டது. குறித்த பிரதேசம் சல்லடை போடப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டபோதிலும் எவரும் கைது செய்யப்படவும் இல்லை. சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் எவையும் கைப்பற்றப்படவும் இல்லை.

அடிப்படையில் இதனை ஓர் மூன்றாம் தரப்பு செய்தமைக்கான எந்தச் சான்றும் காணப்படவில்லை. அதாவது குறித்த ஆயுததாரி தாக்குதல் நடாத்தியதாக கூறப்படும் இடத்தில் இருந்து கல்லொன்றால் எறிந்தாலே அது இலக்கைச் சேதப்படுத்தத்தக்க குறுகிய தூர இடைவெளியே காணப்பட்ட நிலையில் துப்பாக்கிச்சூட்டால் பொலிசாருக்கோ அவர்களது வாகனத்துக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படாதமை இங்கே முதலாவது சந்தேகத்துக்குக் காரணமாகின்றது. தாக்குதல்தாரி இருந்ததாகக் கூறும் பற்றைக்குள் ஒருவர் மறைந்திருக்கும் பட்சத்தில் பகல்வேளையிலேயே எவராலும் இனம்காணமுடியாது. அந்த நிலையில் நள்ளிரவு 12 மணியை தாண்டிய பின்னிரவில் பொலிசார் தாக்குதல்தாரி குறித்து எவ்வாறு உறுதிப்படுத்திக் கொண்டனர்? காரில் இருந்த 3 பொலிசாரிடமும் துப்பாக்கி இருந்தும் அவர்கள் தாக்குதல்தாரி மீத பதில் தாக்குதல் மேற்கொண்டும் அவற்றில் இருந்து தாக்குதல்தாரி எவ்வாறு தப்பினார்?

**பொலிஸாரால் தாக்குதல்தாரியை மடக்க முடியாமல் போனதேன்?**

தாக்குதல்தாரி குறுக்கு வீதியூடாக தப்பியோடியதாகக் கூறும் பொலிசார், தம்மிடம் இருந்த காரைப் பயன்படுத்தி ஏன் தாக்குதல்தாரியை துரத்திப்பிடிக்க முயலவில்லை.

இவற்றுக்கு அப்பால், பொலிசார் தாக்குதல் நடத்திய இடத்தில் தடயப்பொருள்களாக காட்டப்படும் இலக்கங்களான 1,2,3, துப்பாக்கி வெற்றுக்கோதுகளா எனப்பார்வையிட்டபோது, அதில் இலக்கம் 1ம் 3 ஆம் இலக்கத் தடயப்பொருள்கள் வெற்றுத் தோட்டாக்களாகவும், இலக்கம் இரண்டின் தடயப் பொருள் வெடிக்காத தோட்டாவாகவும் காணப்படு கின்றன. அவ்வாறு காணப்படும் தோட்டா கைத் துப்பாக்கி ஒன்றின் தோட்டாவை விடப் பெரிதாகவே காணப்படுகின்றது. அல்லது பொலிசார் பயன்படுத்தும் ஏ.கே.ரகத் துப்பாக்கியின் தோட்டாவைவிடச் சற்று சிறிதாகவே காணப்படுகின்றது. அவ்வாறானால். அந்தத் துப்பாக்கி எது என்கின்ற கேள்விக்கு விடைதேட வேண்டியே உள்ளது.


> ஏ9 வீதியின் அருகில் உள்ள புகையிரதக் கடவை, வீதியில் இருந்து 4 அடி உயரம் கொண்டது. தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸ் தரப்பு கூறுகின்ற இடம், அதனையும் தாண்டி 15 மீற்றர்களுக்கு அப்பால் உள்ளது. இங்கே மொத்தமாக பொலிசாரின் காருக்கும் தாக்குதல்தாரி நின்றதாக கூறப்படும் இடத்திற்கும் சுமார் 25 மீற்றர்கள் இடைவெளி உள்ளது.

**சம்பவம் குறித்துத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம்**

இவற்றின் அடிப்படையில் உண்மையில் அங்கே என்ன நடந்திருக்கும் என ஓரளவு ஊகிக்க முடியும். ஒரு சாதாரண வாகன விபத்து இடம்பெற்று, அதில் படைத்தரப்பு அல்லது தென்னிலங்கையர்கள் எவராவது தொடர்புபடுகின்றனர் என்றாலே உடனடியாக அப்பகுதிக்குள் ஊடகவியலாளர்களை உட்செல்ல இன்று வரை தடைபோடும் படைத்தரப்பு, குறித்த சம்பவத்தின்போது அங்கு சென்ற எந்த ஊடகவியலாளர்களுக்கும் தடையோ அல்லது கட்டுப்பாடுகளோ விதிக்கவில்லை. மாறாக புகைப்படங்களுக்குத் தமது முகங்களைக் காட்டவும் தவறவில்லை. அவ்வாறானால் இங்கே இடம்பெற்றது என்ன என்கின்ற பெரும் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய தரப்புக்களே தமது மௌனத்தைக் கலைத்தாக வேண்டும் .

இது படையினரது இருப்புக்கான வழியைத் தேடும் முயற்சியா? அல்லது மீண்டும் ஒரு கைது வேட்டைக்கான அத்திவாரமா என்பதே தற்போது தமிழ் மக்களிடம் எழுந்துள்ள ஐயம். இவற்றில் எதுவும் இல்லையானால், இது நிச்சயமாக பொலிசாரின் இலாபமீட்டலுக்கான எத்தனமாக இருக்குமோ என்றும் சந்தேகிக்க வேண்டியுள்ளது. அதைவிடுத்து இது திட்டமிட்ட படையினர் மீதான தாக்குதல் முயற்சியொன்றாக இருக்க வாய்ப்பில்லை என்பது நோக்கர்களது அனுமானிப்பு. அவ்விதமும் இல்லையேல், குறித்த விடயம் நிச்சயமாக திருட்டுமணல் கொள்ளையர்களுக்கு வேவு பார்க்கும் ஒருவரது செயற்பாடாக இருக்கும் வாய்ப்பையும் மறுதலிக்க முடியாது எனவும் ஓர் கருத்து முன்வைக்கப்படுகின்றது. எது எப்படியான போதிலும், இது பாதுகாப்பு தரப்பினருக்கு எதிரான ஒரு பெரிய தாக்குதலுக்கான முயற்சியாக இருக்க முடியாது என்பதே யதார்த்தம்.





## ஆசிரியருக்கான கடிதம்

### கொஞ்சமும் பொருத்தமில்லாத பொருத்து வீடு

பொருத்து வீட்டைத் திணிக்கவே மணல் விநியோகத்துக்குத் தடை விதிப்பதற்கு சிலர் திட்டமிட்டுச் செயற்படுவதாக வடக்கு முதலமைச்சர் குற்றஞ்சாட்டியிருந்தார். பொருத்து வீடுகளின் பாவனைக் காலம் 25 , 30 வருடங்கள் தானெனக் கூறப்படுகிறது. 50, 60 ஆண்டுகள் கழிந்த கல் வீடுகள் உடைக்கப்படும்போது, அங்கு சேகரிக்கப்படும் கல் மற்றும் மண் தாழ்ந்த நிலங்களை நிரப்பவும், வீதியமைப்புக்களிலும் பயன்படுத்தப்பட முடிகிறது.

இத்தகைய பொருத்து வீடுகளின் பாவனைக் காலம் கழிந்ததும் அவற்றின் சிதைவுக் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிப்பு பெரிய அளவில் ஏற்படும் என்பதால் பொருத்து வீடு, எமது சூழலுக்குப் பொருந்தா வீடென்றே கருதத் தோன்றுகிறது.

முன்னைய காலத்தில் பனை ஓலையால் வேயப்பட்ட வீடுகளின் ஓலைகள் மற்றும் கிடுகுகள் அடுத்த வேய்தலின் போது கழித்துவிடப்படும்போது தோட்டக்காரர்கள் பணம் செலுத்தி அவற்றை வாங்கிச் சென்ற காலம் ஒன்று இருந்தது.

பொருத்து வீட்டுக் கழிவுகளைப் பயன்படுத்த எவராவது மனம் கொள்வார்களா என்பது கேள்விக் குறியே.

த.வேல்முருகன்
புலோலி

### ஊருக்கடி உபதேசம் உனக்கல்லடி கண்ணே

மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மின்சார சபையும், சம்பந்தப்பட்ட தரப்பினரும் பொது மக்களை வேண்டுகின்றனர். தவறினால் நாட்டு மக்கள் கடும் மின்வெட்டை எதிர்நோக்க வேண்டி வருமென எச்சரிக்கப்பட்டு வருகிறது.

ஆயினும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதியுள்ளிட்ட கொக்குவிலில் சில பிரதேசங்களில் தெரு விளக்குகள் சில நாள்களாக அணையா விளக்குகளாகப் பகலிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. இதனால் எதிர்காலத்தில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படாதாவென அந்த வீதியால் பயணக்கும் பலரும் விமர்சித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினர் இதற்கான உரிய நடைமுறை கடைப்பிடிக்கப்பட நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது ஊருக்கடி உபதேசம்; உனக்கல்லடி கண்ணே என்ற விதத்திலான போக்குத்தான் தொடருமா?

வ.இரத்தினசிங்கம்
கொக்குவில்

# கைத்தொழில்சார் உற்பத்திகள் மூலம் பொருளாதாரம் வளம் பெறும்

## இலங்கைக்கான மலேசியத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கை தனது கைத்தொழில் சார் உற்பத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்தாது அவற்றைஎதிர்காலத்திலும் முன்னெடுத்துவருமாக இருந்தால் பொருளாதார வளர்ச்சி நிலையில் உயர்ஸ்தானத்தை இலகுவாகத்தக்க வைத்துக்கொள்ள முடியுமென்ற கருத்து இலங்கைக்கான மலேசியத் தூதுவர் வென் சஜ்டி வென் அப்துல்லாவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் விருந்தி னராக கலந்து கொண்டு'இலங்கைமற்றும்மலேசியாவுக்கு இடையேயான இருதரப்பு வர்த்தகம்' என்ற தலைப்பின் கீழாக உரை நிகழ்த்தும் போதே அவரால் மேற்கண்டவாறு கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

"மலேசியா 1970 ஆம் ஆண்டு முதல் விவசாய, பொருளாதாரம்மற்றும்உற்பத்திப் பொருளாதாரம் என்பவற்றில் அதிக கவனத்தை செலுத்தி வந்ததன் காரணமாக அபிவிருத்தி தொடர்பிலான சுட்டெண் அதிகரித்தது. அதே வேளை கடந்த 6 வருட காலப்பகுதியினுள் மலேசியாவின் பொருளாதாரம் 50 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அந்தவகையிலே மலேசியாவைப் போன்று இலங்கையும் தனது உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாக இருந்தால் பொருளாதார ரீதியில் மேன்நிலை பெற முடியும்" என்றார்.

මුදල් අමාත්‍යාංශය
நிதிஅமைச்சு
MINISTRY OF FINANCE



# அரச ஊழியர்களுக்கு பயன்தரும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானம்

## நிதி அமைச்சு அறிக்கை மூலம் தகவலளிப்பு

நாட்டின் தொழிற்பாடுடைய வினைத்திறன்மிகுதொழிற்படையாக விளங்கும் ஊழியர்களுக்காக பயன்தரும் செயற்றிட்டங்களைநடைமுறைப்படுத்தத்தீர்மானித்துள்ளதான தகவல் தரலை நிதி அமைச்சு வெளிப்படுத்தியுள்ளது.

மே தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ளதான ஊடக அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில்அரசுகுறிப்பிட்டிருந்ததான 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை சகல அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த அரச தலைவர் தெரிவுக்கான தேர்தலின் போது வழங்கப்பட்டிருந்தவாக்குறுதியின் பிரகாரமே நிதி அமைச்சு இந்தநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேலும், "அரச ஊழியர்களின் வாழ்க்கை மற்றும் தொழில்நிலமைகளைமேம்படுத்துவதற்கானஉறுதிமொழியின்வழியேயானசெயற்பாடாகவேஇந்தநடவடிக்கை அமையவுள்ளது. இந்தச் செயற்பாடுகளினூடாகஅவர்களின்வினைத்திறனையும், உற்பத்தித்திறனையும்மேம்படுத்துவதே இதன் பிரதான நோக்கம்.

அதேபோன்று வரவு செலவுத்திட்டத்தில்தனியார்துறை தொழில் வழங்குநர்களிடமும்2ஆயிரத்து500ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கும்படியான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையிலே வாழ்க்கைச்செலவைக்கட்டுப்படுத்தி அதனைக்குறைக்கும்பொறுப்பையும் நிதி அமைச்சு கொண்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்குரித்தான வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் பிரகாரம், 12.5 கிலோகிராம் சிலின்டர் எரிவாயுவின் விலைநிர்ணயமானதுஆயிரத்து 400 ரூபாவைவிட குறைக்கப்பட்டிருந்தது. இதனூடாக இலங்கையர்களுக்கு நாடளாவிய ரீதியில் நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது.

அரசு மேற்கொண்டதான தேர்தல் வாக்குறுதியின் பிரதிபலிப் பாக நிதி அமைச்சானது பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின்விலைநிர்ணயத்தை லீற்றருக்கு முறையே117,95மற்றும்65 ரூபாயாகக் குறைத்துக் கொண்டதுடன் 2 வருடங்களாக அது சார்ந்த பேண்தகு நிலையைப் பேணி வருகிறது. இதனூடாகப்போக்குவரத்துச் செலவினங்களில் குறைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தவிர, சட்ட விரோத மதுபானங்கள் மற்றும் போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு துரித அபிவிருத்தி அலகு ஒன்றை நிறுவுதல், அதனூடாகப்பெரியஅளவில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் இறக்குமதியாளர்களையும், பதுக்கலில் ஈடுபடுவோரையும்கண்டறிதல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆலோசனைகளையும், பணிப்புரைகளையும் சம்பந்தப்பட்டதரப்பினருக்கு வழங்கி அதனை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இதன் மூலமாக பல பில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, தேசத்துக்கு நன்மை பயக்கும் மேலும் பல திட்டங்களை முன்னெடுக்கவும்அமைச்சுதிட்டமிட்டுள்ளது"என்பதானகருத்துக்களும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


# மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி
# குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விவரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.**

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தபெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக் குறைந்த ICTAD தரம்/ பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D04/ DMT/UNK/169-8 | கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட உதயநகர் குளம் புனரமைத்தல் | 1.49 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-15,000.00 வங்கிபிணை 31/08/2017வரை |
| 2 | KN/DPS/D04/ DMT/SKK/169-9 | உருத்திரபுரம் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட செருக்கன் குளம் புனரமைத்தல் | 3.85 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-39,000.00 வங்கிபிணை 14/09/2017வரை |
| 3 | KN/DPS/D04/ DMT/MSW/ 169-10 | பளைகமநலசேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட மாசார் உவர்நீர் தடுப்பு அணை அமைத்தல் | 1.85 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-19,000.00 வங்கிபிணை 31/08/2017வரை |
| 4 | KN/DPS/D04/ DMT/RNK/ 169-11 | இராமநாதபுரம் கமநலசேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட இராமநாதபுரம் குளம் புனரமைத்தல் | 4.033 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-41,000.00 வங்கிபிணை 14/09/2017வரை |
| 5 | KN/DPS/D04/ DMT/KNK/ 169-12 | கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்டகந்தன் குளம் புனரமைத்தல் | 4.15 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-42,000.00 வங்கிபிணை 14/09/2017வரை |
| 6 | KN/DPS/D04/ DMT/VDK/ 169-13 | கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட வெட்டுக்காட்டுக்குளம் புனரமைத்தல் | 3.5 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-35,000.00 வங்கிபிணை 14/09/2017வரை |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவராவார்.

I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட்(ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருக்கவேண்டும்.

II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.

III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக் கூடாது.

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.(தொ.பே. இல:- 0212285357, பக்ஸ் இல:-0212283966)

3. கேள்வி ஆவணங்களை 24.05.2017 ஆம் திகதியிலிருந்து 13.06.2017 ஆம் திகதிவரை முற்பகல் 9.30மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலைநாள்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி,பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும்,கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் **தலைவர், திணைக்களபெறுகைக் குழு, மாவட்டச் செயலகம்** கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 15.06.2017 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

7. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச் சுற்றறிக்கை 04/2016 இற்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**சுந்தரம் அ... மைநாயகம்,**
**திணைச் ... றுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங் ... மாவட்டச்செயல ... கிளிநொச்சிமாவட்டம்.** (c/29891)(11)


# இளைஞர்களுக்கான புதிய சேமிப்பு கணக்கை ஆரம்பித்தது செலான் வங்கி

செலான் வங்கி நாடுதழுவிய ரீதியில் உள்ள இளைஞர்களுக்கு பல்வேறு அனுகூலங்களை வழங்கும் முகமாக தனது புதிய சேமிப்புக் கணக்கான 'செலான் செல்பி' இளைஞர் கணக்கை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இப் புதிய கணக்கின் மூலம் கவர்ச்சிகரமான சேமிப்பு மற்றும் நிதிச் சேவைக்கு மேலதிகமாக செலான் வங்கியானது, டயலொக் நிறுவனத்துடன் இணைந்து பரஸ்பர நன்மைகளை வாடிக்கையாளர்களுக்குவழங்கவுள்ளதானதகவலும் வெளியிடப்பட்டுள்ளது.

SEYLAN
BANK PLC
The bank with a heart

இதன்பிரகாரம் மேற்படி கணக்கைப் பேணும் வாடிக்கையாளர்கள் தங்களது மாதாந்த வட்டியைத் தமது கணக்கிலிருந்து டயலொக் கைபேசிக்கு ரீலோட்டாக மாற்றிக் கொள்ள முடிகிறது.

இவைதவிர டயலொக்நிறுவனத்திடம் இருந்து இணைப்புக்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவுசெய்யும்போதுசிறப்புவிலைக் கழிவுகள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், வங்கி அதன் டிஜிட்டல் வட்டி என்னும் கருப்பொருளை எதிர்காலத்தில் தங்களது ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் வழங்கவுள்ளதாகவும்சுட்டிக்காட்டியுள்ளது.

# பிரதிபலிப்புத் தலைமைத்துவமும் பாடசாலை அதிபரும்

நடேசு தயாளன்

தலைமைத்துவ வகையானது ஒருவர் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து ஏனையவர்களை வழிப்படுத்தும் ஆற்றலைக் குறிப்பதாகவுள்ளது. மிகவும் பொருத்தமான தலைமைத்துவமானது தலைவரது செயலொழுங்கிலும் அவரைப் பின்தொடர்வோரது நடைமுறை நிலை மைகளிலும் மட்டுமன்றி நிறுவனத்தினது இயல்பிலும் அவரது நடத்தைக் கோலத்திலும் தங்கியுள்ளது.

பிரதிபலிப்பு என்பது நவீன பதமாகும் என்பதோடு, செயற்பாட்டுச் சட்டகமுமாகும். இது சுயவிருத்தி என்ற புராதன எண்ணக் கருவுடன் தொடர்புடையது. ஒருவரது சுய எண்ணங்களையும் செயற்பாடுகளையும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதாக இது உள்ளது. பிரதிபலிப்புச் செயன் முறையானது எமது உள்ளார்ந்த இயல்புகளையும் கடந்த கால நிலைகளையும் பயன்பாட்டுக்குட்படுத்துவதோடு நாம் தற்போது எங்குள்ளோம் என்பதையும் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எமது செயல்கள் எத்தகையதாக அமைய வேண்டும் என்பதையும் விளக்குவதாயுள்ளது. ஒருவர் ஈடுபாட்டு நிலையிலுள்ளபோது சுயமதிப்பீட்டைப் பகுப்பாய்வுக்குட்படுத்துவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் செயல்களையும் அனுபவங்களையும் பொருள்விளக்கம் கொள்வதற்கும் பயன்படுவதாயுள்ளது.

பிரதிபலிப்புச் சிந்தனை என்பது ஆழ் சிந்தனையைக் குறிப்பதாகும். கல்விப் புலத்தில் பிரதிபலிப்புச் சிந்தனையும் பயிற்சியும் முக்கியமானதாகும். இதன் மூலமே பாடசாலைகள் வெற்றியடைய முடியும் என்பதோடு நிலைத்திருக்கவும் முடியும் பிரதிபலிப்புச் சிந்தனையுடைய பாடசாலை அதிபரானவர் தனது அனுபவங்களைத் தன்னைப் பின்தொடர்வோர் பெறத் தூண்டுபவராகவும் ஏனையவர்களிடம் பிரதிபலிப்புச் சிந்தனையை வளர்ப்பவராகவும் விளங்குவார்.

### பிரதிபலிப்புத் தலைமை

பிரதிபலிப்புத் தலைமைத்துவமானது, நிறுவனமொன்றினது தூர நோக்கையும் குறுங்கால இலக்கையும் அடைந்து கொள்வதற்கு நிறுவனமொன்றுக்குப் பங்காற்றும்பிரதான காரணியாகவுள்ளது. இதற்காகப் பாடசாலையிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் விளைதிறனான செயன்முறைகளைக் கையாளுதல் அவசியமாயுள்ளது. பிரதிபலிப்புத் தலைமைத்துவத் திறனுள்ள பாடசாலை அதிபரானவர் நிலைத்திருக்கத்தக்க நிலை நோக்கிய வகையில் பாடசாலையை வழிப்படுத்தும் திறனுடையவராக விளங்குவார்.

பிரதிபலிப்புச் சிந்தனையுடைய பாடசாலைத் தலைவரானவர் சுய விழிப்புணர்வுள்ளவராகவும் தனது பாடசாலை சார்ந்த சமூகத்தினர் தொடர்பாக விழிப்புணர்வுள்ளவராகவும் இருப்பதோடு சமூகம் பாடசாலையின் உள்ளக உரித்தாளர்கள் என்போர் எவ்வாறு பாடசாலைக் கலாசாரத்துக்குப் பங்காற்றக் கூடியவராகுவர் என்பதை அறியும் திறனுடையவராகவும் விளங்குவார். விளை திறனானதும் வினைத்திறனானதுமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் பாடசாலையின் முழுச் செயன்முறையிலும் அனைவரையும் பங்கு கொள்ளச் செய்பவராகவும் ஆக்கும் வல்லமையுடையவராகவும் விளங்குவார். இத்தகைய பாடசாலைத் தலைவரிடம் விமர்சனப் பாங்கான சிந்தனை, பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், அறிகைத் திறன நியாயம் கானும் திறன் என்பவற்றோடு ஆக்கத்திறன் சிந்தனையுடன் உயர்வான சிந்தனை என்பவையும் அமைந்து காணப்படும். பிரதிபலிப்புச் சிந்தனைத் திறனுடைய பாடசாலை அதிபரானவர் தனது ஊழியர்கள் பாடசாலை தொடர்பான தெளிவான புலக்காட்சி மிக்கவராகவும் விளங்குவார். பாடசாலை அதிபரிடமுள்ள பிரதிபலிப்புச் சிந்தனையானது தனது அனுபவங்கள் தொடர்பான தெளிவுக்கும் எதிர்காலத் திட்டமிடலுக்கும் வழிகாட்டுவதாகவும் இருக்கும். பிரதிபலிப்புச் சிந்தனையுடைய தலைமைத்துவமானது கடந்த காலம் பற்றி மட்டுமல்லாது முற்போக்கான சிந்தனையை தூண்டுவதாகவும் புரிந்து கொள்வதற்கு உதவுவதாகவும் விளங்கும் நிலையுமுள்ளது.

### தனிப்பட்ட முற்போக்கான நிலை

பிரதிபலிப்புநிலையானதுபாடசாலை அதிபரது தனிப்பட்ட முற்போக்கான நிலைக்கு வழிசமைப்பது மட்டுமல்லாது அறிகைத்திறனுக்கும்வழி காட்டுவதாகவும் இருக்கும். வெற்றிகரமான பாடசாலை அபிவிருத்தி என்பது ஓர் செயன்முறையாகும். பாடசாலை அதிபரானவர் இந்த விடயத்தில் தனது ஈடுபாட்டை அதிகரிக்கும்போது புதிய விமர்சனப் பாங்கான சிந்தனைகள் அவர்களிடம் இயல்பாகவே தோற்றம் பெறும். நவீன சமூகமானது பல்வேறு செயற்பாடுகளின் கூட்டிணைவாகவுள்ள நிலையில் தகவல் திரட்டல் பிரச்சினை தீர்க்கும் முறைகள் மீள் சிந்தனைத்திறன்கள்என்பவைமாற்றமடைய வேண்டியதாகவுள்ளன. இதன் காரணமாக வேகமாக மாற்றத்துக்குள்ளாகும் சமூகத்துக்கான அங்கத்தவர்களை வெளியீடு செய்கின்ற பாடசாலையிலும், அதனை வழி நடத்திச் செய்கின்ற பாடசாலை அதிபரது செயலொழுங்குகளிலும் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் பாடசாலை அதிபரிடம் பிரதிபலிப்புச் சிந்தனைத் திறன் இருத்தல் அவசியமாகும். இதன் மூலமே நாளாந்தச் செயன்முறையின் போது இடம் பெறும் முரண் நிலைகளை வெற்றி கொள்ள முடியும். பிரதிபலிப்புச் சிந்தனையானது உயர் நிலையான சிந்தனைக்கு வழிகாட்டுவதோடு புதிய அறிவைப் பெறுவதற்கும் வழி காட்டுவதாக இருக்கும்.

சமூகக் கற்றல் சூழ்நிலையைப் பாடசாலையில் தோற்றுவிப்பதன் மூலம் கூட்டிணைவான வேலைச் செயன்முறையையும் நவீன ஊக்கம் செயற்பாடுகளையும் பொருத்தமான இயல்புகளையும் மகிழ்ச்சிகரமான வேலைச் சூழலையும் தோற்றுவிக்கமுடியும்.பிரச்சினையை வரையறுத்தல், பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல், தீர்வுக்கான அடையாளப்படுத்துதல், நியமங்களைப் பகுப்பாய்வுக்குட்படுத்தல், பொருத்தமானதைத் தெரிவு செய்து அமுலாக்குதல் என்பவை தொடர்பில் தெளிவுடையவராக அதிபர் விளங்குதல் வேண்டும்.

### தூர நோக்கும் குறுகியகால இலக்கும்

இத்தகையபிரதிபலிப்புத் தலைமைத்துவமானது நிறுவனமொன்றினது தூர நோக்கினையும் குறுங்கால இலக்கையும் அடைந்து கொள்வதற்குநிறுவனமொன்றுக்குப் பங்காற்றும் பிரதான காரணியாகவுள்ளது. இதற்காகப் பாடசாலையிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் விளைதிறனான செயன்முறைகளைக் கையாளுதல் அவசியமாயுள்ளது. பிரதிபலிப்புத் தலைமைத்துவத் திறனுள்ள பாடசாலை அதிபரானவர் நிலைத்திருக்கத் தக்க நிலை நோக்கிய வகையில் பாடசாலையை வழிப்படுத்தும் திறனுடையவராக விளங்குவார். இந்தச் சிந்தனை கொண்ட பாடசாலை அதிபரானவர் தகவல்களைத்திரட்டுவதற்கும்பொருத்தமான உயர் வாண்மைத்துவப் பயிற்சி முறைகளுடாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் வாண்மைத்துவ அறிவை வளர்ப்பதற்கும் பொருத்தமான அபிவிருத்தி வாய்ப்புகக்களை இனங்காண்பதற்கும் தன்னைத் தயார்ப்படுத்தியவராக விளங்குவார்.

பிரதிபலிப்புத் தலைமைத்துவமானது மூன்று அடிப்படைத் திறன்களுடாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அவையாவன, சுயவிழிப்புணர்வு, கவனத்துடன் கூடிய அவதானம், நெகிழ்வுப் போக்கான கருத்தில் கொள்ளும் நிலை என்பனவாகும். இங்கு சுய விழிப்புணர்வு என குறிப்பிடப்படுவது யாதெனில் தலைவரினால் அறிந்து கொள்ளப்பட்ட அவரது இயலுமைகள் அவரது பலங்கள் அதனது வரையறைகள் என்பனவாகும். கவனத்துடன் கூடிய அவதானிப்பானது, தான் கேட்பவற்றில், பார்ப்பவற்றில்இருந்து முடிவுக்குவரும் இயல்பு என்பதோடு அது சார்பான நடத்தைகளுமாகும். நெகிழ்வுப் போக்கான பதிலிறுப்பானது. குறிப்பது யாதெனில் தலைவர் தனது ஊழியர் தொடர்பில் தெரிந்து கொண்டுள்ள விடயங்கள் அவர்களது தனிப்பட்ட நடத்தைக் கோலங்கள் எவ்வாறு அவர்கள் சிறப்பாகக் கடமையாற்றுகிறார்கள், எவை அவர்களது செயற்பாடுகளை ஊக்குவிக்கும், ஒவ்வொரு தனிப்பட்ட ஊழியரது தேவைப்பாடுகள் அவர்களது பலங்கள் பலவீனங்கள் அவர்களது தொழில்சார் அபிவிருத்திக்கான பாதைகள் என்றவாறாகவுள்ளது.

> பிரதிபலிப்புச் சிந்தனைத் திறனுடைய பாடசாலை அதிபரானவர், பாடசாலை தொடர்பான தெளிவான புலக்காட்சி மிக்கவராகவும் விளங்குவார். பாடசாலை அதிபரிடமுள்ள பிரதிபலிப்புச் சிந்தனையானது தனது அனுபவங்கள் தொடர்பான தெளிவுக்கும் எதிர்காலத் திட்டமிடலுக்கும் வழிகாட்டுவதாகவும் இருக்கும். பிரதிபலிப்புச் சிந்தனையுடைய தலைமைத்துவமானது கடந்த காலம் பற்றி மட்டுமல்லாது, முற்போக்கான சிந்தனையைத் தூண்டுவதாகவும், புரிந்து கொள்வதற்கு உதவுவதாகவும் விளங்கும் நிலையுமுள்ளது.

### பாடசாலைகளின் வினைத்திறன்

பாடசாலை என்ற நிறுவனத்தின் விளைதிறனை அதிகரிப்பதற்காக தலைவர்கள் மாற்றுவகையாகச் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளார்கள்: பிரதிபலிப்புச் சிந்தனையானது பல அனுகூலங்களைப் பெற்றுத்தரவல்லது. அவையாவன.

01. பாடசாலை பற்றிய பரந்துபட்ட எண்ணக் கருப்படவாக்கம்
02. பாடசாலையின் நோக்கத்தையும் இலக்கையும் வடிவமைக்க முடிதல்
03. பாடசாலைக்கு நன்மையான மற்றும் தீமையான விடயங்களை அளவீடு செய்து கொள்ளக்கூடியதாக இருத்தல்.

பிரதிபலிப்புச் சிந்தனையானது உள்ளக வெளியக செயன்முறையாகும். இதன் மூலம் சுயபுரிந்துணர்வும் விமர்சனரீதியான சிந்திக்கும் திறனும் அதிகரிக்கும். அவசியமானதும் அவசரமானதுமான விடயங்களை இனங்கான உதவுவதாகவும் விளங்கும். தலைவரானவர் விடயங்களைப்புரிந்துகொள்ளவும் புரிந்து கொண்ட விடயங்களை ஏனையோருடன் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் பாடசாலை என்ற நிறுவனம் தொடர்பான தர்க்கரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் இது உத்வுவதாயுள்ளது.



கட்டுரையாளர்:
அதிபர், கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்.

# 2017 வைகாசி மாத பலன்



## கும்பம்

அதர்மத்தை எதிர்த்து குரல் கொடுக்கும் நீங்கள் அகிம்சை வழியில் செல்பவர்கள். உங்களின் சப்தமாதிபதியான சூரியன் இந்த மாதம் முழுக்க சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் நினைத்த காரியங்கள் நிறைவேறும். எதிர்பார்த்து ஏமாந்து போன தொகை கைக்கு வரும். சவால்களில் வெற்றி பெறுவீர்கள். சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள். இடைத்தரகர்களை நம்பி ஏமாறாமல் நேரடியாகவே பல காரியங்களில் நீங்களே இறங்குவீர்கள். வங்கிக் கடன் உதவி கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். உங்களுடைய ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்வார்கள். அரசு காரியங்கள் விரைந்து முடியும். மனைவி வழியில் உதவிகள் உண்டு. உங்களின் பிரபல யோகாதிபதியான சுக்கிரனும் இந்த மாதம் முழுக்க சாதகமான வீடுகளில் செல்வதால் மனஇறுக்கங்கள் நீங்கும். தன்னம்பிக்கை கூடும். கண்டும், காணாமல் சென்றுக் கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். முன்கோபம் குறையும். மகளுக்கு திருமணம் கூடிவரும். மகனுக்கிருந்து வந்த கூடாப்பழக்க வழக்கங்கள் நீங்கும். வேலை கிடைக்கும். வழக்குகள் சாதகமாக முடிவடையும். ரசனைக்கேற்ப வீடு, மனை அமையும். சகோதரர்கள் ஆதரவாகப் பேசுவார்கள். சிலர் உங்கள் மீது வீண் பழி சுமத்துவார்கள். உங்கள் ராசிநாதன் சனிபகவான் கேந்திர பலம் பெற்று காணப்படுவதால் உங்களுடைய மதிப்பு, மரியாதை கூடும். கடினமான வேலைகளையும் சாதுரியமாகப் பேசி முடிப்பீர்கள். புது வேலையும் கிடைக்கும். ராகு 7இல் நிற்பதால் அவ்வப்போது சந்தேகமும், தடுமாற்றமும் வந்துப் போகும். கன்னிப் பெண்களே! அழகு, ஆரோக் கியம் கூடும். காதல் இனிக்கும். உயர்கல்வியில் வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் பழைய தொழிலை விட்டு விட்டு புதுத் தொழில் அல்லது புதுத் துறையில் ஈடுபடுவீர்கள். புதுப் பங்குதாரர்களும் அறிமுகமாவார்கள். உங்கள் ரசனைக் கேற்ப எல்லாம் அமையும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் மோதல்கள் வந்து நீங்கும். சக ஊழியர்களால் பிரச்சினைகள் வெடிக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள்கிடைக்கும். கலைத்துறையினரே!மூத்தகலைஞர்களால்பாராட்டப்படுவீர்கள். இளைய கலைஞர்கள் மூலமாகவும் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். சம்பளப் பணம் கைக்கு வரும். திட்டமிட்டு செயற்படுவதால் ஓரளவு முன்னேற்றம் இருக்கும்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1846 - மெக்சிகோ அரசதலைவர் மரியானோ பரேட்சினால் ஐக்கிய அமெரிக்கா மீது போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது.

1911 - நியூயோர்க் பொது நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

1915 - முதலாவது உலகப் போர். லண்டன் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் முகமாக இத்தாலி கூட்டுப் படையில் இணைந்தது.

1939 - அமெரிக்கக் கடற்படையின் நீர் மூழ்கிக் கப்பல் நியூ ஹாம்ஷயருக்கு அப்பால் பரீட்சார்த்த ஓட்டத்தின்போது நீரில் மூழ்கி 24 மாலுமிகளும் இரண்டு தொழில்நுட்பவியலாளர்களும் இறந்தனர். 32 மாலுமிகளும் வேறொருவரும் மறுநாள் காப்பாற்றப்பட்டனர்.

1945 - இரண்டாம் ஹிட்லரின் படை அதிகாரிகளில் ஒருவரான ஹென்றிச் ஹிம்லர் கூட்டுப் படைகளில் ஒருவராக தடுப்புக் காவலிலிருந்த போது தற்கொலை செய்து கொண்டார்.

1949 - ஜேர்மனி சமஷ்டிக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு அதற்கான அடிப்படைச் சட்டங்கள் அறிவிக்கப்பட்டன.

2016 - ஐ.எஸ்.ஐ எஸ்ஸினரால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் யேமனில் 45 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

2016 - ஐ.எஸ்ஸினரால் மேற் கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் இரண்டில் 184 பேர் கொல்லப்பட்டதுடன் 200 பேர் காயமடைந்தனர்.

1999 - மடு அகதி முகாமில் தங்கியிருந்த அகதிகளில் அரைவாசிப்பேர் சொந்த இடங்களில் குடியமர்வு.

1999 - ஈ.பி.டி. பியைச் சேர்ந்த தம்பதியர் மீது தாக்குதல் மேற்கொண்ட தாக புளொட் மீது குற்றச்சாட்டு

1999 - முன்னாள் சூடான் சர்வாதிகாரி எகிப்திலிருந்து 14 ஆண்டுகளின் பின் நாடு திரும்பினார்.

1999 - கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரை தமிழர்கள் திட்டமிட்ட குடியேற்றம் என வீரவிதான கூட்டத்தில் உரை

1999 - பம்பலப்பிட்டிக் கொலைகளின் முழுப் பொறுப்பையும் புளொட் ஏற்க வேண்டுமென ரெலோ வற்புறுத்து

2002 - படையினரை வெளியேறக் கோரி மாணவர்கள் திரண்டு மறியல் ஹாட்லிக் கல்லூரி அருகே காவலரணை முற்றுகை யிட்டுக் கோஷம்

2003 - இடைக்கால நிர்வாகம் வழங்குவதைக் காட்டமாக எதிர்க்கிறார் அரசதலைவர். அரசமைப்பை மீறிச் செயற்பட்டால் அரசு கலைக்கப்படுமெனவும் எச்சரிக்கை.

## நாளை

**வைகாசி-10**
புதன்கிழமை -24.05.2017
திதி: திரயோதசி கா.06.49
நட்சத்திரம்: பரணி பி.இ.02.36
சுபநேரம்:04.22-05.52 வரை
ராகுகாலம்:11.52-01.22 வரை

# மருத்துவர்களது போராட்டத்தால் பாதிக்கப்படுவது நோயாளர்களே!

மருத்துவர்கள் தற்போது அடிக்கடி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அதனால் சிகிச்சை இன்றிப் பாதிக்கப்படுவதோடு, சிகிச்சைக்காகப் பல்லாயிரக்கணக்கான ரூபாக்களைச் செலவிடும் நிலையும் நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சைட்டம் எனப்படும் தனியார் கல்வி நிறுவனத்தை இலங்கையில் தடை செய்யக்கோரியும், அங்கு கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறக்கூடாது என்று கோரியும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் போராட்டத்தில் ஈடுபடுகிறது. பின்னர் மருத்துவ பீடங்களின் மாணவர்களையும் போராட்டத்தில் இணைத்திருந்தது.

சைட்டம் மருத்துவ நிறுவனம் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வந்தது. அந்த ஆட்சியில் மருத்துவ சங்கம் சிறு எதிர்ப்பைக்கூட வெளியிட்டிருக்கவில்லை. இதனை அமைச்சர் ஒருவர் சுட்டிக்காட்டியிருந்தார். மருத்துவ சங்கம் மகிந்த தரப்பு ஆதரவைக் கொண்டிருந்தமையும் அதற்கு ஒரு காரணம். கூட்டாட்சி ஏற்பட்டதும் சைட்டத்தை மூட வேண்டும் என்று சங்கம் அடிக்கடி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகிறது. சைட்டம் பற்றிய புரிதலைவிட மருத்துவ சங்கத்தின் இத்தகைய நிலையை சாதாரண மக்களும் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

அரச மருத்துவமனைகளில் பணிபுரியும் அரச மருத்துவர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரிப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாகக் கூறிவிட்டு தனியார் மருத்துவமனைகளில் நோயாளர்களிடம் பலஆயிரம் ரூபா பணம் பெற்றுக்கொண்டு சிகிச்சை வழங்குகின்றனர். மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் ஒவ்வொரு தடவையும் இந்த நிலை காணப்படுகிறது. அமைச்சர் ஒருவரே இந்த விடயத்தைக் கூறியிருந்தார். பாமர மக்கள் அரச வைத்தியசாலைகளில் இலவசமாகச் சிகிச்சை பெறுவதனைத் தடுத்து நிறுத்தி தனியார் வைத்தியசாலைகளில் பணம் செலுத்தி சிகிச்சை பெற வைக்கும் நிலைக்கு மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாகி விடுகிறது.

அரச வைத்தியசாலைகளில் சரி தனியார் வைத்தியசாலைகளில்சரி இடம்பெறும் மருத்துவ சிகிச்சை தொடர்பான தவறுகள் தற்போது அதிகளவில் வெளியே தெரிய வருகின்றன என்று கூறலாம். அந்தளவுக்கு காரணங்களைக் கண்டறிவதில் பொதுமக்கள் அக்கறையாகவுள்ளனர். தனியார் வைத்தியசாலைகளிலும் பிறந்த குழந்தைகள் கவனவீனத்தால் இறந்ததும், தாய்மார் இறந்ததும் வேறு நோயாளர்கள் இறந்ததும் என பல சம்பவங்கள் மூடி மறைக் கப்பட்ட வரலாறுகளும் உள்ளன. அவை பற்றி என்ன கூறப்போகிறீர்கள் என்ற கேள்வியும் நியாயமானதுதான்.

இலவசக் கல்வியும், இலவச மருத்துவ வசதியும் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள். அப்படியிருக்க கிடைக்க வேண்டிய இலவச மருத்துவ வசதி போராட்டங்கள் மூலமாகத் தடுக்கப்படுவதனை ஏற்க முடியாது.

மருத்துவர்களின் போராட்டம் ஒட்டுமொத்த சங்கத்தின் தீர்மானமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகிறது. சரியான வழிப்படுத்தலை நோக்கிய போராட்டத்தை பொதுமக்களோ, நோயாளர்களோ எதிர்க்கவில்லை. ஆனால் நோயாளர்கள் அவதிப்படுமளவுக்கு மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதைத்தான் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. சுகாதார சேவையைப் பாதிக்காதவாறு போராட்டங்களை வேறு பலவழி களில் முன்னெடுங்கள். ஒரு சாராரது போராட்டங்களால் மற்றொரு சாரார் பாதிக்கப்படுவதை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.




போராட்டங்களில் ஈடுபடுகின்ற மருத்துவர்கள் நோயாளர்களின் அவல நிலையையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.






# பாகுபலியால் ரம்யா கிருஷ்ணன் பெரும் மகிழ்ச்சி

பாகுபலி போன்ற படத்தில் நடிப்பேன் என நான் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை என்று ரம்யா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ராஜமவுலி இயக்கிய பாகுபலி 2 படம் உலக அளவில் ஆயிரம் கோடிக்கு மேல் வசூல் செய்தது. பாகுபலி 2 படம் ஓடும் தியேட்டர்களில் இன்னும் கூட்டமாக உள்ளது. படத்தில் ராஜமாதா சிவகாமியாக நடித்தது குறித்து ரம்யா கிருஷ்ணன் கூறும்போது, படையப்பா படத்துக்கு முன்புவரை என் சொந்தக் குரலில் பேசுவதற்கு என்னை எவரும் அனுமதிக்கவில்லை. நீலாம்பரி கதாபாத்திரத்துக்கு நீங்கள் சொந்தக் குரலில் தான் பேச வேண்டும் என்று கூறிய ரஜினி, கே.எஸ். ரவிக்குமார் ஆகியோருக்கு நன்றி. எனது குரலைக் கேட்டவர்கள் என்னை டப் செய்ய வேண்டாம் என்றார்கள், என்று நான் கூறியும் நீங்கள் தான் பேச வேண்டும் என்று ரஜினி மற்றும் கே.எஸ். ரவிக்குமார் ஆகியோர் கூறினார்கள்.

பாகுபலி படத்தில் சிவகாமி கதாபாத்திரத்துக்கு உங்கள் சொந்தக் குரல்தான் பொருத்தமானது. நீங்களே டப்பிங் பேசுங்கள் என்று இயக்குநர் ராஜமவுலியின் தந்தை விஜயேந்திர பிரசாத்காரு கூறினார். சிவகாமி கதாபாத்திரத்துக்கு நீங்கள் பேசினால் தான் அது சிறப்பாக இருக்கும். இல்லை என்றால் அந்த கதாபாத்திரத்தின் முக்கியத்துவமே போய்விடும் என்று விஜயேந்திர பிரசாத் கூறினார். பாகுபலி போன்ற பிரமாண்ட படத்தில் நடிப்பேன் என்று நான் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை என்றார் ரம்யா.









## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பருக்காகப் பரிந்து பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள் செலவுக்குப் பணமின்றித் திண்டாடுவர்.

**இடபம்:** சொந்தப் பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** மனதில் நல்லெண்ணம் மேலோங்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** திட்டமிட்ட பணி குறித்த காலத்தில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். நண்பருடன் விருந்தில் பங்கேற்பீர்கள்.

**சிங்கம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் ஆடம்பரச் செலவில் ஈடுபடுவர்.

**கன்னி:** செயல்களில் குளறுபடி ஏற்படலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். விஷப்பிராணிகளிடம் விலகுவது நல்லது.

**துலாம்:** இஷ்ட தெய்வத்தின் அருளால் இடையூறு விலகும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் பெறும். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம்:** கவனக்குறைவால் பணிகளில் குளறுபடி ஏற்படலாம். குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பெண்களின் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**தனுசு:** நண்பரின் உதவியால் நன்மை காண்பீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் ஒற்றுமை காப்பது நல்லது. தொழிலில் உருவாகிற இடையூறை தாமதமின்றிச் சரிசெய்வது அவசியம். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** நேர்மை மிக்கவராக விளங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**மீனம்:** நண்பர்களிடம் உங்கள் மீதான மதிப்பு உயரும். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்வீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

குடிகார முனுசாமியை தொட்டியில் மூன்று முறை தண்ணீரில் முக்கி எடுத்து பாதிரியார் கூறினார்...

"உன்னுடைய பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டன. இன்று முதல் நீ பரிசுத்தமானவனாகிறாய். 'டேனியல்' என்றழைக்கப்படுவாய். இனிமேல் குடிக்கமாட்டேன் எனச் சத்தியம் செய்துகொடு டேனியல்!"

"சத்தியம் பாதர்... இனிமேல் சாராயம் குடிக்க மாட்டேன். சர்பத் குடிக்கலாமா பாதர்?"

"தாராளமாக எத்தனை தடவை வேணும்னாலும் குடிக்கலாம்!" "ஓகே பாதர்!"

டேனியல் ஆன குடிகார முனுசாமி தனது வீட்டுக்கு வந்தவுடன் அலுமாரியில் இருந்த ஒரு விஸ்கியை எடுத்து, தொட்டியில் இருந்த தண்ணீருக்குள் மூன்று முறை முக்கி எடுத்துக் கூறினான்...

"உன்னுடைய விசங்களெல்லாம் கழுவப்பட்டன. நீ பரிசுத்தமானவனாகி விட்டாய். இன்று முதல் நீ 'சர்பத்' என்று அழைக்கப்படுவாய்!





## காதல் கவிதைகள்

தவறுகளை ஒப்புக் கொள்ளும் தைரியமும், அதைத் திருத்திக் கொள்ளும் பலமும் தான் உண்மையான வெற்றிக்கு வழி.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | | | |
| | | | | | 6 | 8 | | |
| | 1 | 9 | | | 4 | | 2 | |
| 1 | | | 6 | | 2 | 3 | 5 | |
| 6 | | 3 | | 7 | | | | |
| | | | 1 | | | | | 7 |
| 3 | 2 | | | 5 | | 1 | 7 | |
| 7 | | 5 | | 2 | 1 | 9 | | |
| 9 | 4 | 1 | | 6 | 7 | | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 6 |
| 8 | 7 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 1 |
| 2 | 5 | 6 | 1 | 4 | 7 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 8 | 9 | 7 | 1 | 3 | 6 | 4 |
| 1 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 | 8 | 9 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 2 | 1 | 5 | 7 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 6 | 1 | 3 |
| 7 | 3 | 2 | 6 | 1 | 4 | 8 | 9 | 5 |
| 6 | 8 | 1 | 5 | 9 | 3 | 7 | 4 | 2 |

# அன்பின் பெருமதி



குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய் வாய்ப்பட்டு பல நாள்களாக படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனை நலம் விசாரிக்க தினமும் பல பிரமுகர்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். அவர்கள் வரும் போது வெறுங்கையுடன் வருவதும் கிடையாது. சத்துள்ள பழங்கள் உணவுப் பண்டங்கள் என பலவற்றை தட்டுக்களில் வைத்து எடுத்துக் கொண்டும் வந்தார்கள்.

ஒரு நாள் இப்படியே சில பெரிய மனிதர்கள் பல வித பழங்களையும் பண்டங்களையும் அரசரிடம் கொடுத்து நலம் விசாரித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு விவசாயி மன்னனைக் காண அரண்மனை வாயிலுக்கு வந்தான். அவனது எளிமையான தோற்றத்தைப் பார்த்த கர்வலாளிகள் அவனை உள்ளே செல்ல விடாது தடுத்தனர். இருந்தும் அவன் காவலாளிகளைப் பொருட்படுத்தாது எப்படியோ அரண்மனையுட் புகுந்து மன்னனின் படுக்கை அருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலை முடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் , அவன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை வெளிப்படுத்தின. அரசனைச் சூழ இருந்த பிரமுகர்கள் முகத்தைச் சுழித்துக் கொண்டனர். அவன் சுத்தமில்லாமல் வந்துள்ளான். அவனது அழுக்குகள் அரசனின் உடலில் பட்டால் மன்னருக்கு மேலும் தொற்று ஏற்பட்டு விடுமென்றும் கூறி, அவனை வெளியேற்றும் படி அரசனைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் அரசனோ விவசாயியை விரட்டாமல் அவன் வந்த காரியம் என்னவென அமைதியாக விசாரித்தார். விவசாயியோ "மன்னா! உங்கள் உடம்புக்கு முடியாமற் போயிற்று என்று கேள்விப்பட்டேன். உடனேயே உங்கள் உடல் தேற வேண்டும் என்று எங்கள் ஊர் மாரியம்மனுக்கு பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைத் தங்களுக்காக கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதம் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றான்.

மன்னன் அதனை வாங்க கையை நீட்ட, விவசாயி பிரசாதத்தைப் தனது பைக்குள் இருந்து வெளியே எடுத்தான். அது வெளியே வந்ததும் கெட்டுப்போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்தி முகத்தைச் சுழித்துக் கொண்டார்கள். ஆனால் அரசரோ மிகவும் மகிழ்வுடன் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, தன் கழுத்தில் இருந்த முத்துமாலையைக் கழற்றி விவசாயிக்குப் பரிசாக அளித்து நன்றி கூறி அனுப்பி வைத்தார். அங்கிருந்த பிரமுகர்களில் ஒருவர் அரசே கெட்டுப்போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு? என்று கேட்டார். அரசரோ "அது கெட்டிருந்தாலும் அந்தப் பிரசாதத்தை நான் சாப்பிட்டு குணமடைய வேண்டும் என்ற அவனது கள்ளம் கபடமற்ற அன்பு உண்மையானது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்து மாலை கூட உண்மை அன்புக்கு முன்னால் எம்மாத்திரம்? என்றார்.

**எமது அன்பு உண்மையானால் தெய்வம்கூட கையைக் கட்டி நின்று எமக்கு சேவகம் செய்யும்.**

# வாழையடி வாழையாக....

ஒருவரையோ அல்லது அவரது பரம்பரையையோ வாழ்த்தும்போது நாம் "வாழையடி வாழையாக நீடூழி வாழ்க" என்றே வாழ்துகிறோம். இவ்வாறு ஏனைய கனிதரும் மரங்கள் பல இருக்க, வாழை மரத்தை மட்டும் நாம் உதாரணமாகக் கொள்வதற்குக் காரணமில்லாமலில்லை. வாழை மரம் தான் குலை ஈந்து இறக்குமுன், தன் குட்டியை முதலில் ஈன்று விடும். குட்டி வளர்ந்து ஓரளவு பக்குவம் அடைந்து வரும் வேளையில், தாய் வாழையானது குலை போடும். அவ்வாழைக் குலை முற்றிப் பழுத்தவுடன் அதைத் தனக்கு நீரூற்றி பசளையிட்டுப் பராமரித்தவனுக்கு நன்றிக் கடனாக வழங்கி விட்டு, தான் மரித்து விடும். இப்படியே இந்த செயற்பாடுகள் ஒரு எல்லையில்லாமல் ஒரு சங்கிலித் தொடர் போல நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஒரு வாழை மரம் நடப்பட்டால் அது தானாகவே ஒரு தோப்பை நாளடைவில் உருவாக்கி விடும். இதன் படி ஒரு மனிதனது வாழ்க்கைச் செயற்பாடுகள் பரம்பரை பரம்பரையாக அழிந்து விடாமல் தொடர வேண்டும் என்பதற்காகவே எத்தனையோ பயன்தரு மரங்கள் இருக்கையில் வாழை மரத்தை மட்டும் ஒருவரை வாழ்த்துவதற்கு உதாரணமாகக எடுத்துக் கொள்கிறார்கள்.



வாழை மரம் மக்களுக்கு பலவகையில் பயன்தருகிறது. வாழைப் பழங்களும் இலைகளும் ஆன்மிக செயற்பாடுகளில் முதலிடம் வகிக்கின்றன. வாழை இலையின் மேல் அரிசியோ,நெல்லோ இட்டு அதன் மேல் நிறைகுடம் வைத்து வாழைப் பழங்கள், வெற்றிலை, பாக்கு, பூக்கள் வைத்து விளக்கேற்றி தெய்வத்தை வணங்கி எல்லா சுப, அசுப கிரியைகளைச் செய்வார்கள். திருமண மண்டப வாயில்களில் பழுத்த வாழைக் குலைகளுடான மரங்கள் மங்கள சின்னங்களாக காலங்காலமாக கட்டப்பட்டு வருகின்றன. அமங்கல நிகழ்வுகளில் காய் வாழைக் குலைகளுடன் மரங்கள் வாயிலின் இரு மருங்கிலும் கட்டப்படும். வாழைக்கனி, காய்கள், பூ, தண்டுகள், வாழைப் பூக்கள் மக்களுக்கு சிறந்த உணவாகவும், மருத்துவ குணங்கள் கொணடவையாகவும் விளங்குகின்றன. எல்லோருக்கும் இலகுவிலும், குறைந்த விலையிலும் கிடைக்கும் முக்கனிகளில் ஒன்றான வாழைப் பழம் 'ஏழைகளின் அப்பிள்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுள்ளது.

சாப்பாட்டுப் பந்தியிலே வாழை இலையும், உணவு உண்டு முடிய உண்ண வாழைப் பழமும் இல்லாத தமிழரின் பாரம்பரிய மங்கள சடங்குகள் இல்லை என்றே கூறலாம். இத்தகையதானவை வாழை மரத்தின் சிறப்புக்கள்.

# பெயர்ச் சொல்

குறித்த ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொற்கள் யாவும் பெயர்ச் சொற்கள் எனப்படும். இவை ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| 1. பொருட் பெயர் | 2. இடப் பெயர் |
| 3. காலப் பெயர் | 4. சினைப் பெயர் |
| 5. குணப் பெயர் | 6. தொழிற்பெயர் |

1. பொருட் பெயர் : ஒரு பொருளின் அல்லது உயிரினத்தின் பெயரைக் குறிப்பது.
   *உ+ம் கண்ணன், கதிரை, மாடு, புத்தகம்*
2. இடப் பெயர் : ஓர் இடத்தின் பெயரைக் குறிப்பது
   *உ+ம் இலங்கை, வீடு, யாழ்ப்பாணம், கோயில்*
3. காலப் பெயர் : காலத்தின் பெயரைக் குறிப்பது
   *உ+ம் சித்திரை, திங்கள், இரவு, நேற்று*
4. சினைப் பெயர் : ஒரு முழுப் பொருளின் பகுதிகளைக் குறிப்பது
   *உ+ம் கண், கால், இலை, வால்*
5. குணப் பெயர் : பொருள்களின் தன்மையை (நிறம், வடிவம், சுவை) குறித்துக் காட்டுவது.
   *உ+ம் கோபம், வெள்ளை, வட்டம், உறைப்பு*
6. தொழில் பெயர் : ஒரு தொழிலைக் குறிப்பது
   *உ+ம் ஆடுதல், பாடுதல், தைத்தல், வருகை*

**கீழ் வரும் பெயர்ச் சொற்களை வகைப்படுத்துக**

**மேசை, சதுரம், கிளை, பங்குனி, பாடசாலை, மனிதன்,இனிப்பு, இதயம், அதிகாலை, பூ, வருதல், ஆடுதல்**

1. பொருட் பெயர்
   ------------- -------------
2. இடப் பெயர்
   ------------- -------------
3. காலப் பெயர்
   ------------- -------------
4. சினைப் பெயர்
   ------------- -------------
5. குணப் பெயர்
   ------------- -------------
6. தொழிற்பெயர்
   ------------- -------------

20ஆம் நூற்றாண்டியின் முற்பகுதியில் கட்டப்பட்ட பயணக் கப்பல்களுக்குள் மிகப் பெரியது ரைடானிக் கப்பல். இது ஒரு சொகுசுக் கப்பல். 46,000 தொன் நிறையுடைய இதன் கீழ் தளத்தில் சாதாரண பயணிகளும் மேல்தளத்தில் கோடீஸ்வரர்களும் பயணம் செய்யக் கூடிய வசதிகளைக் கொண்டது. இதன் நீளம் 269 மீற்றர். இதன் நீளத்தை இரு உதைபந்தாட்ட மைதானங்களுக்கு ஒப்பிடலாம். இந்தக் கப்பலில் பல நீச்சல் தடாகங்கள் விளையாட்டுப் பயிற்சி மைதானங்கள் திரைப்பட தியேட்டர்கள், இசை நிகழ்ச்சி களுக்கான அரங்குகள் என்பவை அமைக்கப்பட்டிருந்தன. ஆங்கிலேயரால் கட்டப்பட்ட ரைடானிக் இங்கிலாந்தின் ஸதம்ரன் துறைமுகத்தில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்தை நோக்கி அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாக 1361 பயணிகள் 891 பணியாளர்கள் ஆகியோருடன் 10.04.1912இல் புறப்பட்டது. முதல் 4 நாள்கள் கப்பல் களியாட்டம், உல்லாசங்களில் மூழ்கிக் கிடந்தது. நான்காவது நாள் இரவு 14.04.1912அன்று பெரிய பனிப் பாறையுடன் மோதி 2½.மணி நேரத்துள் வட அத்திலாந்திக் கடலில் 3,800 மீற்றர் ஆழத்தில் நீரில் மூழ்கிப் போனது. இந்தக் கப்பல் வெள்ளோட்டத்தின் போது "ஆண்டவன் விரும்பினாலும் இந்தக் கப்பலை மூழ்கடிக்க முடியாது" என்று கப்பல் கப்டன் கூறிய வார்த்தைகள் பொய்த்துப் போயின. இவரது இந்த பெருமிதமான கூற்றுக்கு காரணம். ரைடானிக்கின் அடித்தளம் நீர் உட்புகாத 16 வெவ்வேறு பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்ததோடு ஏதாவது அசம்பாவிதத்தால் ஓரிரு பிரிவுகளுக்குள் நீர் சென்றாலும், ஏனைய பிரிவுகள் கப்பலை மிதக்க வைக்கும் என்பதினாலாகும். இதனால் இந்தக் கப்பலை "ஒருபோதும் மூழ்காத கப்பல்" என சகலரும் நம்பினர். கப்பல் உறுதியான உருக்கு இரும்பினால் ஆக்கப்பட்டிருந்த போதிலும், வடக்கு அத்திலாந்திக் சமுத்திரத்தில் திரளும் கடும் குளிர் கொண்ட நீர், கப்பலின் இரும்பை இலகுவாக தெறிக்கும் நிலைக்கு மாற்றியிருந்ததால் சிறு மோதலையும் தாங்கிக் கொள்ள இயலாது போயிருக்கலாமென்பது கப்பல் மூழ்க்கியதற்கான யூகங்களில் ஒன்றாகும்.




கப்பல் பனிப்பாறையுடன் நேரடியாக மோதாமல் தவிர்க்கப்பட்ட போதிலும், பக்கவாட்டில் பனிப்பாறையின் உராய்வினால் ஏற்பட்ட 300 அடி நீளமான வெடிப்பினுடாகவே நீர் கப்பலுள் புகுந்தது. கப்பல் இரண்டாகப் பிளந்து மூழ்குவதற்கு முன்னர், கப்டன் 705 பெண்களையும் சிறுவர்களையும் உயிர்காக்கும் படகுகளில் பத்திரமாக இறக்கி விட்டு கப்டனுக்குரிய பாரம்பரிய சீருடையணிந்து கப்பலில் இருந்தவர்களுடன் தானும் மூழ்கி கப்டனுக்குரிய கடமையை நிறைவேற்றினார். மறுநாள் உயிர்காக்கும் படகுகளில் இறக்கப்பட்டவர்கள் அங்கு வந்த 'காப்பாத்தியா' என்ற கப்பல் மூலம் காப்பற்றப்பட்டனர்.

## மரண அறிவித்தல்

### செல்வி பரிமளம் நல்லப்பா



குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி பரிமளம் நல்லப்பா நேற்று (22.05.2017) மாலை 7.45 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லப்பா - பார்வதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்வி புவனேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம் (சுவிஸ்), சந்திரகாந்தன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரியும் புஸ்பராணி (சுவிஸ்), கௌரி (உரும்பிராய்) ஆகியோரின் மைத்துனியும் சுகி, சாருஷன் (சுவிஸ்), பானுஜன், விதுஷன் ஆகியோரின் அத்தையும் ஸ்கந்தரூபனின் (சுவிஸ்) பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (23.05.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல் : குடும்பத்தினர்**

**சந்திரகாந்தன் சுப்பிரமணியம் 077 951 8278**

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் இராசையா

**(முன்னாள் வர்த்தகர் 4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)**



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் , தற்பொழுது இல. 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம்இராசையா நேற்று (22.05.2017) திங்கட்கிழமை அதிகாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் – சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், ஞானாம்பாளின் அன்புக் கணவரும், கிருபாகரன், ஞானகரன், சிவகரன், பாலகரன், திருவாங்கன்னி, கிருபாலினி, கிருஷ்ணகரன், மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்பரசி, அருணா, கோகிலவதனி, உஷாந்தினி, சிவராசா, சபேசன், சாந்தகுமார் ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் (யாழ்ப்பாண ரேடர்ஸ்), இரத்தினபூபதி, சண்முகராசா, நாகரத்தினம் மற்றும் சரோஜினி தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 711, கே.கே.எஸ். வீதி,**
**(யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்), யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### ஐயாத்துரை சண்முகராஜா (சண்கோ)

**(பிரபல புகைப்படக் கலைஞன்)**

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சண்முகராஜா நேற்று (22.05.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் சந்திராதேவியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் தியாகராஜாவின் அன்புச் சகோதரனும் கோகுலன் (பிரான்ஸ்), ஜனார்த்தனி (ஆசிரியை, யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திராதேவி, சண்முகநாதன், பத்மநாதன், கமலநாதன், தில்லைநாதன், பஞ்சநாதன், சத்தியநாதன், சிவகுருநாதன், கமலாதேவி, இரத்தினேஸ்வரி, மதனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரபா (பிரான்ஸ்), நடேஸ்வரன் (நீதிமன்ற எழுதுவினைஞர், ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்பு மாமனும் பிரவிந்த், கோசிதா, சசாங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டச்சு றோட்,**
**உடுவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 369 9381**

## கேள்வி அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவி திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட செயலகத்தால் கீழே குறிப்பிடப்பட்ட பொருள்களை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்ட மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 24.05.2017 ஆம் திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் இவை தொடர்பான மேலதிக தகவல்களினை பெறவிரும்பின் மாவட்ட செயலக மீள்குடியேற்ற அலகின் 021 222 4029 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றுடன் நிறுவன வியாபார பதிவுச்சான்றிதழினையும் சமர்ப்பித்து 24.05.2017 முதல் 14.06.2017 வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான **1000/=** கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.06.2017 திகதியன்று மு.ப 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
6. காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பொதி இலக்கம் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் 15.06.2017 திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
9. கேள்வி தொடர்பான முன் ஆயத்த கூட்டம் (**Prebid Meeting**) 05.06.2017 மு.ப 10.00 மணிக்கு அரசஅதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

| விபரம் | கேள்வி இல | விபரம் | அண்ணளவான எண்ணிக்கை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| பொதி 01 | **JF/RES/LH/I/ PCK01/2017** | நீர் இறைக்கும் இயந்திரங்கள்<br>மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள்<br>தூவல் நீர்பாசன உபகரணங்கள்<br>மண்வெட்டிகள், பிக்கான், சவல்<br>மருந்துதெளி கருவிகள்<br>Alkathene Pipes | 100<br>20<br>7<br>200<br>100<br>5000feet | 1000/= |
| பொதி 02 | **JF/RES/LH/I/ PCK02/2017** | மரவேலை பட்டறை இயந்திரம்<br>10" & 12"<br>Circular saw,<br>Angle grinder,<br>Jig Saw,<br>Cut off saw,<br>Router,<br>Driller, & Hammer driller, Sander,<br>Planer<br>Bench type driller<br>Tile Cutter<br>Welding Machine<br>Air Compressors<br>Electric Motors 25HP, 15 HP, 10HP,<br>3 HP,2HP<br>Cement block making Machine<br>Coconut scrapper | 25<br>30<br>75<br>30<br>20<br>20<br>80<br>20<br>15<br>15<br>10<br>10<br>15<br>10<br>05<br>10 | 1000/= |
| பொதி 03 | **JF/RES/LH/I/ PCK03/2017** | தையல் இயந்திரங்கள்,<br>Over lock machine<br>கத்தரிக்கோல்கள்<br>Leather stitch machine | 100<br>12<br>150<br>10 | 1000/= |
| பொதி 04 | **JF/RES/LH/I/ PCK04/2017** | துணிவெட்டும் மேசை –மரம் (Sewing Cutting Table)<br>மர இருக்கை (Wooden Stools)<br>Library Cupboard | 75<br>75<br>50 | 1000/= |
| பொதி 05 | **JF/RES/LH/I/ PCK05/2017** | மா அரைக்கும் இயந்திரம்<br>Rice flour grinding Machine (wet rice)<br>தூள் அரைக்கும் இயந்திரம்<br>(Chilli rice grinding machine)<br>நெல் உடைத்தல் இயந்திரம்<br>அரிசி தீட்டல் இயந்திரம்<br>கோப்பி அரைக்கும் இயந்திரம்<br>மஞ்சள் மா அரைக்கும் இயந்திரம்<br>Copra cutter<br>Paddy pre cleaner<br>Rubber Roll Sheller<br>Polisher ( senior/Junior)<br>De stoner<br>Separator pocket type (Paddy & rice)<br>Belt ( above 4 ply)-3", 4",6" | 10<br>05<br>05<br>03<br>05<br>05<br>01<br>02<br>02<br>02<br>01<br>2500" | 1000/= |

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## கண்ணீர் அஞ்சலி



எமது வேலணை பிரதேச செயலகத்தில் திறன் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் **D.G.P.குணரத்தினம்** அவர்களின் தந்தையார்

### பெஞ்சமின் சுந்தரராஜன் குணரத்தினம்

அவர்களின் இறப்பு செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், வேலணை.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியர் திருமதி ந. ஜனார்த்தனி அவர்களின் அன்புத்தந்தையார்

### ஐயாத்துரை சண்முகராசா

அவர்கள் (22.05.2017) அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
**யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.**

## மரண அறிவித்தல்கள்

### உலகநாதன் வசந்தகுமார்



குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட உலகநாதன் வசந்தகுமார் நேற்று (22.05.2017) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் உலகநாதன் - யமுனாதேவி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற குமரய்யா மற்றும் புஸ்பமலர் தம்பதியரின் மருமகனும் சிவானந்தியின் அன்புக் கணவரும் பிரணவனின் அன்புத் தந்தையும் வாகீசனின் சகோதரரும் சிவானந்தன், நிர்மலா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் லட்சுமி காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் தங்கம் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2017) செவ்வாய்க் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குமரகோட்டம், கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

### திருமதி மனோன்மணி சிவராசா



**பிறப்பு** 1939.09.29 **இறப்பு** 2017.05.22

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சிவராசா (22.05.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - கண்ணகை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற அப்பாத்துரை சிவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் அற்புதசிங்கம் மற்றும் யோகேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் சகோதரியும் அருள் மோகன், கௌரி, ரேணுகா, சசிதரன், ரஜினி, வாஜினி, ரமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் கல்யாணி, விஜேந்திரன், பூபாலசிங்கம், அமுதமலர், ரவிசந்திரன், பரந்தாமன், தீபா ஆகியோரின் மாமியும் நிவேதன், நவீனன், அஜந்தன், சயந்தன், சயந்தினி, கஜந்தினி, நிஷாந்தினி, நிதூஷன், நிலாஜினி, அக்ஷயா, சாரீரன், சாருகா, துஷிக்கா, அகல்யன், அனித்தா, அனந்திகா, விதுஷா, றுக்ஷா, கயரூபன், தர்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும் சாய்ஹேஷனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2017) செவ்வாய்க் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி, நாவற்குழி.**

**தகவல்: குடும்பத்தினர்**

# தேனீக்கள்

## சூரியனின் திசை காட்டலுள் பயணப்படும் தனித்துவங்கள்

சுறுசுறுப்புமற்றும்நேரத்தைக்கடைப்பிடிப்பதில்தேனீக்கள் சிறப்புத்தன்மை வாய்ந்தவை. அண்மையில் ஆக்லாண்டு, ஜேர்மன்,நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த புலனறிவு ஆராய்ச்சியாளர்கள் மூன்று மணத்தியாலங்களுக்கு ஒருமுறை ஐசோபுளூரன் மயக்கமருந்து கொடுத்து தேனீக்களை ஆராய்ந்தார்கள். மனிதனின் அறுவைச் சிகிச்சைக்கும்இந்த மயக்க மருந்தே பயன்படுத்தப்படுகிறது. சரியான நேரத்திற்கு தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வதற்கு எம்மில் சிலரால் மட்டும் எப்படி முடிகிறது என்ற கேள்விகளுக்கு விடையாக எமது மூளையில் அந்த குறிப்பிட்ட நேரத்தில் என்சைம் சுரந்து எழுப்பிவிடுவதான காரணங்களை சொல்லிவிடுகிறார்கள். இந்த என்சைம் சுரப்பதற்கான அழைப்பாணை மரபணுவில் பதியப்படுகிறது. உண்மையில் இது நேர உணர்திறன் பற்றியதான மரபியல் ஆய்வே. ஏனைய விலங்குகளை (குரங்கு, எலி ) விடவும்தேனீக்களுக்கு நேர உணர்திறன் (Timing Sense) அதிகம் என்பதால் தேனீக்களை இந்த ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார்கள். தேனீக்களுக்கு நுண்ணிய ரான்ஸ்மிற்றர் பொருத்தப்பட்டு மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருதடவை மேற்சொன்னதான மயக்க மருந்து கொடுக்கப்பட்டதுடன் சிலபல தூரங்களில் விட்டும், அவற்றின் கூட்டிலேயே விட்டும் பலவித நடைமுறைகளின் கீழாக ஆய்வினை மேற்கொண்டனர்.

இப்படித் தொடர்ந்தும் சீரான இடை வெளியில் மயக்க மருந்து கொடுக்கப்பட்டதான தேனீக்கள் நேரம் தவறின. தாங்கள் கூடு இருந்த இடத்தை மறந்தன. அவற்றின் செயற்பாடுகளில் அந்த மூன்று மணத்தியால வித்தியாசம் இருந்தது. அவற்றின் மரபணுவான எம்.ஆர்.என்.ஏ (MRNA) மூலக்கூறுகளின் செல்களில் இந்த வேதிவினை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தேனீக்களின் சிறப்பியல்புகள்**

சுறுசுறுப்பு மற்றும் கட்டுக்கோப்புக்கு பெயர் பெற்றவையாக தேனீக்கள் விளங்குகின்றன. அதுபோலவே சரியான பூக்களில் தேன் சேகரிப்பதற்கு குறித்த நேர வெளியைக் கடைப்பிடிப்பதுடன் தன் இருப்பிடத்தை வந்தடைகிறது. சூரியனே இவற்றின் திசைகாட்டியெனச் சொல்லப்படுகிறது. 35 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பான தொன்மையை தேனீக்கள் கொண்டுள்ளன. பெரும்பாலான தேனடைகளில் ஒரே ஒரு ராணித் தேனீ மட்டுமே இருக் கும். ஆண் பூச்சிகள் எப்போதுமே சோம்பேறிகள். அவற்றிற்கு கொடுக்குகள் கிடையாது. அவை தேன் சேகரிப்பதற்கு வெளியில் எங்கும் செல்வதும் இல்லை. ராணித் தேனியுடன் உறு வேலையாகச் சொல்லப்படுகிறது.

ராணித் தேனீக்கள் அளவில் பெரியவை. நன்கு வளர்ந்தவுடன் கூட்டை விட்டு ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் தன்மை கொண்டவை. தொடர்ந்து செல்லும் 10 தொடக்கம் 20 ஆண் தேனீக்களுடன் இது அந்தரத்தில் இணைசேர்கிறது. அதன் பின்பு இறகு பிய்ந்த ஆண் தேனீக்கள் இறந்து விடுகின்றன. ராணித் தேனீக்கள் அதன்பிறகாக ஒருபோதும் உறவு கொள்வதில்லை. தக்க வைத்துக்கொண்ட ஸ்பேர்ம்களை வைத்துக்கொண்டே தினமும் ஆயிரத்து 500 தொடக்கம் 3 ஆயிரம் வரையான முட்டைகளை இடுகிறது. அவற்றின் வேலை முட்டை இட்டு கொண்டிருப்பதே. வயதான பின் முட்டையிடுவதை நிறுத்திவிடுகின்றன. ஒரு கூட்டில் பெரும்பாலும் ஒரு ராணித் தேனீயே இருக்கும். அதற்கு மேல் இருந்தால் அவை ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொள்வதுடன் இறந்தும் விடுகின்றன. ஒரேயொரு ராணித் தேனீ மட்டுமே உயிருடன் இருக்கும்.

**ராணித் தேனீக்களின் உருவாக்கம்**

லார்வா எனப்படும் புழுப்பருவத்தில் அது உண்ணும் ஊட்டசத்து மிக்க ஒரு வகை நொதிப்பொருளினால் அதன் உடலில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகராணித்தேனீக்கள் உருவாகின்றன. அந்த நொதிப்பொருளுக்கு (Target of Rapamycin) றாப்பாமைசின்அடைவிஎன்று பெயர் குறிப்பிடப்படுகின்றது.

நல்லஆரோக்கியமான கூட்டில் 80 ஆயிரம் தொடக்கம்ஒருலட்சம் வரையிலான தேனீக்கள்இருக்கும். அவற்றில் நிர்வாகக்கோளாறோ, குளறு படிகளோ ஏற்படுவதில்லை. தேன்கூடுகள் பெண்களின் ராஜ்ஜியம் எனப்படுகிறது.

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள வொக்ஸ்வகன் (GOLF) டீசல்கார், (1980 Model) ஆட்டோ (2Stroke GP....), Scooty pep+ என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 991 2304

**டோசர் மூலம் வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

ஒப்பந்தம் மற்றும் மணித்தியால அடிப்படையில் காணிகள் துப்புரவு செய்தல் குளவேலைகள் என்பன குறிப்பிடும் காலப்பகுதியில் செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு - 077 4021 748**
**077 6144 231**

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1365
சீட்டிழுப்பு திகதி 2017.05.22
வெற்றி இலக்கங்கள்
29 31 37 44 O
ரூ. 12,049,772/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் கிருஸ்ணஷாமி



பிறப்பு 19.06.1954 இறப்பு 21.05.2017

சாவகச்சேரி, சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, இல.72, சூசைப்பிள்ளையார் குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கிருஸ்ணஷாமி அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் சரஸ்வதி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற பூதத்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணியின் பாசமிகு கணவரும் சுரேகா, ஜானு, கபில் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மணிவதனனின் (காந்தி) ஆசைமிகு மாமனும் ராஜலக்சுமி (வவுனியா), காலஞ்சென்ற பாக்கியலக்சுமி, சண்முகலிங்கம் (கிளிநொச்சி), கந்தசாமி (சாவகச்சேரி), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), வசந்தாதேவி (UK), சுந்தரமூர்த்தி (இந்தியா), விஜயகுமார் (UK), விஜயகுமாரி (சாவகச்சேரி), விஜயபாலன் (டென்மார்க்), விஜயகாந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இரத்தினம் லீலாவதியின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2017) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சூசைப்பிள்ளையார் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**வவுனியா.**

**078 888 2745, 078 688 9845**

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 653
சீட்டிழுப்பு திகதி 22.05.2017 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
24 32 35 70 A
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 46, 101,240/=
பச்சை நிற டிக்கட்டுக்கள் 25.05.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2880 திகதி: 22.05.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
33 52 63 67 W
போனஸ் இல. 57
புதன்கிழமை ஜக்பொட்
ரூ.62, 385, 377/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பதன்.
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.05.24 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**தேவை**

அரைக்கும் ஆலைக்கு பழகவிரும்புபவர், உதவியாளர், பில்கிளாக், பொதியிடல், சமையல் என்பவற்றுக்கு பெண்கள் தேவை.

தொடர்பு - 077 991 2304

**அறை வாடகைக்கு உண்டு**

திருநெல்வேலியில் அறை வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 077 609 0837**

**காணி தேவை**

கோப்பாய், இராஜவீதி, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு பகுதிகளில் 2-5, 10-20 பரப்பு அளவுகளில் காணி தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும். (நல்ல சுற்றாடல் அவசியம்)

**075 850 1055**

## வழிநடத்தல்...

புதிய அரசமைப்புத் தொடர்பில் வழிநடத்தல் குழுவில் விரிவாக ஆராயப்பட்டு கட்சிகள் இணங்கிக்கொண்ட விடயங்களை உள்ளடக்கிய இடைக்கால அறிக்கை ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. இந்த அறிக்கை இரு வாரங்களுக்கு முன்னர் சகல கட்சிகளுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கை தொடர்பில் கட்சிகள் தமது நிலைப்பாட்டை இன்றைய அமர்வில் தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஏற்கனவே இணங்கிக்கொண்ட விடயங்களின் அடிப்படையில் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தாலும், கட்சிகள் சில திருத்தங்களை இந்தக் கூட்டத் தொடரில் முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மகிந்த அணியும் திருத்தங்களை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சியைக் குழப்பும் விதத்தில் அந்தக் கட்சிகள் தொடர்ந்தும் யோசனைகளை முன்வைத்து வந்தால், அதனை அப்படியே யோசனைகளாக இடைக்கால அறிக்கையில் சேர்த்துக்கொண்டு அதனை இறுதி செய்து நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்கிற கொள்கை ரீதியான முடிவு அரசுக்குள் எட்டப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. (உ-5)

## தவறான...

பதிவாளர் மருத் துவர் டெரன்ஸ் காமினி சில்வா தெரி வித்தார். அதிகப்படியான நூறு முறைப்பாடுகள் கடந்த வருடமே கிடைத்திருப்பதாகவும் அவர் குறிப் பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: மருத்துவர்களுக்கு எதிராக இலங்கை மருத்துவ சபைக்குச் செய்யப்படும் எந்தவொரு முறைப்பாடும் சத்தியக் கடதாசி வடிவத்திலேயே செய்யப்பட வேண்டும். அவ்வாறு வரும் முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு எடுக்கப்படும். சத்தியக் கடதாசி இன்றி வரும் முறைப்பாட்டுடன் தவறான சிகிச்சை பற்றிய பத்திரிகைச் செய்திகளை இணைத்துக்கொள்ளும் உரிமை மருத்துவ சபையின் பதிவாளர் அலுவலகத்தையே சாரும்.

நீதிமன்றங்களைப் போலவே மருத்துவச் சபையிலும் விசாரணைகளில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடிவதில்லை. முறைப்பாட்டாளர்கள் சார்பிலும் குற்றஞ்சாட்டப்பட்ட மருத்துவர்களின் சார்பிலும் மருத்துவ சபையில் முற்படும் சட்டத்தரணிகள் சரியான ஒத்துழைப்பை வழங்காமையே இந்தத் தாமதத்துக்கான முக்கிய காரணமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (உ-5)

## பளை...

கிளிநொச்சிப் பளைப் பிரதேசத்தில் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் வாகனத்தை நோக்கி கடந்த 19ஆம் திகதி அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பதுங்கியிருந்து நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த ஐந்து பொலிஸ் குழுக்கள், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் உத்தரவுக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடுப்புப் பிரிவு, குற்ற விசாரணைப் பிரிவு, பொலிஸ் சிறப்பு பிரிவு, பளை பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் உள்ளிட்ட ஐந்து பொலிஸ் குழுக்களே விசாரணையை முடுக்கி விட்டுள்ளன. (உ-5)

## மூதாட்டியை...

பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் தனித்திருந்த மூதாட்டியை அச்சுறுத்தி ஓரிடத்தில் இருத்திவிட்டுச் சில மணித்தியாலங்களாகக் கொள்ளையர் தேடுதல் நடத்தி 15 பவுண் நகைகள், 10 ஆயிரம் ரூபா பணம், உண்டியலில் காணப்பட்ட ஒரு தொகைப் பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

உடுவில், டச்சு வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

ஓடு பிரித்து உள்ளே இறங்கிய கொள்ளையர்கள் 5 பேர் மின் விளக்குகளை அணைத்து விட்டு தாம் கொண்டு சென்ற ரோச் லைற் உதவியுடன் அறைகளிலும் அலுமாரிகளிலும் தேடுதல் நடத்தி நகைகளையும் பணத்தையும் எடுத்துச் சென்றனர்.

குறித்த வீட்[illegible] உள்ள ஏனையவர்கள் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது. நேற்றுக் காலை கொள்ளை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. அங்கு விசாரணை நடத்தப்பட்டது. எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## பல்கலை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப் பீட மாணவர்களுக்கு இடையில் நேற்றுச் சிறு மோதல் ஏற்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்குள் வேட்டியுடனேயே வர வேண்டும் என மூத்த மாணவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அதன்படி முதலாம் வருட மாண வர்களும் வேட்டியுடன் பல்கலைக் கழகத்துக்குள் வருகை தந்துள்ளனர்.

புதுமுக மாணவர்களுக்கு மூன்றாம் வருட மாணவர்கள் திருநீறு, சந்தனம் பூச ஆயத்தமாகினர். அதற்கிடையில் இரண்டாம் வருட மாணவர்கள் முதலாம் வருட மாணவர்களுக்கு திருநீறு, சந்தனத்தைப் பூசிவிட்டனர். இதனால் ஆத்திரமடைந்த மூன்றாம் வருட மாணவர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

இதன் பின்னர் இரண்டாம் வருட மாணவர்களுக்கான ஆங்கில விரிவுரை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வகுப்புக்குள் சென்ற மூன்றாம் வருட மாணவர்கள் சிலர் விரிவுரையில் இருந்த இரண்டாம் வருட மாணவர்களை சரமாரியாகத் தாக்கினர் என்று கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் இரண்டாம் வருட மாணவர்கள் ஐந்து பேர் சிறு காயங்களுக்குள்ளகினர். கபிலன் என்ற மாணவனுக்கு பொய் மூக்கு உடைந்ததுடன் முகத்திலும் சிறு காயம் ஏற்பட்டது. இதனால் குறித்த மாணவன் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

"பகிடிவதை காரணமாக மோதல் ஏற்பட்டது என எனக்கு தகவல் வழங்கப்பட்டது. அதன்படி ஆரம்ப விசாரணைகளை நடத்திய பின்னர் மூன்று மாணவர்களுக்கு யாழ்ப்பான பல்கலைக்கழக வளாகத்துக்குள் உள்நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இடம்பெற்ற மோதல் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன. விசாரணைகளின் பின்னரே மேலதிக தகவல்களை வழங்க முடியும்" - என்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அ.விக்னேஸ்வரன். (உ-8)

## அனுமதி பெறாத...

சி.தவராசா இந்தப் பிரேரணையை முன்வைக்கவுள்ளார்.

நாவற்குழிப் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 14ஆம் திகதி நடப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாகவிருந்தது. அவ்வாறான கட்டடமொன்றை நிர்ணயிப்பதற் கான கட்டட வரைபட அனுமதி.உள்ளூராட்சி சபையிடமிருந்து பெற்றிருத்தல்வேண்டும்.

இந்த விகாரை அமைக்கப்படவிருக்கும் பகுதி நகர அபிவிருத்தி சபையின் பிரகனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் அமையாததால் உள்ளூராட்சி சபையின் முன்னனுமதி பெற்றே அவ்வாறான கட்டடத்தை அமைக்க முடியும். அவ்வாறாக சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி பெறப்படவில்லையென அறிகின்றேன். வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையிலும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையிலும் இவ்வாறான கட்டடங்கள் உள்ளூராட்சிச் சபைகளின் விதிமுறைக்கு அமைய அனுமதி பெறப்பட்டுக் கட்டப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

இவ்வாறு தனது பிரேரணையில் கோரவுள்ளார் தவராசா. (உ-8)

## நாவற்குழி...

என்று, பிரதேச சபை குறிப்பிட்டுள்ளது.

நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்துக்கு அண்மையாக விகாரை அமைக்கப்பட்டுள்ளது. விகாரைக்கான தாதுகோபம் அமைக்கும் பணி, இராணுவத்தினரால் அடிக்கல் நடப்பட்டு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது.

சாவகச்சேரி [illegible] பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இந்த விகாரை அமைந்துள்ளது. பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல், சட்டவிரோதமாக கட்டடம் அமைக்க முற்பட்டமையினால், இந்த நடவடிக்கைகளை உடனடியாக இடை நிறுத்துமாறு சாவகச்சேரி பிரதேச சபை எழுத்துமூலமான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, தென்மராட்சி பிரதேச செயலகத்தின் அனுமதி பெறப்பட்டே நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுவது தொடர்பில் பிரதேச செயலகத்திடம் கேட்டபோது, கட்டட நிர்மாணத்துக்குரிய காணி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமானது. நாம் இதற்கு அனுமதி வழங்க முடியாது என்று குறிப்பிட்டனர். (உ-5.9)

## மங்களவுக்கு...

அமைந்தது. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று மிக முக்கிய அமைச்சுக்களான நிதி மற்றும் அயலுறவுத்துறை அமைச்சுக்கள் பரஸ்பரம் கைமாறியுள்ளன.

அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை புதிய அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர். இதில் ஒன்பது அமைச்சர்கள் மற்றும் ஒரு இராஜாங்க அமைச்சர் அடங்குவர்.

அயலுறவுத்துறை அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். பதவியற்றிருந்த திலக் மாரப்பன மீண்டும் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவியேற்ற அமைச்சர்கள் மற்றும் அவர்களுக்கான பொறுப்புகள் பற்றிய விவரங்கள் வருமாறு,

மங்கள சமரவீர - நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர்

ரவி கருணாநாயக்க - அயலுறவுத்துறை அமைச்சர்

எஸ்.பி.திசநாயக்க - சமூக அபிவிருத்தி, நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமை அமைச்சர்

ஜோன் செனிவிரத்ன - தொழில், தொழிற் சங்க உறவுகள், மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர்

மகிந்த சமரசிங்க - துறைமுகங்கள், கப்பல் துறை அமைச்சர்

கயந்த கருணாதிலக - காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்

அர்ஜுன ரணதுங்க - பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

சந்திம வீரக்கொடி - திறன் விருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர்

திலக் மாரப்பன - அபிவிருத்தி ஏற்பாடுகள் அமைச்சர்

மகிந்த அமரவீர - மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.

மகிந்த அமரவீரவிடம் ஏற்கனவே உள்ள கடற்றொழில், கடல் வளங்கள் அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக மாகவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. (உ-5)

## அபிவிருத்திக்கான...

வைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் நிகழ்வில் அரச தலைவர் ஆற்றிய உரை குறித்துத் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புதிய எதிர்பார்ப்புக்களுடன் ஒரு நாடு என்ற ரீதியில் முன்னேறிச் செல்வதற்கு அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நட்புறவுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்காக கூட்டுப் பொறுப்பை நிறைவேற்ற ஒன்றிணைய வேண்டும். மனிதர்களை நல்லவர்களாக மாற்றுவதன் மூலமே சமூகத்தையும் நாட்டையும் மாற்ற முடியும் - என்றார். (உ-5)

## அமைச்சர்...

வேண்டாமென குறித்த முதலமைச்சர் தன்னிடம் கேட்டார் என்று மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும்

தேசிய கலந்துரையாடல், சகவாழ்வு மற்றும் அரசகருமமொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் நேற்றுத் தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் தெரிவித்திருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் [illegible] குழு உறுப்பின[illegible] மேல் மாகாண முதலமைச்சர், ஊடாகவே ஞானசார தேரர், அமைச்சர் மனோவிடம் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

"சட்டமானது நாட்டில் அனைவருக்கும் சமம். அது வீறுநடை போட்டால் மாத்திரமே ஜனநாயகம் கோலோச்சும். எனவே, சட்டத்தைக் கையிலெடுத்து செயற்பட எவருக்கும் அனுமதியளிக்க முடியாது. நாம் அமைதியாக இருப்போம். அகிம்சை வழி நடப்போம். அநீதியென வந்துவிட்டால் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்" என்றும் மனோகணேசன் குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## 9வருடங்கள்...

எதிராக சட்டமா அதிபரால் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க நிராகரித்தார்.

ஜப்பான் அரசால் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு தொட்டலங்க பாலத்துக்கு வெடிகுண்டு வைத்து தகர்க்கத் திட்டம் தீட்டினார் என்று முதல் குற்றச்சாட்டும், கடும் சேதம் விளைவிக்க கூடிய வெடிகுண்டுகளை உடைமையில் வைத்திருந்தார் என்று இரண்டாம் குற்றச்சாட்டும் ஜெயராம் இராமநாதனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.

இந்தக் குற்றசாட்டுக்களை நிரூபிக்க சட்டமா அதிபர் திணைக்களத்தால் அரசியல் கைதிக்கு எதிராக அவரால் சுயமாக வழங்கப்பட்டது என்று தெரிவித்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன. அரச தரப்புச் சாட்சியங்கள் நிறைவடைந்து, எதிரியின் வாக்குமூலம் மன்றினால் பெறப்பட்டது.

எதிரி சார்பில் மூத்த சட்டத்தரணி கே.வி தவராசா முன்னிலையானார்.

"எதிரியை 2008ஆம் ஆண்டு புறக்கோட்டைப் பொலிஸார் கைது செய்து கடுமையாகத் தாக்கியிருந்தனர். பின்னர் அவரை இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையின் போது எதிரி மீது இரகசிய பொலிஸாரும் கடுமையாக தாக்கினார்கள். மேலதிக விசாரணைக்காக அவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் இரகசியப் பொலிஸார் ஒப்படைத்தனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரும் எதிரியைக் கடுமையாக தாக்கியே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றுள்ளனர்.

பொலிஸாரின் சித்திரவதையால் எதிரிக்கு 9 காயங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைச் சட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது" என்று மூத்த சட்டத்தரணி கே.வி.தவராசா மன்றில் எடுத்துரைத்தார்.

மேலும் அரச சாட்சிகளின் பிரகாரம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லை என்பதனையும் குறுக்கு விசாரணையில் எதிரி தரப்பால் நிரூபிக்கப்பட்டது.

இவற்றை ஆராய்ந்த கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க, குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடமிருந்து சுயமாகப் பெறப்படவில்லை என்று அறிவித்தார். எனவே வழக்குத் தொடுனரால் எதிரிக்கு எதிராக வழக்கின் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மன்று நிராகரிப்பதாக மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் எதிரிக்கு எதிராக வேறு சான்றுகளை இல்லை என்று அரச சட்டத்தரணி மன்றில் அறிவித்தார். இந்த நிலையில் அரசியல் கைதிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து அவரை விடுவிப்பதாக கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. (வ-5)

## வீடு வீடாக...

விண்ணப்பப் படிவங்கள் (பிசி படிவம்) வீடு வீடாக வழங்கப்படுகின்றன என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரையில் இது தொடரும்.

கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணி ஒரு மாதத்திற்குத் தொடரும். கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று பிசிப் படிவங்களை விநியோகித்து வருகின்றனர்.

வீடு வீடாக விநியோகிக்கப்பட்ட பிசிப் படிவங்களை மீளப்பெறும் நடவடிக்கை அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகும். ஜூலை மாதம் 29ஆம் திகதி வரையில் அந்தச் செயற்பாடு தொடரும்.

வழமை போன்று ஜூன் முதலாம் திகதி வாக்காளர் தினமாக தேர்தல்கள் திணைக்களத்தினால் கொண்டாடப்படவுள்ளது. (உ-5)



யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான சீருடைகள் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தினால் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-108)

## வடமாகாண வலைப்பந்தாட்டம்; 20 வயது பெண்கள் முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 23
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளன.

திருக்குடும்ப கன்னியர்மட அணி காலிறுதியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியை 32:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி தனது அரையிறுதியில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை 25:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி தனது காலிறுதியில் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அணியை 22:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி தனது காலிறுதியில் ஐயன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை 31:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது. அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. (ம-23-422)

## துடுப்பாட்டம்

கரணவாய், மே 23
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுக்களில் 20 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான துடுப்பாட்டம் நாளை முதல் மூன்று தினங்கள் வரை இடம்பெறவுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானங்களில் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. (ம-108-422)

# சிறந்த வீராங்கனையாக வடக்கின் ஆசிகா தெரிவு



யாழ்ப்பாணம், மே 23
இளநிலைப் பிரிவில் இலங்கையின் சிறந்த வீராங்கனையாக வடமாகாணத்தின் வி.ஆசிகா தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கையின் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இளநிலைப் பிரிவில் சிறந்த வீராங்கனையாக வி.ஆசிகா தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

மலேசியாவில் கடந்த வருடம் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கலில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த ஆசிகா 58 கிலோ எடைப்பிரிவில் 136 கிலோ பளுவைத்தூக்கி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியிருந்தார். இதுவே இவருக்கு இந்தக் கௌரவம் கிடைக்க முக்கிய காரணமாக அமைந்தது. கடந்த ஆண்டு வடமாகாண விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட வர்ண இரவு நிகழ்வில் வடக்கின் வர்ண விருதை வென்றிருந்தார். யாழ்ப்பாண மாவட்ட பளுதூக்கல் சங்கம் தனது கழகங்களுக்கு இடையில் நடத்திய போட்டி சில தினங்களுக்கு முன்னர் முடிவடைந்தது. இதில் கலந்துகொண்டு சிறந்த வீராங்கனையாகவும் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)



வடமாகாண வலைப்பந்தாட்டம்

## 16 வயது பெண்கள் பிரிவு காலிறுதியாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், மே 23
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் 16 வயது பெண்கள் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றன. இதன் முடிவுகள் வருமாறு.

நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வடஇந்து மகளிர் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றன.

நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அணி காலிறுதியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை 16:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது.

வட இந்து மகளிர் கல்லூரி அணி தனது காலிறுதியில் பாசையூர் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலய அணியை 16:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி தனது காலிறுதியில் ஆண்டான்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை 19:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி தனது காலிறுதி ஆட்டத்தில் இடைக்காடு [illegible] மகா வித்தியாலய அணியை 19:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது. அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. (ம-422-23)

## பாகிஸ்தான் அணிக்கு மிகக்கடும் பயிற்சி

மினி உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணிக்கு மிகவும் கடுமையான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

எஜ்பஸ்டனில் முகாமிட்டுள்ளது பாகிஸ்தான். அந்த அணிக்கு உடற்பயிற்சி உள்ளிட்ட கடும் பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இன்மாம் உல் ஹக், "பாகிஸ்தான் அணி உலகக்கிண்ணம் வெல்வதற்காகவே அங்கு சென்றுள்ளது. பங்கெடுப்பதற்காக அல்ல" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மினி உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான்- இந்தியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)

## சூதாட்டம்?

ஐ.பி.எல். இறுதியாட்டத்தில் எந்த அணி வெற்றிபெறும் என்று சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 9 பேரை டெல்லியில் பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் முடிவைக் கணித்தனரா அல்லது முடிவை மாற்றும் வகையில் சூதாடினரா என்பது தொடர்பில் விசாரணை நடைபெறுகிறது. (ம)



வடமாகாண வலைப்பந்தாட்டம்

## 18 வயது பெண்கள் பிரிவு அரையிறுதியில் எவரெவர்?

யாழ்ப்பாணம், மே 23
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 18 வயது பெண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி ஆகியன தெரிவாகின.

இன்று நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எ[illegible] பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அ[illegible] இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (ம-422)




# லா லிகா தொடரில் ரியல் மட்ரிட் மகுடம்

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் அணி கிண்ணம் வென்றது. 20 அணிகள் இந்தத் தொடரில் விளையாடு கின்றன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா இரு முறை மோதவேண்டும் புள்ளிப்பட்டியலில் எந்த அணி முதலிடம் பிடிக்கிறதோ அந்த அணியே சம்பியன்.ரியல் மட்ரிட் அணி 37 ஆட்டங்களில் விளையாடி 28 வெற்றிகள், 3 தோல்விகள், 6 சமநிலைகள் என மொத்தம் 90 புள்ளிகளுடன் இருந்தது. பார்சிலோனா அணி 37 ஆட்டங்களில் 27 வெற்றிகள், 4 தோல்விகள், 6 சமநிலைகள் என 87 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் இருந்தது.ரியல் மட்ரிட் அணி தனது இறுதி லீக் ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு மலாகாவை எதிர் கொண்டது. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் மட்ரிட்டின் கோலைப் பதிவு செய்தார் ரொனால்டோ. ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடனேயே முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியின் 55 ஆவது நிமிடத்தில் பென்சிமா மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது. இந்த வெற் றியை அடுத்துபுள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்து பழமையான லா லிகா தொடரில் கிண்ணம் வென்றது ரியல் மட்ரிட் அணி. (ம)

## சென். லூசியா சம்பியன்

யாழ்ப்பாணம், மே 23
கிளிநொச்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் அக்கினிச் சிறகுகள் அமைப்பால் நடத்தப்பட்ட தொடரில் மன்னார் பள்ளிமுனை சென். லூசியா அணி கிண்ணம் வென்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மன்னார் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் சென். லூசியாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ரொபேட். றோயல் அணியின் வீரர் ஒருவர் விதிகளை மீறியமைக்காக சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டார். இது றோயலுக்கு பின்னடைவைக் கொடுத்தது. 1:0 என்று லூசியாவின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 8 ஆவது நிமிடத்தில் றோயலின் கோலைப் பதிவுசெய்தார் கோபன். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 கோலைப் பெற்றிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். லூசியா. ஆட்டநாயகனாகவும், தொடராட்ட நாயகனாயகனாகவும் ரொபேட் தெரிவானார். (ம-108)

## நாணயச்சுழற்சி மூலம் யங்ஹென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மே 23
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள், மேலதிக வாய்ப்புக்கள் என்று அத்தனையும் சமநிலையில் முடிவடைந்ததால் நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இளவாலை யங்ஹென்றிஸ் அணி.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளும் சமநிலையில் முடிவடைந்ததால் நாணயச் சுழற்சியின் மூலம் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

சிறந்த கோல்காப்பாளராக ஞானமுருகனின் சைந்தன், தொடராட்ட நாயகனாக அதே அணியின் ஜெகன், அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரராக தீபன் ஆகியோர் தெரிவாகினர். (ம-108-23)

## விண்மீன் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 23
பருத்தித்துறை ஐக்கியத்தின் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி கிண்ணம் வென்றது.
ஐக்கியத்தின் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணி மோதியது.
ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணியின் முதல் கோல் பதிவானது. அடுத்த சில நிமிடங்களில் விண்மீன் அணியின் கோல் பதிவானது. முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றிருந்தன.
இரண்டாம் பாதியின் பெரும்பாலான நேரங்கள் வரை 1:1 என்ற நிலையே நீடித்தது. ஆட்டம் முடிவடைய 4 நிமிடங்கள் இருக்கும் போது யூட்கெனடி கோலொன்னைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது விண்மீன். (ம-108)

## கொக்குவில் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், மே 23
வை.எம்.சி.ஏ. நிறுவனம் யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து நடத்திய அணிக்கு மூன்று வீராங்கனைகள் பங்குபற்றும் கூடைப்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாண திருக்குடும்பக் கன்னியர்மட பாடசாலை அணி மோதியது. 11:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி. (ம-23)



## சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் அரியாலை மத்தியை தோற்கடித்தது

யாழ்ப்பாணம், மே 23
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்றது.
ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில்சென்றலைட்ஸ்அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி 38.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிலோன் 43 ஓட்டங்களையும், கிருபாகரன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அலன்ராஜ் 3 இலக்குகளையும், வதுசனன், மயூரன், ஜேம்ஸ் ஜான்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.



169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 8 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. நிரோசன் 41 ஓட்டங்களையும், அலன்ராஜ் 25 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)




# ஸ்கொட்லாந்திடம் இலங்கை தோல்வி

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான தயார்ப்படுத்தலாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்கொட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி மிகவும் மோசமான வகையில் படுதோல்வியடைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி 49.5 பந்துப்பரிமாற்றங்களில் 287 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சந்திமல் 79 ஓட்டங்களையும், கப்புக்கெதர 71 ஓட்டங்களையும், குசல் பெரேரா 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் எர்வின், வைட்டிங்காம் இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணிக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்களே மிகச் சிறந்த தொடக்கத்தை வழங்கினர். இருவரும் சதம் கடந்தனர். இலங்கையின் பந்துவீச்சு வரிசையால் ஒன்றும் செய்ய இயலவில்லை. 201 ஓட்டங்கள் இணைப் பாட்டமாகப் பகிரப்பட்ட பின்னரேயே 118 ஓட்டங்களுடன் கோட்சர் ஆட்டமிழந்தார். சக ஆரம்ப வீரர் குருஸ் தொடர்ந்தும் நிலைத்து நின்றார். சில இலக்குச் சரிவுகள் இருந்தாலும் 43 பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகளை இழந்து 7 இலக்குகளால் வென்றது ஸ்கொட்லாந்து.

(ம)

**முகாமைத்துவ உதவியாளர்**

**விசேட இறுதிக் கருத்தரங்கு**

காலம்
26.05.2017, 27.05.2017
வெள்ளி, சனி
9.00 - 4.00 P.M

**விரிவுரையாளர்கள்**
★ P. உமாசங்கர்
★ P. கமல்தாசன்

அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்.
T.P. 077 469 6695

## இங்கிலாந்து அணிக்கு வில்லியர்ஸ் புகழாரம்

"மினி உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணியை எந்த அணியும் குறைத்து மதிப்பிடக்கூடாது. அந்த அணி மிகச் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தும்" இவ்வாறு தெரிவித்தார் தென்னாபிரிக்க அணித்தலைவர் வில்லியர்ஸ்.

இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி மினி உலகக்கிண்ணத் தொடர் நடைபெற இருக்கிறது. இந்தத் தொடரில் கலந்துகொள்வதற்காக தென்னாபிரிக்க அணி இங்கிலாந்து சென்றுள்ளது. முன்னாயத்தமாக இங்கிலாந்து - தென்னாபிரிக்கா இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் நாளை ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் குறித்தும், மினி உலகக் கிண்ணத் தொடர் குறித்தும் கருத்துத் தெரிவிக்கையிலேயே வில்லியர்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"மினி உலகக்கிண்ணத்தை வெல்லும் என்று எதிர்பார்க்கப்படும் அணிகளில் இங்கிலாந்துக்கும் இடமுண்டு. எனவே இங்கிலாந்து அணியை குறைவாக எடைபோட வேண்டாம். மினி உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னோட்டம் எனக்கருதப்படும் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றுவது எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து ஒருநாள் அணி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் எங்களுக்கு எதிரான தொடரை 2:3 என்று இழந்த பிறகு, 6 ஒருநாள் தொடர்களில் ஐந்தில் வென்றுள்ளது. இது அந்த அணி மிக வலுவாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது" என வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)



**வேலையாள் தேவை**

யாழ். வேலணை சாட்டியில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல், விடுதிக்கு அனுபவம் மிக்க சமையல் ஆள் தேவை. அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்புகளுக்கு - 077 343 8373

**Sb Travels & Tours pvt Ltd.**

**இங்கு சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.**

இந்தியாவிற்கான விமான பயணசீட்டுக்களை சென்னை Srilankan Airlines 27,999/= Air India 29,000/= இற்கும் மதுரை Srilankan Airlines 30,500/= திருச்சி Srilankan Airlines 31,800/= (30th June before) அத்துடன் வீசா விண்ணப்பப்படிவமும் நிரப்பித்தரப்படும். மற்றும் மலேசியா, பாங்கொங், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களையும் செய்து தரப்படும்.

ஐரோப்பிய நாடுகளுக்குமான வீசா ஆலோசனைகளும் விசேட விலைக்கழிவுகளும் வழங்கப்படுகின்றன. (பிரயாணக் காப்புறுதி, திகதி மாற்றம், சுற்றுலா ஒழுங்கமைப்புக்கள், ஹோட்டல் முன்னேற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்)

BUDJECT AIRLINES SPICEJET, AIR ASIA, FLY DUBAI, AIR ARABIA ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணங்களில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்.

**Sb Travels and Tours No. 212, Kasthuriyar Road, Jaffna.**
**021 222 9555, 222 8555/ 076 6911080/83**
Branch No. 166, Temple Road, Nallur, Jaffna. 021 222 7666, 076 691 1081/82 அத்துடன் இங்கு AIR TICKETTING ACADEMY வகுப்புக்களும் 2 மாத பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு. 021 222 7111, 222 7666
Sb Travels and Tours,
No. 216, Kasthuriyar Road, Jaffna.

**சிற்றூழியர் தேவை**


உதயன் நெல்லியடிக் கிளையில்
பணியாற்றுவதற்கு சிற்றூழியர் தேவை.
வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்.
இன்று 23.05.2017 மு.ப 10 மணிக்கு நேரில்
சமுகமளிக்கவும்
**நெல்லியடி அலுவலகம்**
**இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.**

**வேலைவாய்ப்பு**

நாடளாவிய ரீதியில் இயங்கிவரும் எமது **Everest** நிறுவனமானது இலங்கையின் வடபகுதியில் பல கிளைகளை வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் நிறுவ உள்ளது. எனவே அலுவலகத்திற்கு தேவையான மேற்பார்வையாளர்கள், உதவி முகாமையாளர்கள், முகாமையாளர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

**தொடர்புகளுக்கு -077 077 1377**

## அனைத்துக்கால அணிக்கு டோனி தலைவர்




பிரபல கிரிக்கெட் இணையத்தளம் ஒன்று, அனைத்துக்கால சிறந்த ஐ.பி.எல். அணியை அறிவித்துள்ளது. இந்த அணிக்கு டோனி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேநேரம் வில்லியர்ஸுக்கு இடம் கொடுக்கவில்லை.

அனைத்துகால அணி விவரம்- டோனி (தலைவர், இலக்குக்காப்பாளர்), கிறிஸ் கெய்ல், விரேந்திர சேவாக், விராட் கோக்லி, ரெய்னா, ரோகித் சர்மா, வெயின் பிராவோ, சுனில் நரைன், அஸ்வின், புவனேஸ்வர் குமார், மலிங்க.

6 துடுப்பாட்ட வீரர்கள், ஒரு சகலதுறை வீரர், 4 பந்து வீச்சாளர்கள் என்ற முறையில் இந்த அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மொத்தம் இந்த அணிக்காக 31 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர், இதில் 14 அயல்நாட்டு வீரர்கள் அடங்குவர். இந்த 14 அயல்நாட்டு வீரர்களில் 4 பேரை குழுவினர் தேர்வு செய்துள்ளனர்.

"பல்வேறு காரணங்களினால் இந்த அணியை டோனிதான் வழி நடத்த வேண்டும் என்று பெரிய அளவில் ஆதரவு இருந்தது. 9 சீசன்களில் வெற்றிகரமான தலைவராக டோனி திகழ்ந்திருக்கிறார் என்பதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று அந்த இணையத்தளம் குறிப்பிட்டது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.